


கல்கி
KALKI 13.9.92 ரூ. 3.00
சினிமாவில்
பயங்கரவாதம்!




பள்ளித் தேர்வுகள் இத்தனை கடினமாக இருக்கும் என நினைத்தும் பார்த்திருக்க மாட்டீர்கள். விஞ்ஞானத்திலும், கணக்கிலும் நல்ல மதிப்பெண் பெற உங்கள் குழந்தை மிக கஷ்டப்பட்டு படிக்க வேண்டும்.

அவனுக்குத் தேவை முட்டை. முட்டையிலே ஃபாஸ்ஃபரஸ் செறிந்துள்ளது. இது உங்கள் குழந்தையை சுறுசுறுப்பாக சிந்திக்க வைக்கும். அவன் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புரதச் சத்தும் இதிலே நிறைந்துள்ளது.



எக்ஸ்க்விசிட் எக்: அத்துடன் 30-க்கும் மேலான சமையல் குறிப்புப் புத்தகம் இலவசமாகப் பெற எழுதவும்: என் ஈ சி சி E-13/14, ... S. No. 559/AB ... புனே-411 037.

ஆரோக்கியமான இரத்தத்திற்குத் தேவையான இரும்புச்சத்து நிறைந்துள்ளது. உங்கள் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்ப்பதற்கு வைட்டமின் 'ஏ', நல்ல ஜீரண சக்திக்கு வைட்டமின் 'பி' குரூப், வலுவான எலும்புகளுக்கு வைட்டமின் 'டி' ஆகியவை அடங்கியுள்ளது.

நித்தம் ஒரு முட்டை. நினைவில் நிற்கும் உணவு.

**எந்த நாளும் சிறந்தது.**
**முட்டை உண்ண உகந்தது.**

NECC

நேஷனல் எக்
கோ-ஆர்டினேஷன் கமிட்டி

Enterprise/NECC/135/92 Tm


# நூதனப் போராட்டங்கள்!

போராட்டம் என்றாலே, உண்ணா விரதம், சாலை மறியல், சிறை நிரப்புதல் தானா?. நூதனமாய்ச் சிலர் போராடுகிறார்கள். கர்நாடகத்தில் சிரிப்புப் போராட்டம் நடந்தது. தமிழகத்தில் அழுகைப் போராட்டம். இங்கே மேலும் சில யோசனைகள் தரப்படுகின்றன.

படம் : அரஸ், கருத்து : ஜூலி

"சாம்பாரில் கத்தரிக்காய் முழுக முழுசா இருக்குதே என்னு பார்க்கறீங்களா? நாங்கள் போராட்டத்தில் இருக்கோம்! காய்கறி நறுக்க மாட்டோம்!"

"நல்லகாலம்! பூசணிக்காய்ச் சாம்பார் வைக்காமப் போனீங்களே!"





"சினிமா ஆபரேட்டருங்க ஸ்டிரைக்காம்."

"அதனால?"

"இளைமாக்ஸை மட்டும் காட்ட மாட்டாங்களாம்!"

"அதானே பார்த்தேன், நல்ல படமாயிருக்கேன்னு..."

"என்ன அநியாயம்! ஒரே நாள்ல நூறு பஸ் விபத்து! மொத்தம் 4000 பேர் செத்துப் போயிருக்காங்க!"

"விஷயம் தெரியாதா? பத்திரிகைக்காரங்க எல்லாரும் நூதனப் போராட்டம் நடத்தறாங்க. ஒரே நியூஸைத்தான் 100 இடத்திலே போட்டிருக்காங்க. செத்தது 40 பேர்தான். ஒரே ஒரு பஸ் விபத்துத்தான்!"






"என்ன இது... ரயில்ல வந்து இறங்காம மூட்டை முடிச்சோடு நடந்து வரீங்க?"

"ஸ்டேஷனை விட்டு அரை கிலோ மீட்டர் தள்ளி நிறுத்திட்டான்! கேட்டா ரயில்வே ஸ்டிரைக்காம்! ரொம்ப பேஜாராயிடுச்சு!"

"அட, டீ. வி.யிலே நேத்து மூணு புரோகிராம் நல்லாவே இருந்துச்சு..."

"ஓ! டீ. வி.காரங்க ஏதாவது புதுமையான போராட்டம் நடத்தி, மக்கள் கவனத்தைக் கவரணும்னு தீர்மானிச்சுட்டாங்க போல..."





● மலையேறிச் சென்று...

# சித்த வைத்தியம் அமெரிக்கா செல்கிறது!



● டாக்டர் சவுரிராஜன்

ராஜபாளையம் தாண்டி, வத்ராயிருப்பு வழியாக, சதுரகிரி மலைக்கு வந்தார்கள் அமெரிக்க டாக்டர்கள். எத்தனையோ வகையான மூலிகைச் செடிகளையும் மரங்களையும் பார்த்தார்கள்; பயன்களை அறிந்தார்கள்!

'**கா**யகல்பம்' என்றால் என்ன, அதிக நாள் உயிர் வாழ்வது எப்படி? என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்காக அமெரிக்க நாட்டிலுள்ள கலிபோர்னியாவிலிருந்து சமீபத்தில் ஐந்து டாக்டர்கள் சென்னை வந்திருந்தார்கள். வந்தவர்கள் பல மருத்துவர்களை இந்தியாவில் சந்தித்தார்கள். டில்லியிருந்து டாக்டர் சர்மா இந்த ஐவரையும் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்து, ''உங்கள் சந்தேகங்களைப் போக்கி, விளக்கம் தர இங்கே ஒரு சித்த மருத்துவர் இருக்கிறார். அவர் தரும் விளக்கங்கள் உங்களுக்குப் புதிய பல தகவல்களைச் சொல்லும்!'' என்று சொல்லி விட்டார்.

கலிபோர்னியாவிலிருந்து வந்த டாக்டர்கள், சித்த மருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளரும், சித்த மருத்துவத்தில் 32 நூல்கள் எழுதியவருமான டாக்டர் எம். சவுரிராஜனைச் சந்தித்தார்கள். இவர் மாநில அளவில் விருது பெற்றவர். ஜி.டி. நாயுடு நினைவுத் தங்கப் பதக்கமும் பெற்றவர்.

முதலில் மூன்று மருத்துவர்களும், பின்னர் இரண்டு பேருமாக வந்த இந்தக் குழுவுக்குச் சகல விளக்கங்களும் அளித்தார் டாக்டர் சவுரிராஜன். முதல் குழு எடுத்துச் சென்ற மூலிகை மருந்துகள் போக, இரண்டாம் குழுவில் வந்த டாக்டர் டோவி விட்நாவுக்காகச் சில வகை மருந்துகளைத் தயார் செய்தும் வைத்திருக்கிறார் டாக்டர் சவுரிராஜன்.

''அவர்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இருக்கிறதா?'' என்று டாக்டர் சவுரிராஜனிடம் தயங்கியபடியே கேட்டோம்.

''இல்லாமலா என்னுடன் ராஜபாளையம் தாண்டி வத்திராயிருப்பு வழியாக, சதுரகிரி மலைக்கு வந்தார்கள்? அவர்களுடன் சித்த மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் சிலரும், டாக்டர்கள் சிலரும் வந்தார்கள். எத்தனையோ வகையான மூலிகைச் செடிகளையும் மரங்களையும் அங்கே அவர்

களுக்குக் காண்பித்து, அவற்றின் பயனை விளக்கினேன்!

''முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஜெர்மானியர்கள் இந்தியாவிலிருந்து சித்த வைத்தியம் கற்றிருக்கிறார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. 40,000 சித்த வைத்திய ஓலைச்சுவடிகளையும், அவற்றை விளக்கிச் சொல்ல விவரமறிந்தவர்களையும் ஜெர்மனிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இப்போதும் ஹெர்பல் (மூலிகை) மருந்துகள் பற்றிய பாடம், மாணவர்களுக்குப் பள்ளிக் கூடங்களிலேயே போதிக்கப்படுகிறது அங்கே!'' என்கிறார் டாக்டர் சவுரிராஜன்.

ஷெனாய் நகரில் இவரது வீட்டைச் சுற்றி வளர்ந்திருக்கும் வித விதமான மூலிகைச் செடி, கொடிகள் பற்றி அவர் விவரங்கள் தரும்போது வியப்பாகத்தான் இருக்கிறது.

''இதோ - தைலோபீரிக் இண்டிகா இலை இருக்கிறதே, ஆஸ்துமாவுக்கு நிரந்தர குணம் அளிக்கவல்லது. தேள் கடிக்கு, குண்டலிக்காது இலையுடன் இரண்டு மிளகைச் சேர்த்துச் சாப்பிட்டால் போதும்!''

''மிளகு எதற்கு?''

''பச்சிலையால் வரும் சைடு எஃபெக்ட்டைத் தடுக்கத்தான் மிளகு. கோரைக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள் இரண்டின் பொடியையும் சம அளவு கலந்து உபயோகித்தால் தேமல், சொறிச்சல், ஏன் அலர்ஜி கூடப் போய்விடும். நான் ஒரு சவாலே விடுகிறேன். உலகிலேயே காளாஞ்சகப்படை எனப்படும் 'சோரியாஸிஸ்' சரும நோய்க்கு மருந்து இல்லை. ஆனால் சித்த வைத்தியத்தில் இருக்கிறது! நிரந்தரமாகப் போக்கிவிடும் வல்லமை அதற்கு உண்டு!''

தலைமுறை தலைமுறையாகச் சித்த வைத்தியத்தில் நிபுணர்களாக விளங்கி வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் டாக்டர் சவுரிராஜன். சரபோஜி மன்னர் காலத்தில், அவர்களின் அரண்மனை வைத்தியர்களாக, மகாராஷ்டிரத்திலிருந்து வந்தவர்கள் என்றும் இவர்களைச் சொல்லுவார்களாம். பிறந்து வளர்ந்தது எல்லாம் கும்பகோணத்தில் தான்....

''பாதரசத்தை எடுத்து, குளிர்ந்த தண்ணீரிலிட்டு இறுக வைத்து, 108 சாரணிகளில் கருக்கிட வேண்டும். பிறகு அதை விக்கிரகமாக உருவாக்கி, அதற்குப் பால், தேன், சந்தனம், அபிஷேகம் செய்து அந்த நீரைப் பருக வேண்டும். இந்த நீருக்கு எல்லா நோய்களையும் குணமாக்கும் தன்மை உண்டு.'' (சிறு சிறு பாதரசக் குண்டுகளாகவும் தயாரித்திருக்கிறார்.)

''பாதரசத்தை எங்கிருந்து தயாரிப்பீர்கள்?''

''கனக எருமை, தொழுகண்ணி இன்னும் பல மூலிகைகளிலிருந்து! இதோ மான் செவிக் கள்ளி இலையை நுனியோடு ஒடித்தால் பால் வருகிறது. எருக்கை ஒடித்தால் பால் வருகிறது. இல்லையா? ஆனால், கனக எருமை மரத்தை ஓரிடத்தில் வெட்டிய பிறகு, ஏதாவும் புல்லை அதன் வேரில் போட்ட பிறகு, எருமைக் கன்றுக்குட்டி கத்துவது மாதிரி கத்தினால்தான் அதி



✱ .... மூலிகை ஆராய்ச்சி

லிருந்து பால் வரும்!''

நாம் சற்றே தயக்கத்துடன் அவரைப் பார்த்த போது, ''முதலில் நானும் நம்பத் தான் இல்லை. பிறகு நேரில் கண்ட பிறகு தான் நம்பினேன்!'' என்கிறார் குமாரி அருள் சொரூபி. இவர் சித்த மருத்துவப் படிப்பில் கடைசி ஆண்டு மாணவி.

''ஆஸ்த்துமாவுக்கு என்ன இலை சொன்னீர்கள்?''

''நஞ்சறுப்பான் இலை. காலை வேளையில் நான்கு இலை. இரண்டு மிளகுடன் சாப்பிட வேண்டும். கூடவே இதற்கான மருந்தும் உண்டு. ஏழே நாட்களில் பூரண குணம் கிடைக்கும்!''

''கற்றாழை உடம்புக்குக் குளிர்ச்சி!'' என்றவர், ஓர் இலையை வெட்டி, அதன் கனமான தோலைச் சீவி எடுத்து, உள்ளே நுங்கு போன்று இருக்கும் பகுதியை

அப்படியே வாயில் போட்டுக் கொண்டார். (நாமும் சற்று ருசி பார்த்தோம்!) ''ஏதாவது வாடையோ, வாசனையோ தெரிகிறதா? இதை சாம்பார் வைத்துச் சாப்பிடலாம்!'' என்றார்.

சதுரகிரி மலை உச்சியில் யானையும், புலி, கரடி, காட்டுப் பன்றி முதலிய கொடிய மிருகங்களும் இருப்பதால், போலீஸ் அங்கங்கே இந்தக் குழுவுக்குக் காவலாகச் சென்றிருக்கிறது.

மூலிகைச் செடிகளைப் பறிக்கும் போது அவற்றால் மருத்துவர்களுக்குச் சாபம் ஏதும் கிடைத்து விடாமலிருக்க, மந்திரமும் சொல்லுவார்களாம்!

''அமெரிக்காவில் சித்த வைத்தியம் பார்க்க வேண்டுமானால் மூலிகைகள் வேண்டுமே?''

''அங்கே மலைகளில் இல்லாத செடிகளா? போய்ப் பார்த்தால் தெரிகிறது! தவிர இங்கேயிருந்தும் கொண்டு போகலாமே?''

''சித்த வைத்தியத்துக்கும் ஆயுர்வேத வைத்தியத்துக்கும் என்ன வேறுபாடு?''


''வேறுபாடே கிடையாது. நாங்கள் நெய் என்கிறோம். அவர்கள் கிருதம் என்கிறார்கள். நாங்கள் மாத்திரை என்கிறோம். அவர்கள் குளிகை என்கிறார்கள். அவர்கள் பாஷாணங்களை (ஆர்சனிக்)த் தொட மாட்டார்கள். நாங்கள் பாஷாணங்களைச் சர்வ சாதாரணமாகக் கையாளுவோம். அதனால்தான் மற்றவர்களால் தீர்க்க முடியாத பல நோய்களை நாங்கள் தீர்க்க முடிகிறது!''

பிள்ளைப் பேறு இன்றி மறுகும் தம்பதியர் விஷயத்தில், ''கவலையே வேண்டாம்; என்னிடம் அதற்கான மருந்து இருக்கிறது'' என்கிறார் டாக்டர் சவுரி ராஜன்.

இருபது நாட்களில் மருந்துகள் பலவற்றைத் தயார் செய்து வைக்கச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார் கலிபோர்னியாவிலிருந்து வந்திருக்கும் டோனி விட்நா. இப்போது மூலிகைகள் ஏராளமாகக் கிடைக்கும் ரிஷிகேசம் பகுதிக்குச் சென்றிருக்கிறார் டோனி.

மருந்துகளைத் தயார் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் டாக்டர் சவுரி ராஜன், கலிபோர்னியா செல்லவும் தயாராகிக் கொண்டிருக்கிறார், சித்த மருத்துவத்தை அங்கே துவக்கி வைக்க.

– எஸ். வி. என்.



# பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. ☎ : 582676

## பிக்சட் டிபாசிட் திட்டம்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5 | 19% | 20% |

## தனயோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

## காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5-ம் ஆண்டு முடிவில் ரூ.6000/-ஐத் திரும்பப் பெறுவீர்
10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்

## பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்
சேமிப்பு ரூ.13,000/- வட்டி வீதம் - 19% கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே
முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும்
மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

| பிரதி மாத டிபாசிட் | ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ.25 | 330 | 715 | 1,180 | 1,800 | 2,510 | 3,350 | 4,370 |
| ரூ.100 | 1,320 | 2,860 | 4,720 | 7,200 | 10,050 | 13,400 | 17,500 |

## செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ.7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்
ரூ.9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ.2400/- வட்டி விகிதம் ரூ.1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை-3

(Friday Weekly Holiday.)

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

— சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி —

SURESH



• 'ரோஜா' படத்தில் ஒரு காட்சி...

# சினிமாவில் பயங்கரவாதம்!

பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர், ஆந்திரா என்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் பயங்கர வாதம் வலுப்பெற்று வரும் தருணத்தில், அதைத் திரைக் கதைக்குரிய சப்ஜெக்டாகத் தேர்ந்தெடுத்தது சமயோசித மான செயல். பயங்கர வாதத்தை ஒரு தேசியப் பிரச்னையாக அணுகாமல், அதன் விளைவாகத் தனி நபர்கள் வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்பை மட்டுமே படமாக்கினாலும் 'ரோஜா' ஒரு சிறந்த முயற்சி - கதாநாயகி ரோஜாவின் உறுதியும் கதாநாயகன் ரிஷியின் தார்மிகப் பொறுப்புணர் வுடன் கூடிய துணிச்சலும் நிமிர்ந்து உட்காரச் செய்கின்றன...

இப் படம் உருவா னதைப் பற்றிப் பேசுகிறார் திரைக்கதை, இயக்கம் பொறுப்பேற்ற மணிரத்னம்.

●● பயங்கரவாதம் பற்றி ஒரு திரைப்படம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?

கல்லூரி நாட்களில், ஒரு விஷயத்தை - ஒரு காட்சியை - பாலசந்தர் படமெடுத் துள்ள முறையையும், அதையே நான் இயக் குனராய் இருந்திருந்தால் எப்படி எடுத் திருப்பேன் என்றும் மனத்துக்குள் ஒப்பிட் டுப் பார்த்ததுண்டு. எனவே பாலசந்தரிட மிருந்து கவிதாலயாவுக்கு ஒரு படம் செய்யச் சொல்லி அழைப்பு வந்ததும், மகிழ்ச்சி யடைந்தேன். அதே சமயத்தில் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற இலேசான கவலை யோடு உறுதியும் வந்தது....



* இளம் இசையமைப்பாளர் ரஹ்மானை அறிமுகப்படுத்துகிறார் கே.பி.

எப்போதுமே, எனக்கு ஒரு கொள்கை உண்டு. ஒரு கம்பெனிக்கு ஒரு படம் டைரக்ட் செய்து தர ஒப்புக் கொண்டால், அந்தப் படம் அதுவரை அந்தக் கம்பெனி எடுத்த படங்களிலேயே மிகவும் சிறப்பான தாய் இருக்க வேண்டும் என்று நினைப்பேன். கவிதாலயாவைப் பொறுத்தவரை ஏற்கெனவே பல நல்ல படங்களை எடுத்திருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம், கவிதாலயா எடுத்த 'பெஸ்ட்' படங்களில் ஒன்று என்று கூறும்படியாகவாவது என் படம் அமைய வேண்டும் என்று நான் விரும்பினேன். எனவேதான், வித்தியாச மான கதைக் கருவை எடுத்துக் கொண்டேன். கே. பி. சாரும் ஓ. கே. சொன்னார்.

●● *பயங்கரவாதிகள் சம்பந்தப் பட்ட கதையை எடுப்பது என்று முடிவு செய்தபின், குறிப்பாகக் காஷ்மீர் தீவிர வாதிகளைத் தேர்ந்தெடுத்தது ஏன்...? பல்வேறு மாநிலங்களிலும்தான் இந்தப் பிரச்னை உள்ளதே!*

ஏதோ ஓர் ஊரில் கதை நடப்பதாய்க் காட்ட எனக்கு விருப்பமில்லை. அதுவும் இல்லாமல், இந்தியாவின் மற்ற எந்தப் பகுதியையும் விட, காஷ்மீர் நம் எல்லோ ருக்குமே மிகவும் பரிச்சயமான ஒரு பகுதி. பஞ்சாப், அஸ்ஸாம் இவற்றை விட, தமிழ்த் திரைப்பட ரசிகர்களுக்கு காஷ்மீர் நெருக்க மானது. மனம் ஒன்றும். கதையில் வரும் சம்பவங்களும் காஷ்மீர் பயங்கரவாதி களுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்து வருவ தால், காஷ்மீர் பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேன்.

●● *கதை எப்படி உருவானது?*

பஞ்சாப் பயங்கரவாதிகள், ஜே. கே. எல். எஃப், உல்ஃபா போன்ற எல்லா பயங்கரவாத அமைப்புகளின் நடவடிக் கைகள் பற்றியும் செய்தித்தாள்களிலும், பத்திரிகைகளிலும் கடந்த சில வருடங்களில் வெளிவந்த செய்திகள், பேட்டிகள், கட்டு ரைகள் என்று அனைத்தையும் சேகரித் தோம். அவற்றிலிருந்து கதைக்கான சம்ப வங்களை எடுத்துக் கொண்டோம். அப் போதுதானே ரியலிஸ்டிக்காக இருக்கும்?

●● *கதாபாத்திரங்களுக்கான நடிக, நடிகையரைத் தேர்ந்தெடுத்தது எப்படி?*

இந்தக் கதைக்கு பெரிய ஸ்டார்கள் யாரும் தேவையில்லை என்பது என் தீர்மா னம். வெகுளித்தனமான அதே சமயம்,

* மணிரத்னம் - குடும்பத்துடன்.



# "அப்படியொரு காட்சியை நான் எடுத்திருப்பேனா?"



கே. பாலசந்தர் கூறுகிறார் :

"கவிதாலயாவுக்காக மணிரத்னம் ஒரு படம் டைரக்ட் செய்ய வேண்டும் என்று எனக்கு வெகுநாட்களாகவே ஆசை. திடீரென ஒருநாள் அவருக்கு போன் செய்து என் விருப்பத்தைத் தெரிவித்த போது, உடனே ஒப்புக் கொண்டு, மறுநாள் நேரே வந்து சந்திப்பதாய்க் கூறினார். மறுநாள் சந்தித்து, "எந்த மாதிரி படம் வேண்டும்?" என்ற போது, நான் 'ஒரு நல்ல படம்' என்று மட்டும் கூறி, அவருக்கு முழு சுதந்திரம் அளித்தேன். பத்து நாட்கள் கழித்து மீண்டும் சந்தித்தோம். 'பயங்கரவாதிகள்' சப்ஜெக்டைச் சொன்னார். 'தமிழ்ராஜ துரைசாமியைக் காஷ்மீர் பயங்கரவாதிகள் கடத்திச் சென்று, பின்னர் விடுவித்த சம்பவம் நடந்தது முதலே, அந்த சப்ஜெக்டை வைத்து ஒரு படம் பண்ண வேண்டும் என்று எனக்குக் கூட எண்ணம் உண்டு' என்று அவரிடம் சொன்னேன். 'அப்படியெனில் நீங்கள் அந்த சப்ஜெக்டைப் பண்ணுங்கள். நான் வேறு கதை யோசிக்கிறேன்' என்றார் மணிரத்னம். நான் 'வேண்டாம்! நீங்களே இந்தக் கதையைக் கவிதாலயாவுக்கு எடுத்துத் தாருங்கள்; எனக்குச் சந்தோஷம்' என்று கூறி விட்டேன்.

"மணிரத்னம் எதைச் செய்தாலும், மிக நேர்த்தியான முறையில் செய்ய வேண்டும் என்கிற குணம் கொண்டவர். நடிப்பா

எமோஷனலான ஹீரோயினாக மதுபாலா, அமைதியான சுபாவமுடைய ஹீரோவாக அரவிந்த் ஸ்வாமி, இருவரையும் தேர்ந்தெடுத்தேன். ஹீரோவைக் கடத்திக் கொண்டு போகும் தீவிரவாத கும்பலின் தலைவனாக நடிக்க, தமிழ் ரசிகர்களுக்குத் துளியும் பரிச்சயமில்லாத ஒருவராகவும், தமிழ்ப் பேசத் தெரியாதவராகவும் ஒரு வடஇந்திய நடிகரை நடிக்க வைக்க எண்ணிய போது, நான் சில இந்திப் படங்களில் பார்த்து, ரசித்த பங்கஜ் கபூர்தான் நினைவுக்கு வந்தார். அவரை அணுகிய போது, சம்மதம் தெரிவித்தார். தமிழ் வசனங்களை முன்னமே அவரிடம் கொடுத்து விட, அவற்றை மனப்பாடம் செய்து கொண்டு வந்து பேசினாலும், அவரது பேச்சு வெகு இயல்பாக அமைந்திருந்தது.

●● இசையமைக்க எப்படி இளைஞர் ரஹ்மானைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

அவர் பணிபுரிந்த சில விளம்பரங்களைப் பார்த்தேன். ரொம்பப் பிடித்தது. அவரை அடிக்கடி சந்தித்துப் பேசினேன். அவருடைய திறமையை அறிந்து கொண்டு, எனக்கு என்ன தேவை என்பதைச் சொல்லி... அதன் ரிசல்ட்தான் படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள். பிரகாசமான எதிர்காலம் கொண்ட இளைஞர் ரஹ்மான். இந்த வயதில் இப்படி ஒரு அசாத்தியத் திறமையா என்று ஆச்சரியமாய் இருக்கிறது. அதே போல, ரோஜாவுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கிய இன்னொருவர் எழுத்தாளர் சுஜாதா. கச்சிதமான வசனங்கள்.

●● கதாநாயகி ரோஜா துடிப்பானவள். துணிச்சல் மிக்கவள் என்பதைப் படத்தின் ஆரம்பத்திலிருந்தே வெளிப்படுத்தி, அவள் பாத்திரத்தை படிப்படியாய் 'டெவலப்' செய்த நீங்கள், கதாநாயகன் கேரக்டரை அதே மாதிரி டெவலப் செய்யவில்லையே! படத்தின் முதல் பாதியில் ஒரு சராசரி இளைஞனாகத் தோன்றுபவன், இரண்டாவது பாதியில், திடீரெனத் தனது தேசப்பற்றை வெளிப்படுத்துவது, செயற்கையாய் இருக்கிறதே!

"அதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். சராசரி அன்றாட வாழ்க்கையில் ஒருவர் தேசப்பற்றை எப்படி வெளிக்காட்ட முடியும்? ஒரு நெருக்கடி நேரும் போது தானே அதை உணர்த்துவது சாத்தியம்? 'ரோஜா'வின் ஹீரோ, அடிப்படையில், ஒரு அமைதியான, ஜாலியான படித்த இளைஞன். அவ்வளவுதான். இரண்டாம் பகுதியில் அவன் சற்றும் எதிர்பாராத ஒரு சிக்கலான பிரச்னையில் மாட்டிக் கொள்ளுகிறான். அதன்பின் அவனிடம் படிப்படியாய் மாற்றம் வருகிறது. கடத்தப்பட்டு,

கட்டும், இசையாகட்டும், லொகேஷன் ஆகட்டும் - அவற்றிலிருந்து 'தி பெஸ்ட்' ஐ வெளிக்கொண்டு வந்து விடும் திறமைசாலி. சிறு சிறு விஷயங்களையும் கூட அலட்சியம் செய்யாமல் சிரத்தையாகச் செய்பவர். எல்லாவற்றுக்கும் மேலாக 'ஒர்க்கஹாலிக்'. மணிக்கணக்கில் சலிப்பின்றி வேலை பார்க்கும் உழைப்பாளி. இதையெல்லாம் அனுபவபூர்வமாய் நான் அறிந்திருந்தேன். படம் பாதி முடிவடைந்த நிலையில் எனக்குப் போட்டுக் காட்ட விரும்பினார். ஆனால் நான் பார்க்க மறுத்து, 'முழுப் படமும் முடியட்டும்' என்று கூறி விட்டேன்.

''முழுப் படமும் முடிந்த பிறகு போட்டுப் பார்த்தோம். எனக்கு ரொம்பப் பிடித்தது. குறிப்பாக, மதுபாலா, மந்திரியைச் சந்தித்து, தன் கணவனை எப்படியாவது மீட்டுத் தர வேண்டும் என்று கேட்கும் காட்சி. முதலில் இவள் தமிழில் பேசுவதை, உதவியாளர் மந்திரியிடம் இந்தியில் மொழிபெயர்த்துச் சொல்கிறார். சிறிது நேரத்துக்குப் பின் இவள் மடமட வென்று உணர்ச்சி பொங்கப் பேசுவதை, உதவியாளர் மொழிபெயர்க்க முயலும் போது, தேவையில்லை; என்பது போல் தன் கையை உயர்த்தி, உதவியாளரை நிறுத்தி விட்டு, அவளைக் கவனிக்கிறாரே அந்த இடம் - உணர்ச்சி என்பது மொழிக்கு அப்பாற்பட்டது என்பதை எத்தனை நயமாய்ச் சொல்லியிருக்கிறார் இயக்குனர்! நான், அப்படி ஒரு காட்சியை அமைத்திருப்பேனா என்பது சந்தேகம்தான்! அதே போல் வாசிம்கானைச் சிறையில் மதுபாலா சந்திக்கும் காட்சி - இருவரும் வெவ்வேறு மொழிகளில்தான் பேசுகிறார்கள். ஆனால் அந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடு! கிளாசிக்!

''படத்தில் இன்னொரு விஷயம் என்னைக் கவர்ந்தது. தப்பி ஓடும் ஹீரோவை பயங்கரவாதிகள் துரத்துகிற கிளைமாக்ஸ் காட்சியில், வேறு யாராவதாய் இருந்திருந்தால், எத்தகைய வன்முறைகள் அதில் இடம்பெற்றிருக்கும்? ஆனால் 'ரோஜா'வில் ஒரே ஒரு புல்லட் சப்தம் கூட இல்லை! அதுதான் மணிரத்னம்!

''அதனால்தான் 'ரோஜா' படத்தின் 'டைட்டில்' என் அப்ருவலுக்கு வந்த போது, 'கே. பாலசந்தர் வழங்கும்' என்பதைப் 'பெருமையுடன் வழங்கும்' என்று திருத்தினேன்!''

சந்திப்பு : மௌஷ்மி

மறைவிடத்துக்குக் கொண்டு வரப்பட்டதும், ''நீங்கள் எல்லாம் யார்? எதற்காக என்னை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று மட்டுமே கேட்கிறான்; மற்றபடி அமைதியாகவே இருக்கிறான். அடுத்த காட்சியில், அவர்கள் கேள்விகளுக்குப் பதில் மட்டும் சொல்கிறான். தானாக ஒன்றும் பேசவில்லை. அதற்கும் அடுத்த காட்சியில், தன் விடுதலைக்கு ஈடாக, தீவிரவாதிகள் தலைவனின் விடுதலை கோரப்படுவதை அறிந்ததும், உணர்ச்சி பொங்க அவன் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறான். அப்போது அவன் கூறுவதுதான் ''ஜெய்ஹிந்த்''. நான்காம் காட்சியில் பயங்கரவாதிகள் எரிக்கும் இந்திய தேசியக் கொடி மீது பாய்ந்து, தீயை அணைக்கிறான். முற்றிலும் புதிய பயங்கரவாத சூழ்நிலையில் படிப்படியாய் அவன் மாறுகிறான்; தன் தேசப்பற்றை வெளிப்படுத்துகிறான். அந்த கதாபாத்திரத்தின் படிப்படியான வளர்ச்சியைத்தானே காட்டுகிறது?

●● *காஷ்மீர் பயங்கரவாதிகளைப் பாகிஸ்தான், போஷித்துப் பயிற்சியளிக்கிறது என்பதுதானே நாட்டு நடப்பு? எல்லையைக் கடக்க முயலும் பயங்கரவாதிகளைப் பாகிஸ்தான் ராணுவம் கொல்வது போல கதையை அமைத்துள்ளீர்களே?*

பயங்கரவாதிகளைப் பாகிஸ்தான் ஆதரிப்பது வாஸ்தவம் என்றாலும், ஒரிரு சமயங்களில் அவர்களே, பயங்கரவாதிகளைக் கொன்று விடும் செய்திகளும் பத்திரிகைகளில் வரத்தானே செய்கின்றன. ஆயுத கலாசாரத்தின் இன்றியமையாத விளைவு இத்தகைய சம்பவங்கள்... பயங்கரவாதத்தைப் போஷிப்பவர்கள் தங்களால் உருவாக்கப்பட்டவர்களையே அற்ப காரணத்துக்கு அழிக்கவும் தயங்க மாட்டார்கள். தர்க்க நியாயம் என்பதெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஆயுதம் ஏந்துவதில் கிடைக்கும் மமதையும் போதையும் மட்டுமே எஞ்சி நிற்கும்.

●● *சிறையில் அடைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தலைவன் வாசிம்கானை, ஒரு பெண் போய் சந்திப்பது எவ்வளவு தூரம் சாத்தியம்?*

தன் கணவனை மீட்க யாரையும் சந்தித்துப் பேச அந்த இளம்பெண் தயாராய் இருக்கிறாள் என்பதைக் காட்டவே அந்தக் காட்சி. ஜெயிலில் உள்ள பயங்கரவாதியைச் சந்திப்பது ஏன் சாத்தியமில்லை? நியூஸ் டிராக் போன்ற வீடியோ இதழ்களின் நிருபர்கள், எங்கோ தலைமறைவாய் வாழும் எத்தனை பயங்கரவாதிகளைப் பேட்டி காண்கிறார்கள்? அப்படியானால், ஜெயிலில் இருக்கும் ஒரு பயங்கரவாதிகள் தலை

வனை, ஒரு பெண் சந்தித்துப் பேசுவது ஏன் முடியாது? அதுவும், அந்தப் பெண்ணின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட ஒரு ராணுவ உயர் அதிகாரி இருக்கும் போது? என்ன, அவள் ஜெயில் அதிகாரிகளைச் சந்தித்து, தன் வேண்டுகோளைச் சொல்வது, அவர்கள் மறுப்பது, இவள் விடாப்பிடியாய் இருப்பது, கடைசியில் அவர்கள் சம்மதிப்பது போன்ற காட்சிகளையெல்லாம் நான் காட்டவில்லை. காரணம் அந்தக் காட்சிகள் கதையோட்டத்தில் தொய்வை ஏற்படுத்தும் என நான் நினைத்ததுதான்.

●● *கிளைமாக்ஸ் காட்சியில், பயங்கரவாதிகளின் தலைவன் வாசிம் கானை விடுதலை செய்ய ராணுவம் அழைத்துக் கொண்டு வருகிறது. அதே சமயத்தில் கதாநாயகனை விடுவிக்க ஒப்புக் கொண்டுள்ள தீவிரவாதிகள், அவன் ஏற்கெனவே தப்பித்து விடுவதால் அவன் உடைகளை மட்டும் கொண்டு வந்து போட்டு விட்டுப் போகிறார்கள். தப்பியவனைப் பிடிக்க முயற்சி செய்யாமல் அவர்கள் ஹீரோவின் உடைகளுடன் ராணுவ அதிகாரிகளைச் சந்திக்க வருவது ஏன்?*

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியிலிருந்து தப்பித்து ஓடிப் போய் விடுவது எளிதில் இயலாத காரியம். இதை நன்கு உணர்ந்த பயங்கரவாதிகள், திட்டமிட்டுச் செயல்படுகின்றனர். ஒரு பகுதியினர் ஹீரோவைத் தேடிக் கொண்டு போக, இன்னும் சிலர் - ராணுவ அதிகாரிகள் வாசிம்கானுடன் காத்திருக்கும் பகுதிக்கு வந்து ஹீரோவின் உடைகளை எறிந்து விட்டுப் போகிறார்கள். ராணுவத்தினருக்கு, ஹீரோ கொல்லப்பட்டு விட்டானோ என்ற சந்தேகத்தை இது எழுப்புகிறதல்லவா? பிரச்னை மேலும் சிக்கலாகி விட்டதோ என்று ராணுவத்தினரை நினைக்கத் தூண்டுவதே பயங்கரவாதிகளின் நோக்கம்.

●● *இந்தப் படத்தின் மூலம், பயங்கரவாதப் பிரச்னைக்குத் தீர்வு என்ன என்று உணர்த்த நீங்கள் முயற்சி செய்யவில்லை...*

பிரச்னையைப் பற்றி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே, தீர்வு காணுவதன் ஆரம்பம்தானே? அது மட்டுமில்லை. நான் எடுத்திருப்பது சினிமாதானேயொழிய டாகுமெண்டரி படம் இல்லை. சினிமாவில் ஒரு பிரச்னையைக் கதையுடன் இணைத்துச் சொல்லியிருக்கிறேன். அதில் கூட நான் எடுத்துக் கொண்ட கோணம், ஓர் அப்பாவிப் பெண், ஒரு சிக்கலான பிரச்னையில் மாட்டிக் கொள்ளும் போது, எப்படி உணர்ச்சிபூர்வமாய் ரியாக்ட் செய்கிறாள் என்பதுதான்.

●● *ரோஜா படத்தைப் பார்த்து விட்டு, இயக்குனர் கே. பி. என்ன சொன்னார்?*

கே. பி. பெருமைப்பட்டார். அவர் பெருமைப்படும்படி படம் எடுத்துத் தந்ததில் எனக்கு மிகவும் பெருமை.

●● *ஓர் ஆங்கிலப் படத்தின் காப்பி தான் 'ரோஜா' என்று ஒரு விமர்சனம் வெளியானதே?*

பயங்கரவாதிகள் அப்பாவி நபர்களைப் பணயக் கைதிகளாகக் கடத்திக் கொண்டு போவதும், காவலில் உள்ள தங்கள் குழுவினரின் விடுதலையைக் கோருவதும் நம் நாட்டில் அடிக்கடி நடப்பவைதானே? கடத்தப்பட்ட நபர்களின், அவர்கள் குடும்பத்தினரின் சோகக் கதைகள் எத்தனை உருக்கமாய் இருக்கின்றன! இந்த விஷயத்தைப் பற்றிப் படமெடுக்க, நான் ஏன் ஆங்கிலப் படம் பார்க்க வேண்டும்? கையில் பேனாவும், எழுதப் பத்திரிகையும் இருக்கிற காரணத்தால் எதை வேண்டுமானாலும் எழுதுவது ரொம்பத் தவறு.

பேட்டி : எஸ். சந்திரமௌலி

படங்கள் : யோகா






கருத்து : ஏ. ஆர். வீரராகவன்

# ஒரு புத்திசாலித்தனமான அடி



மார்ச் 31, 1992 வரை உங்களுக்கு கிடைத்துள்ள
மூலதன ஆதாயங்களுக்கு வரிவிலக்கு பெற

## ஐடிபிஐ

## முதலீட்டு பத்திரங்களில்

முதலீடு செய்யும் இறுதி வாய்ப்பு

**இத்திட்டத்தின் கீழ் முதலீடு செய்ய இறுதி தேதி செப்டம்பர் 30, 1992.**

நிலம், கட்டடம், ஆபரணங்கள், பங்குகள் போன்ற நீண்டகால முதலீட்டு ஆதாயத்திற்கு வருமான வரி உண்டு. ஆனால் இவ்வரியிலிருந்து விலக்கு பெற வாய்ப்பும் உள்ளது. உங்கள் மூலதனத்தை முழுமையாக பெற மற்றும் இதிலிருந்து லாபமும் பெற ஐ டி பி ஐ முதலீட்டு பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்.


- பத்திரங்கள் செப்டம்பர் 30, 1992, வரை சம விலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம் 1961 பிரிவு 54E - ன் கீழ் மதிப்பீடு ஆண்டு 1992-93 க்கு மூலதன ஆதாயத்திற்கு வரிவிலக்கு உண்டு.
- வருடத்திற்கு 9% என்ற விகிதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும்.
- வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் (நான்-ரெஸிடெண்ட்) முதலீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால், 3 ஆண்டுக ளுக்கான மொத்த வட்டியையும் தள்ளுபடி மு றையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்போது கழிக்கப்பட மாட்டாது.
- வெளியூர் காசோலை ஏற்றுக் கொள்ளப்பட்டு அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐ டி பி ஐ ஏற்றுக் கொள்ளும்.
- பிரிவு 80 L ன் கீழ் வருமான வரியில் லாபம்.

## நாட்டின் தொழில் வளர்ச்சியிலும் பெறும் பங்கு.

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபீசை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்.

**இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா**


ஐடிபிஐ டவர், கஃப் பரேட், பம்பாய்-400 005. போன்: 218 9111/21.



இந்தியன் எக்ஸ்பிரஸ் கண்டனம்
ABB ஊழல்
அப்பாடா! வலி கொஞ்சம் தேவலை...
எக்ஸ்பிரஸ் மீது மான நஷ்ட வழக்கு
உயர்நீதிமன்றக் கண்டனம்
ரயில்பெட்டி காண்ட்ராக்ட் ஊழல்
யோசிக்கலாம்...
ஐயோ! உனக்கு வரி போட யோசிக்கிறானே... போச்சு, இனிமே பஞ்சம்-தான், பட்டினிதான், ...!
பணக்கார விவசாயிகள்
பல்ராம் ஜாக்கர்
தலைக்கு ஆபத்து வந்தாலும் பரவாயில்லை... தலைப்பாகைக்கில்ல ஆபத்து வந்திடும் போலிருக்கு?
அந்தக் காகிதத்தை வாங்காமலேயே தாஜா பண்ணிச் சமாளிக்கப் பாரு!
அரசி எலிசபெத்
அரியாசன வாரிசு உரிமை
சார்லஸ்
டயானா



கல்கி



1992
செப்டம்பர் 13
மலர் : 51
இதழ் : 7
ஆங்கீரச
ஆவணி 28

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

# சதாசிவம் - 90

தொட்டதற்கெல்லாம் போராட்டம்; எடுத்ததற்கெல்லாம் மறியல்! இன்று உண்ணாவிரதம், மறியல், சிறைவாசம் என்பதெல்லாம் அரசியல்வாதிகளுக்கு ஒரு ஃபாஷன் ஆகிவிட்டது. "நானும் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றிருக்கிறேன்" என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி தர இது உதவுமே தவிர, அர்த்தமுள்ளதல்ல. காரணம், சுதந்திர ஜனநாயகத்தில் இதற்கெல்லாம் இடமில்லை. போராட வேண்டிய இடம் வீதியல்ல, சட்டமன்றம்; போராட வேண்டிய முறை வாக்குவாதம்; வன்முறையல்ல. பேச வேண்டிய இடம் மக்கள் மன்றம்; பேச வேண்டிய முறை அறிவூட்டுதல்; வெறியூட்டுதல் அல்ல. இன்றைய சிறைவாசம் என்பதும் அப்படியொன்றும் கஷ்டமானதல்ல. அங்கே காலை உணவாக இட்லி சாம்பார் தரப்படவில்லையென்று அரசியல்வாதிகள் போராடுகிறார்கள். சிறைக்குள்ளே மின்விசிறி தேவை என்கிறார்கள். இன்னும் பல வசதிகளையும் பெறுகிறார்கள். இதற்கும் மேல், நாலு நாள் ஆனால் நெஞ்சு வலி என்று கூறி தனியார் மருத்துவமனைக்குப் போய் ஓய்வெடுக்கிறார்கள்!

ஆனால் இந்த நாட்டின் மெய்யான சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சந்தித்தவை வேறு. அன்று தடியடி உடலைப் பதம் பார்க்கும்; சமயத்தில் மண்டையையும் பிளக்கும். சிறைச்சாலையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கிடப்பார்கள். கேழ்வரகுக் கூழ்தான் ஆகாரம். தனிக் கொட்டடியில் அடைபட்டுக் கிடக்கும் போது, இயற்கை உபாதையைத் தீர்க்க, சட்டிதான் இருக்கும். அதைக் காலையில் தலையில் தூக்கிச் சென்று சுத்தப்படுத்த வேண்டும். செக்கிழுக்காதவர்கள் கல்லுடைக்கவாவது வேண்டும். இப்படியெல்லாம் பலவாறு கஷ்டப்பட்டும் நஷ்டப்பட்டும் சொத்து சுதந்திரங்களை இழந்தும் தாய் நாட்டுக்காக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் சதாசிவம்.

ஒரு சிறைவாசத்தின் போதுதான் கல்கியும் சதாசிவமும் சந்தித்துக் கொண்டார்கள். "நமது தாய்மார்கள் நாம் குழந்தைகளாக இருந்த போது காப்புப் போட்டுப் பார்க்க முடியவில்லையே என்று குறைப்பட்டார்கள் அல்லவா? அதை எப்படியோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தெரிந்து கொண்டு அந்தக் குறையைத் தீர்த்து வைத்திருக்கிறது பாருங்கள்" என்று பிணைச் சங்கிலிகளைக் குலுக்கிக் காட்டி ஜோக் அடித்தார்கள்! நாட்டுக்காக நலிவது என்பது அத்தனை ஆனந்தம் தருவதாக, பெருமிதத்துக்குரியதாக அன்று விளங்கியது. சிறையிலே மலர்ந்த நட்பு, விகடனில் சேர்ந்து பணியாற்றிய போது இறுகியது; கல்கி தொடங்கிய போது கெட்டிப்பட்டது. சதாசிவத்தின் நிர்வாக ஆற்றலும் வாசாலகமாகப் பேசி விளம்பரங்கள் பெறும் திறமையும் "கல்கி"யின் எழுத்தாற்றலுக்கு இணையாக இந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவின.

தேசநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்த சதாசிவத்தின் தேசப்பணி, நாடு விடுதலை பெற்ற பின்னரும் தொடர்ந்தது. நெகடிவ் சிந்தனை இப்போது உதவாது என்பதால் ஆக்கபூர்வமாகப் பரிணமித்தது. இந்தப் பத்திரிகை மூலம் நடந்த சமுதாயப் பணிகள் பட்டியலிட முடியாத அளவில் பலப்பல. தவிர தமது வாழ்க்கைத் துணைவியார் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, அவரது இசைத்திறன் இறைப் பணியாக மாறி, நாடெங்கும் ஆன்மிக மறுமலர்ச்சியை உருவாக்க வழிவகுத்தார். சதாசிவம் தயாரித்த ஒரு பக்த மீரா திரைப்படம் ஓராயிரம் மடாதிபதிகளாலும் சாதிக்க முடியாத அளவில் இறையுணர்வூட்டியிருக்கிறது என்றால் மிகையில்லை. அரசியலிலோ, ராஜாஜியின் முதல் சீடராக விளங்கி, ஆளும் காங்கிரஸுக்கு ஏற்றதொரு எதிர்க்கட்சி ஜனநாயகத்துக்கு அவசியம் என்பதை உணர்ந்து, அவர் சுதந்திரா கட்சி தொடங்கிய போது சதாசிவம் பக்கபலமாக நின்றார். "ராமருக்கு லட்சுமணன் போல எனக்கு சதாசிவம்" என்று ராஜாஜி மனம் விட்டு நெகிழ்ந்து கூறும் பாக்கியம் பெற்றார். தாமும் தமது மனைவியும் சம்பாதிப்பதையெல்லாம் நற்பணிகளுக்கே நன்கொடைகளாக வழங்கி விடுகிற கொடை வள்ளலாகவே இன்றும் திகழ்கிறார். "மேலே ஆகாசம், கீழே பூமி; வேறென்ன வேண்டும்?" என்று கேட்கும் சதாசிவம், சதா - சிவமாகவே, அதாவது நன்மையாகவே, மங்களமாகவே திகழ்கிறார்.

கல்கியின் நிறுவன டைரக்டர்களில் ஒருவராகவும் "கல்கி" கிருஷ்ணமூர்த்திக்குப் பக்கபலமாகவும் விளங்கிய திரு சதாசிவம், கடந்த விநாயக சதுர்த்தியன்று 90 வயது நிரம்பப் பெற்று 91 வயதில் அடியெடுத்து வைத்திருக்கிறார். செஞ்சுரியும் அதற்கு மேலும் போட வாழ்த்தும்போதே, அவரது ஆற்றலிலும் அரிய பண்பாட்டிலும் நூறில் ஒரு பங்காவது நாம் பெற பிரார்த்திப்போம்!

# சோனியாவின் ராஜீவ்

ஆரம்பத்தில் இந்தியக் கலாசார முறைகளும், உணவும், உடையும் எனக்குப் பழக்கமாகவே இல்லை. உணவு விஷயத்தில் ராஜீவும் சரி, அவர் அம்மாவும் சரி, என்னை நிர்ப்பந்திக்கவே இல்லை. மெல்ல மெல்ல வீட்டு நிர்வாக விஷயத்தில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். இந்தி கற்க ஆரம்பித்தேன். குடும்பத்தாருடனும், பிற பணியாளர்களுடனும் பேச, இந்தி எளிதாக இருந்தது. உணவருந்த மேஜைக்கு வந்து விட்டால் இந்தியில்தான் பேசிக் கொள்வோம். ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடுவது என்பது வெகு நாளையப் பழக்கம்.

ராஜீவின் அம்மாதான் வீட்டில் முக்கியப் புள்ளி. அவருக்கு எத்தனை வேலைகள் இருந்தாலும், எத்தனையோ விஷயங்களில் அவருக்கு ஈடுபாடு இருந்தாலும், சிறு சிறு குறிப்புகள் எழுதி அனுப்புவார். உள்ளூரில் இருந்தால் விட்டுப் போன வீட்டு வேலைகள் ஏதானும் எழுதுவார். வெளிநாடுகளுக்குப் போனால், அவர் சந்தித்த மனிதர்கள், பங்கு கொண்ட நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிடுவார். என் அம்மா இத்தாலிக்குப் புறப்பட்டுச் சென்ற அன்றைக்கு, ராஜீவின் அம்மாவிடமிருந்து வந்த சிறு குறிப்பு : ''ஹாய், சோனியா, நாங்கள் எல்லோரும் உன்னை மிகவும் நேசிக்கிறோம்!''

இன்னொரு குறிப்பு ராஜீவுக்கு : 'இன்று காலை ஓர் அழகான காட்சியைப் படமெடுக்காமல் விட்டு விட்டாய். அக்பர் சாலையில், இரண்டு கிளிகள் கிளையொன்றில் நீண்ட நேரம் புகைப்படம் எடுக்கத் தோதாக உட்கார்ந்திருந்தன. ஒரு மரங்கொத்தி ஜோடியும் அந்த மரத்தில் அங்கும் இங்குமாகச் சரசமாடி அலைந்தது...'

ஏதாவது சிறு மனத்தாங்கல் எனக்கும் ராஜீவின் அம்மாவுக்கும் இடையே எழுந்தால், . அவரோ . அதைத் தீர்த்து வைத்தும் விடுவார். 'நாளை பார்சி புது வருடப் பிறப்பு. காலையிலேயே நான் பயணம் புறப்பட்டு விடுவேன். இப்போதே வந்து முத்தங்கள் கொடுக்கட்டுமா?'



ராஜீவும் நானும் இத்தாலியில் இருந்த போதுதான் சஞ்சயின் கோர மரணம் நிகழ்ந்தது. ராஜீவின் அம்மாவுக்கு மட்டுமல்ல, வீட்டிலிருந்த எல்லோருக்குமே அது பயங்கர அதிர்ச்சியைத் தந்தது.

அவருக்கு அப்போது ராஜீவின் உதவி மிகவும் தேவையாக இருந்தது. எனக்கோ, என் கணவர், என் குழந்தைகள், என் குடும்பம் பற்றிய கவலை. சலனமில்லாமல் இருந்த சாதாரணக் குடும்ப வாழ்க்கையில் புயல் வீசிச் சிதறடிக்க நான் அனுமதிக்கவில்லை. ஒரு புலி போலப் போராட வேண்டி வந்தது - ராஜீவை அரசியலுக்கு இழுக்காதீர்கள் என்று. மிகச் சாதாரணமான மனித உறவுகள் சிதைந்து, மனித உரிமையை இழக்க எனக்கு விருப்பமே இல்லை.


ராஜீவ் பாவம், தத்தளித்தார். அம்மா ஒருபுறம். நான் ஒருபுறம். ஆனால் அவர் அம்மாவுக்காகச் செய்ய வேண்டிய கடமையை விட்டு விட்டு, எளிதான சிக்கலற்ற வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பவில்லை. அவர் அம்மா மீது அவருக்கிருந்த பாசமும் நேசமும் எனக்கும் துளியும் குறையாமல் அவர் மீது இருந்தன. ஆனால் அதே சமயம் பச்சாத்தாபமும் பரிவும் கூடவே இருந்தன. என் கணவரைப் பலிகடா ஆக்கும் இந்த 'முறை' என்னவோ எனக்குப் பிடிக்கவே இல்லை. அவரை இந்தப் பாரம் அழுத்திச் சேதப்படுத்தி விடும் என்பதில் எனக்குச் சந்தேகமே இருக்கவில்லை.

ராஜீவ் என்னைச் சமாதானப்படுத்தி விட்டு, அரசியலில் நுழைந்த பிறகு, எங்கள் வாழ்க்கையின் தினசரிப் போக்கே மாறுதல் அடைந்தது. கட்சி வேலை, அமேதி தேர்தல், பிரச்னைகள் என்று ராஜீவின் நேரம் எல்லாம் அரசியலுக்கே போயிற்று; எங்களுடன் செலவிடும் நேரம் குறைந்தது. அரசியல் உலகில் பிரவேசித்த பிறகு, குழப்பமில்லாதிருந்த எளிய குடும்ப வாழ்க்கையும், சாதாரண, நேர்மையான அத்தியந்த நண்பர்கள் உறவும், மறக்கப்பட வேண்டியவை ஆயின. ஆனால் ராஜீவ், அரசியல் - குடும்பம் இரண்டுக்கும் இடையே அலைக்கழிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. கூடுமானவரை கூடவே செல்வதென்று தீர்மானித்தேன்.

84-ல் பஞ்சாப் பிரச்னை முற்றி, தீவிரம் அடைந்த பிறகு எங்களுக்குப் பாதுகாப்பு ஒரு பிரச்னை ஆயிற்று. ராகுலும், பிரியங்கா

வும் தில்லிக்கே படிக்க வந்து விட்டனர். ராஜீவின் அம்மாவுக்கு அவர்கள் பழையபடி அங்கேயே வந்து விட்டதில் ஏக சந்தோஷம். ஆனால் எங்கள் வீட்டு கேட்டும், அவருடைய அக்பர் ரோடு அலுவலக நுழைவிடமும் சந்திக்கும் வரைதான் அவர்கள் சுதந்திரமாக விளையாடப் போகலாம் என்ற கட்டுப்பாடு வைத்திருந்தார்.

'ஆபரேஷன் ப்ளூஸ்டார்'க்குப் பிறகு ஒரு நிழல் எங்கள் வாழ்க்கையில் படிந்தது. ராஜீவிடம் அவர் அம்மா, தம்முடைய சமச் சடங்குகள் பற்றிய ஏற்பாடுகளைக் கூட விரிவாகச் சொல்லி வைத்து விட்டார். என்னென்ன செய்ய வேண்டும் என்றே எழுதிக் கொடுத்து விட்டார். ராகுலுக்கு ஒரு சிறு குறிப்பு : தைரியமாக இருக்க வேண்டும் என்று. 'முழு வாழ்க்கை வாழ்ந்து, என்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் நான் செய்தாயிற்று. என் முடிவு கண்டு சோகமாகக் கண் கலங்கக் கூடாது...'



தீபாவளி வந்தது. ராஜீவ், ஒரிசாவிலிருந்து வந்து எங்களுடன் கலந்து கொண்டார். மாமியார் வழக்கம் போல், ஒரு விநாயகர் சிலைக்கு முன் பழைய விளக்கு ஒன்றை ஏற்றி வைத்தார். வீட்டை அழகுபடுத்தி, விளக்குகள் ஏற்றி அலங்கரித்து, அன்று பட்டாசுகள் வெடித்தோம். அடுத்த நாள் ராஜீவ் மேற்கு வங்கத்துக்குச் சென்று விட்டார். அதிகாலை நான்கு மணிக்கு நான் ஆஸ்துமா மருந்தைத் தேடினேன். ராஜீவின் அம்மா மெல்ல அடுத்த அறையிலிருந்து வந்து கதவைத் திறந்து, கையில் இருந்த டார்ச் விளக்கின் ஒளியில், என் மாத்திரைகளை எடுத்துக் கொள்ள உதவினார். 'நான் எப்போதும் விழித்துக் கொண்டுதான் இருப்பேன். ஏதானும் தேவைப்பட்டால் என்னைக் கூப்பிடத் தயங்காதே!' என்றார்.

அக்டோபர் 31 அன்று பிரியங்கா பள்ளி செல்லுமுன் மாமியார் அவளைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தார். ராகுலைக் கூப்பிட்டு, 'நான் சொன்னது நினைவிருக்கிறதில்லையா?' என்று கேட்டார். அவருடைய ட்ரெஸ்ஸிங் ரூமில் நுழைந்து அவருடன் சற்றே பேசி விட்டு, இரவுச் சாப்பாடு பற்றிப் பிற்பகல் உணவருந்த வரும் போது பேசிக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டுப் பிரிந்தோம்.

பட்டாசு வெடித்தது மாதிரி ஓர் ஓசை கேட்டது. குழந்தைகளின் ஆயா பயங்கரமாக அலறினார். நான் வெளியே ஓடி வந்தேன். ஓர் அம்பாசடர் காரின் பின் ஸீட்டில் மாமியாரைப் படுக்க வைத்திருந்தார்கள். ஓடி அவரருகே அமர்ந்து, மருத்துவமனை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது பயங்கரமான அனுபவம்...

ராஜீவ் 3:15க்கு மருத்துவமனை வந்தார். என்னிடம் பிறகு பேசும் போது, அவரைக் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்க நிர்ப்பந்திக்கிறார்கள் என்றார். அவரை பிரதமராகப் பதவி ஏற்கச் சொல்லுகிறார்களாம். நான் அவரைக் கட்டிக் கொண்டு அழுதேன். வேண்டாம் அது என்று மன்றாடினேன். அவரையும் கொன்று விடுவார்கள் என்று கதறினேன். ராஜீவ் என்னைக் கைகளைப் பிடித்து அழுத்திக் கொண்டு சமாதானப்படுத்தினார். 'வேறு வழியில்லை' என்றார். 'எப்படியும் ஒருநாள் கொல்லத்தான் போகிறார்கள்!' என்றார்.

மாமியார்தான் எங்கள் குடும்பத் தேருக்கு அச்சாணி மாதிரி. அவரைச் சுற்றித்தான் எல்லாமே இயங்கியது. எல்லாருமே இயங்கினோம்.

ஒருநாள் ராஜீவை வீடு முழுக்கத் தேடினோம். கடைசியில் பார்த்தால், அவர் அம்மாவின் படிப்பறையில் தனிமையாக உட்கார்ந்திருந்தார். அங்கிருந்த பொருள்களுடன் ஏதோ ஒருவிதத்தில் ஐக்கியமாகி, தனியே விடப்பட்ட நிலையில் அநாதரவாக இருப்பது மாதிரி எனக்குப்பட்டது. அரசியல் வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பத்திலும், அவருக்குப் பொறுப்புகள் கூடிக் கொண்டே வந்தன...

ராகுலுக்கும், பிரியங்காவுக்கும் பள்ளிக்

# ஒரு கம்பீரமான கலைப் படைப்பு!



படம் : அபிநயம்

தயாராகிறது


ஸ்ரீ

கல்கி

தீபாவளி

மலர்-1992


கூட வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது. வீட்டிலேயே படிப்பு. எல்லாம் பாதுகாப்புக் கருதித்தான். ராஜீவ் விஷயத்திலும் எனக்கு ஒரே கவலை. அவர் ஒருநாள், குறிப்பிட்ட நேரத்தில் வீடு வரத் தாமதமானாலும், ஏதோ பயங்கரமாக நடந்து விட்ட மாதிரி தோன்ற ஆரம்பித்தது.

அதிகாலை 3 மணி, 4 மணிக்குப் படுத்துக் கொண்டு விட்டு, 9 மணிக்கு மறுபடி அலுவல்களில் மூழ்க அவரால் முடிந்தது.

89 தேர்தலில் அவருடைய கட்சிக்கு அதிக எண்ணிக்கை கிடைத்தும், ஆட்சி அமைக்க முடியாது போனதில், எதிர்க் கட்சித் தலைவராக இருக்க நேர்ந்தது. ஆனால் அப்போதெல்லாம், பிரதமராக இருந்ததை விட ரிலாக்ஸ்ட் ஆக, ஏதோ ஒரு பெரும் சுமை இறக்கி வைக்கப்பட்ட விடுதலை உணர்வோடு இருந்தார். சின்னச் சின்ன, அன்றாட வாழ்க்கைச் சுகங்களை அனுபவிக்க அவரால் அப்போது முடிந்தது. ஆனாலும்-

ராஜீவின் உயிருக்கு ஆபத்து இல்லை என்று சொல்லி விட முடியாது. 86 அக்டோபர் 2ஆம் தேதியும், கொழும்புவில் 89லும் அவர் மீது குறி வைக்கப்பட்டது.

பதினாறு மாதங்களிலேயே இரண்டு அரசாங்கங்கள் மாறின. ஏப்ரல் 91ல் புதுத் தேர்தல்களுக்கான அறிவிப்புகள் வெளியாயின.

மே 20 ஆம் தேதி காலை எங்கள் வோட்டுக்களைப் போட்டோம். 'காங்கிரஸ் கட்சியின் சின்னத்தை அந்தப் பிரும்மாண்ட வாக்குச் சீட்டில் தேடித் தேடி, நான் பயந்தே போனேன் முதலில்' என்று திரும்ப வரும் போது சொன்னதும், ராஜீவ் புன்னகைத்தார். ஆதுரத்துடன் கையைப் பிடித்துக் கொண்டார். 'நான் இருக்கிறேன், பயப்படாதே' என்பது மாதிரியான அழுத்தமான பிடிப்பு அது.

அன்று பிற்பகல், அவர் ஒரிசாவிலிருந்து மாலை தில்லி வருவதாகச் செய்தி வந்தது. தேர்தல் சுற்றுப் பயணத்திடையே எதிர்பாராத வருகை. ரொம்ப சந்தோஷமாக இருந்தது. ராகுலிடம் கருக்கமாக போனில் பேசினார். பிரியங்காவிடம் 'குட்பை' சொன்னார். என்னிடம், ''இன்னும் இரண்டே நாள்தான்!'' என்று விடைபெற்றுக் கொண்டார். மறுபடி கிளம்பி விட்டார். விமானத்தின் சன்னல் திரையை விலக்கி அவர் கையசைத்தார்.

பார்த்துக் கொண்டே இருந்தேன், அவர் பார்வையிலிருந்து மறையும் வரை. இம்முறை நிரந்தரமாக.

தொகுப்பு : சாருகேசி

ஆதாரம் : 'ராஜீவ்' - சோனியா காந்தி எழுதிய நூல்

வெளியீடு : வைகிங் - பெங்குவின் புக்ஸ் இந்தியா (பி) லிட்., விலை : ரூ 1500/-

SANSKRIT THROUGH CORRESPONDENCE

# संस्कृतम्

# சமஸ்கிருதம்

தபால்மூலம் 6 மாதகால தமிழ் ஆங்கில வாயிலாக சிறப்புப் பயிற்சி

SANSKRIT THROUGH CORRESPONDENCE

**சமஸ்கிருத** மொழியை இப்பொழுது நீங்களும் தபால் மூலம் ஆறே மாதங்களில் பேச, எழுத படிக்கக் கற்றுக்கொள்ளலாம்

தேர்ச்சிபெற்ற சமஸ்கிருத பண்டிதர்களால் இயற்றப்பட்ட பாடங்கள் மாதம் ஒரு முறை தபால் மூலம் அனுப்பப்படும். நூற்றுக்கணக்கானோர் இப்பயிற்சியில் சேர்ந்து தேவ மொழியான சமஸ்கிருதத்தை கற்றுக் கொண்டுள்ளனர். ஏன் நீங்களும் இன்றே சேர்ந்து ராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை போன்ற காவியங்களை சமஸ்கிருத மொழியிலேயே படித்து பயன் பெறலாமே! அவைகளில் நல்ல செய்திகள் அடங்கியுள்ளன.

**இலவச Prospectus பெற 1/-ரூ தபால்தலையுடன் இன்றே எழுதுங்கள். இறுதி தேதிக்குள் சேரும் அனைவருக்கும் பரிசு புத்தகம் ஒன்று உள்ளது என்பதனை நினைவில் நிறுத்துங்கள்.**

**INDIANA SANSKRIT ACADEMY**
C/o. INDIANA ACADEMY OF MANAGEMENT SCIENCES,
Post Box No. 1108, Bhashyakarlu Road,
Coimbatore - 641 002, Tamil Nadu.

நீங்க நேத்து மாட்ச் பார்க்கலியா...
அதுல முக்கியமா பார்த்திருக்க வேண்டியது இதுதான்!




Avenues HH 1287 92

## வடக்கு வாசல் :

# நெ.1. அதிகாரி நாமக்கல் ராஜகோபால்



✱ நாமக்கல் ராஜகோபால் : நெ. 1. அதிகாரி!

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கிடையே மூத்த அதிகாரி, காபினெட் செக்ரடரி. இந்தப் பதவிக்கு யார் தேர்ந்தெடுக்கப் படுவார் என்பது பெரும் சர்ச்சைக்குரிய செய்தியாக இருந்தது. நிதித்துறைச் செயலர் கீதா கிருஷ்ணனாவது, அன்றி ஒலிபரப்புத் துறைச் செயலர் மகேஷ் பிரசாதாவது அடுத்த காபினெட் செக்ரடரி ஆக்கப்படலாம் என்று பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் இக்கூற்றையெல்லாம் பொய்யாக்கி, நம்மூர் நாமக்கல்லில் பிறந்த எஸ். ராஜகோபாலைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் பிரதமர். இவர் கர்நாடகத்தில் படித்து, மகாராஷ்டிரத்தில் பல துறைகளில் பணியாற்றியவர். அமைதியாக, ஆரவாரமின்றிச் செயல்படும் திறமை பெற்றவர். தமது மிருதுவான பேச்சால் அனைவரையும் கவர்பவர். காலஞ்சென்ற இவரது தந்தை ஒரு பத்திரிகையாளர். 86 வயதான இவரது தாய் கன்னடத்திலிருந்து இந்தியில் பல மொழி பெயர்ப்புகளைச் செய்தவர். தேசியத்தில் ஊறிய குடும்பம்.

## சலாம் தில்லி!

தில்லியின் நடைபாதைகளில் வாழும் சிறுவர்களைச் சமுதாயப் பணி நோக்கில் ஒன்றுதிரட்டிய ரீடா பணிக்கர், தமது இயக்கத்துக்குச் சூட்டிய பெயர் வண்ணத்துப் பூச்சி! நண்பர்கள் உதவியுடன், அவர்களுக்குத் தன்மானத்துடன் வாழும் வழியைக் கற்பிக்கிறார் ரீட்டா. வண்ணத்துப் பூச்சிகள் தில்லியின் ஆறு இடங்களில் ஒவ்வொரு திங்கட் கிழமையும் மாலை ஏழு மணிக்குக் கூடி, தங்கள் பிரச்னைகளை விவாதிக்கிறார்கள். அப்போது யோசனை கூறி வழிகாட்ட ஒரு கல்வியாளர் அவர்களுடன் இருப்பார்! வண்ணத்துப் பூச்சிகள் தில்லியின் மிகப் பெரிய பேருந்து நிலையத்தில் (Inter State Bus Terminus) ஒரு உணவு விடுதி நடத்துகிறார்கள். மிகக் குறைந்த விலையில் (ரூ 5/-) உணவு படைக்கிறார்கள். குறுகிய காலத்தில் பிரபலமாகி விட்டது இந்த உணவகம். வண்ணத்துப் பூச்சி இயக்கத்தைத் தொடங்கிய ரீடா பணிக்கர்; பம்பாயில் டாடா இன்ஸ்டிட்யூட் ஆஃப் சோஷியல் வொர்க் நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்; ஏராளமான சம்பளமுள்ள வேலையை உதறி விட்டுத் தொண்டு செய்யவே தில்லி வந்தவர்.

## மண்ணின் மைந்தர்கள் கொள்கை :

புதுதில்லியில் அண்மையில் நடந்த 41-வது தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் ஒரிஸ்ஸா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரம் போன்ற சில மாநிலங்கள் கையாளும் 'மண்ணின் மைந்தர்கள்' கொள்கை விவாதிக்கப்பட்டது. இந்த மாநில அரசுகள் வேற்று மாநிலத்தவருக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுப்பதில்லை. பல தொழில் அமைச்சர்கள் 'எப்படி இக் கொள்கை அரசியல் சட்டத்தின் 16-வது பிரிவுக்கு முரணானது' என்று சுட்டிக்காட்டினர்.

மத்திய தொழில் அமைச்சர் சாங்மா இது குறித்து மாநில அரசுகளுக்கு எழுதியிருப்பதாகச் சொன்னார். அப்படியும் அவர்கள் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், இது தேசிய அளவில் இன்டர் ஸ்டேட் கௌன்ஸிலிலும், தேசிய ஒருமைப்பாடு கௌன்ஸிலிலும் விவாதிக்கப்படும் என்றார். பாரதம் 'ஒரு நாடு' என்பது இன்னும் விவாத அளவிலேதான் இருக்கிறது!

## வடக்கு ரயில்வே கொடுக்கும் வசதி :

ஆர். ஏ. வி. அல்லது வெயிட்டிங் லிஸ்ட்டில் உள்ள பயணிகள் இனி தங்கள் வீட்டில் அமர்ந்தவண்ணமே, டீ.வி.யின் ஸ்விட்சைத் தட்டி, தங்கள் ரயில் ரிசர்வேஷன் நிலைகுறித்துத் தெரிந்து கொள்ளலாம். 27 முக்கிய மெயில், எக்ஸ்பிரஸ் புகைவண்டிகளின் ரிசர்வேஷன் நிலை குறித்த செய்தியை டீ.வி. இரண்டாம் சானல் மூலம் டில்லிவாசிகள் அறியலாம். தங்கள் டீ.வி. செட்களில் 'டெலிடெக்ஸ் டீகோடர்' என்ற சாதனத்தைப் பொருத்திக் கொண்டால் போதும், அடுத்த 28 தினங்களுக்கான 'ரிசர்வேஷன் நிலமை' குறித்து அறிந்து கொள்ள முடியும்.

## 'அழுது' சாதித்த எம். பி.!

தில்குமாரி பந்தாரி 'சிக்கிம் சங்கராம் பரிஷத்' என்ற கட்சியின் எம். பி. இவரது தாய்மொழியான நேபாளி மொழி பற்றியும், இவரைப் பற்றியும் இந்தர்ஜித் என்ற மற்றொரு எம். பி. தரக்குறைவாகப் பேசிவிட்டதால், இவர் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்து லோக் சபைக்குள்ளிருக்கும் 'Well' பகுதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தார். இந்தர்ஜித் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் ஆனதால், காங்கிரஸுக்குத் தர்மசங்கடம். பல பெண் எம்.பிக்களை தில்குமாரியிடம் தூது அனுப்பி, அவரது அழுகையை நிறுத்த முயன்றது; பயனில்லை. சாகும் வரை அங்கேயே உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்தார். மந்திரி சபையின் சார்பில் ரங்கராஜன் குமாரமங்கலம், 'நேபாளி மொழியைத் தேசிய மொழியாக்கும் சட்டமசோதா மறுநாள் மக்கள் சபையின் முன்வைக்கப்படும்' என்று அறிவித்த பின்தான் அவரது உணர்ச்சிப்பெருக்கு அடங்கியது. நேபாளி மட்டுமல்ல, மணிபுரி, கொங்கணி மொழிகளையும் தேசிய மொழிகளாக்கும் திட்டம், அரசியல் சட்டத்தின் எட்டாவது ஷரத்தில் சேர்க்கப்பட்டு, மறுநாள் சட்டமாக்கப்பட்டது.

## குரங்கு வேட்டை!

தில்லி செங்கோட்டையில் குரங்குகளின் அட்டகாசம் அதிகம். 'சுதந்திர தினத்தன்று பிரதமர் உரையாற்றும் போது இவை குறித்து, 'லூட்டி' அடித்தால் என்ன செய்வது?'' என்று தில்லி போலீஸ் கவலைப்பட்டது. குரங்குகளை முன் தினமே 'அரெஸ்ட்' செய்து, கூண்டுக்குள் அடைப்பது ஒன்றே வழி என்று முடிவு செய்தது. குரங்கு வேட்டையில் இறங்கிப் பெருத்த சிரமத்துடன் இவற்றைக் கூண்டுக்குள் அடைத்தனர் போலீஸார்.

– ராஜீவி நரசிம்மன்

## அங்கும் அப்படியா?

பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் தொடக்க தினத்தன்று, தீநாக்குடன் கூடிய அம்பு தொலை தூரம் மேல் நோக்கிச் சென்று, ஒலிம்பிக் தீப்பந்தக் கலயத்தில் குறி பிசகாமல் விழுந்து அதனைப் பற்றி எரியச் செய்த காட்சியை டீ.வியில் பார்த்தவர்கள் அதற்குள் மறந்திருக்க முடியாது. அந்த அம்பை எய்தவர் போலியோவால் ஊனமுற்ற அன்டோனியோ ரிபெல்லோ என்ற வீரர். இவர் ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் பெற்றுள்ளார். தொழில் தச்சு வேலை. தன் தொழிலை விட்டு விட்டு, ஒலிம்பிக்ஸில் இந்நிகழ்ச்சியைச் சரியாகச் செய்வதற்காகக் கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் கடும் பயிற்சி செய்தார். இதனால் தொழில் ரீதியில் இவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கூட ஒலிம்பிக்ஸ் அதிகாரிகள் ஈடு செய்யவில்லையென்றும், போட்டிகள் ஆரம்பித்த பிறகு அவர்கள் தன்னைச் சரியாக நடத்தவில்லையென்றும் ஒரு போட்டியைக் காணக் கூட (வில்-அம்பு போட்டிகள் உட்பட) டிக்கெட் தரவில்லையென்றும், அவர் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்!

இந்தியாவில்தான் இப்படியெல்லாம் நிகழும் என்று எண்ணியிருந்தோம். மேல்நாடுகளிலுமா?

- என். சூரியப்பிரகாஷ்

# 7

மணி பார்த்தான். ஏழு இருபத்தெட்டு. மனைக்குள் ரத்னம். சாப்பிடாமல் காத்திருப்பாள். கெஞ்சலாய்க் கெஞ்சிய அவளது குரல், மனசைப் பிடுங்கியது.

''ம்..ம்..ம்... போக முடியாது போலிருக்கே. இன்னும் வேலை முடியலியே'' என்று வாய் விட்டு முணங்கிக் கொண்டான், அருஞ்சுனை.

ஆபீஸுக்கு வெளியே எட்டிப் பார்த்தான்.

லாரியில் லோடு பண்ணி முடித்தாகி விட்டது. இரண்டாள் உயரத்திற்கு லோடு. பூராவும் தீப்பெட்டிப் பண்டல். பண்டல் தெரியாமல் முழுக்க தார்ப்பாய்கள். தார்ப்பாயின் மேல் கட்டில் நார்ப் பின்னல் மாதிரி இறுக்கிக் கட்டப்பட்டிருந்த கயிறு.

டிரைவர் வீட்டிற்குப் போயிருக்கிறான். 'போனதும் வாரேன்' என்று சொல்லி விட்டுப் போனவன், இன்னும் வந்து சேரவில்லை. இன்றைக்குப் புறப்பட்டால், திரும்பி வர பதினைந்து நாட்களுக்கு மேலாகி விடும்.

பெண்சாதியிடம் பிரிவு சொல்வதில் தாமதமா? தேவையான வீட்டுச் சாமான்கள் வாங்கிப் போட்டு விட்டு வருவதில் தாமதமா?

இதில் தாமதப்பட என்ன இருக்கிறது? செலவுக்காக ரூபாயைக் கொடுத்து விட்டு, வந்து சேர வேண்டியதுதானே!



அருஞ்கனைக்கு வயிறு பசித்தது. 'கப கபா' என்றது. ஆபீஸ் ரூமை விட்டு வெளியே வந்தான்.

குழந்தைகள், பெண்கள் எல்லோரும் போய் விட்டனர். விரிந்து பரந்த வெட்ட வெளியான ஹால். 'ஹோ'வென்று வெறுமை கூச்சலிட்டது.

ஒட்டிக் கிடக்கிற பெட்டிகள், அட்டைகள், தாள் கட்டுக் குவியல்கள், பார்சல்கள், மூட்டை முடிச்சுகள், எல்லாவற்றையும் உள்ளூர் ஊழியர்கள் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

''ஏப்பா....''

ஒருவனை அழைத்தான்.

''என்ன மோலாளி''

வெறுப்பில் இவன் முகத்தைச் சுளித்தான்.

''போய்... டிரைவரை சீக்கிரம் வரச் சொல்லிட்டு வா.''

''சரி மோலாளி'' என்றவன், எதற்கோ தயங்கினான். முகத்தில் குழப்பம். கண்களில் பயம்.

''என்னப்பா?''

''இல்லே மோலாளி... டிரைவர் வீடு...''

''வீடு தெரியாதா? பைபாஸ் ரோட்டுலே காந்தி தெரு. போய் விசாரிக்கப் பாரு. தெரியும்.''

''ஆட்டும் மோலாளி.''

வெளியே வந்த அருஞ்கனைக்குள் 'மோலாளி' என்ற உச்சரிப்பு வெறுப் பூட்டியது.

''முதலாளி என்று ஒழுங்காச் சொல்லணும். இல்லேன்னா, அண்ணாச்சின்னு சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே! மோலாளியாம், மோலாளி! ச்சே!''



மெயின் பஜாருக்கு வந்தான். சோடியம் விளக்கின் வெளிச்சத்தின் அழுக்கான மஞ்சளில், எல்லாம் பொய் பொய்யாகத் தெரிகின்றன.

அருஞ்கனை ஒரு ஹோட்டலில் நுழைந்தான். வழக்கமான ஹோட்டல். காலியாய்க் கிடந்த மேஜையின் முன் உட்கார்ந்தான்.

சமையல் ரூமிலிருந்து கல்லாப்பெட்டி நோக்கி வந்த முதலாளி, இவனைப் பார்த்து, ''வாங்க அண்ணாச்சி'' என்று வரவேற்போடு புன்னகையைக் குளிர்ச்சியாக உதிர்த்தார். போகிற போக்கில் காற்றாடியின் சுவிட்சை தட்டி விட்டார்.

''அண்ணாச்சி, என்ன கொண்டாரா?'' அந்நியோன்யமாய் நெருங்கி நின்று கேட்கிற சப்ளையர்.

''என்ன ஸ்பெஷல்?''

''ஜாங்கிரி, தூள் பஜ்ஜி.''

''சரி... கொண்டா.''

அந்தச் சிறிய ஹோட்டலில் மொத்தம் பத்து மேஜைகள்தான். அதிலும் மூன்று காலி. ஜாங்கிரியைப் பிய்த்து, துண்டு துண்டாக்கி, சாவகாசமாய் வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

சற்று முன்னால் - பக்கத்து மேஜையில் ஓர் இளம் குடும்பம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

மேலாண்மை பொன்னுச்சாமி



''குழந்தை ஏன் கணக்குப் போடாமல் சிலேட்டை வச்சுக்கிட்டு அழுதுக்கிட்டு இருக்கான்?''

''கால்குலேட்டர் வாங்கிக் கொடுக்கணுமாம்!''

- வெ. பத்மாவதி

பெண்ணின் குறுகலான முதுகும், மடிப்பு விழாத தேன்கலர் இடுப்பும் தெரிகிறது. அவளது இடது புஜத்தில் தலையை வைத்து, விரலைச் சூப்புகிற மழலை.

சிவந்த பிள்ளை. பூ மாதிரியான முகம். மிருதுவான கன்னம். சுருள் சுருளான பஞ்சு முடி. மின்விசிறியின் காற்றுக்கு அந்த முடி ஆடுகிற போது... மனசுக்குள் விரிகிற மாய அழகு. மன ஆழத்தில் மெல்லுணர்ச்சியைச் சீண்டி எழுப்புகிற அழகு.

அந்தப் பஞ்சு முடியில் முகம் புதைத்து முத்தமிட வேண்டும் என்று அருஞ்சுனையின் மனம் உன்மத்தம் கொள்கிறது. சூழல் பிரக்ஞையை முழுங்கடித்து, ஓங்காரமாய் எழுந்து ஆட்டுவிக்கிற உன்மத்தம்.

சின்னக் கண்களில் ' கருந்திராட்சை உருண்டைகளாக உருள்கிற விழிகள். இவன் மீது வந்து, தொட்டுத் தொட்டு விளையாடுகிற விழிகள். இவனது உள்மனத் தாபங்களுடன் சீண்டி விளையாடி, பாஷைகள் பேசுகிற அதன் குறுவிழிகள்.

சூப்புகிற விரலை எடுக்காமலேயே எச்சிலை வடித்துக் கொண்டு, சின்ன உதடுகளை விரித்து, அந்த உயிர்ப்பூ சிரிக்கிற அழகு...

இவனது ஆவியே துடித்தது.

அந்தக் குழந்தையை அப்படியே அள்ளணும். தூக்கிப் பிடித்து விளையாடிக் கொஞ்சணும். ரோமங்கள் அடர்ந்த தன் மார்பில் அதைப் போட்டுச் சீராட்டணும்.

அவனுள் துடிக்கிற உயிர். இதயமே விம்மி வீங்கி வெடிக்கப் போகிற மாதிரியானதோர்... உணர்வு.

உருட்டிய வெண்ணெய் உருண்டையாகக் குழந்தையின் வயிறு. அதன் மென்மைக் குளிர்ச்சியில் மீசை ரோமங்களும் உதடுகளும் அழுந்த அழுந்தப் பதித்து, முத்தமிட... அதன் கூச்சத்திலும், மகிழ்ச்சியிலும் தாளாமல் கிணுகிணுத்து, குழந்தை சிரிக்க... வழிகிற மழலையின் எச்சில் நெற்றியில் தேனாய் விழுந்து வழிந்தால்...

ஆகா! அந்தச் சுகம். வார்த்தைகளுக்குள் பிடிபடாத தேவசுகம். விளிம்புகளே இல்லாத ஆகாயச் சுகம்.

அவன் நெஞ்சம் பொங்கித் ததும்பியது. கற்பனைச் சுகத்தில் கனிந்து, கனம் குறைந்து, அடிக்காமல் சிறகு விரித்த நிலையில் அந்தரத்தில் மிதக்கிற மாதிரியோர், உணர்ச்சி.

எல்லைகளற்ற இந்த ஆகாயச் சுகத்தை சொந்தமாக அனுபவிக்கிற உரிமையைத் தரவில்லையே ரத்னம். மலட்டு ரத்னம்.

''அண்ணாச்சி, காப்பி ஆறுது!'' வேலைச் சுழற்சியின் வேகத்தில், போகிற போக்கில் சப்ளையர் உசுப்பி விட்டுப் போகிறான். உள் உலகத்திலிருந்து உதிர்ந்து, அதிர்ச்சியோடு நிஜ உலகத்தில் வந்து பொத்தென்று விழுந்தான். காப்பியின் மேல் மெல்லிய ஆடை நெய்யப்பட்டிருந்தது.

உயிர் கழன்ற பிரேதமாகக் காப்பியை ஆற்றினான். மிடறு மிடறாக விழுங்கினான். ஜாங்கிரி இனித்ததா, பஜ்ஜி உறைத்ததா, காப்பி வாசனையில் மனசு கால் வைத்ததா? எதையும் அவன் உணரவேயில்லை.

மனசு முழுக்க நிரம்பியிருந்த நிஜம், கசப்புதான். மூளை முடுக்கெல்லாம் பிடுங்கிப் போடுகிற கசப்பு. தனது மொத்த வாழ்க்கையே சபிக்கப்பட்டு விட்டதை உணர்ந்த கசப்பு.

விமோசனமேயில்லாத சாபக் கசப்பு. அகலிகைக் கல்லாக உறைந்து போய் விட்ட வாழ்க்கை. சிருஷ்டிப்புக்கான ஜீவ அணுக்கள் இல்லாமல் போய், கல்லாகிக் கிடக்கிற வாழ்க்கை.

வாரிசு இல்லை.

சொத்துக்காக மட்டுமா, வாரிசு? மனிதன் வாழ்ந்ததற்கான அடையாளமே, வாரிசுதானே!

தனது ஜாடைகளை - சுபாவங்களை - உயிரைச் சுமந்து நின்று, தன் முகத்தைக் காட்டுகிற ஒரு குழந்தைக் கண்ணாடி. தனது நிழல். தனது ரத்தத்தின் உயிர் வடிவம்.

அது இல்லை. தனது நிழல் இல்லை. நிழலை உருவாக்கக்கூடிய வெளிச்சம் தன் மேல் விழவில்லை.

தன் மீது விழுந்ததெல்லாம், ரத்னம் என்ற இருட்டுத்தான். நிழலைச் சிருஷ்டிக்க முடியாத இருட்டு. உயிரினத்தைச் சவிப் பூட்டி உறக்கத்தில் உறைய வைக்கிற இருட்டு. விடிய வழியேயில்லாத இருட்டு. விலக இடமில்லாத அடர்ந்த இருட்டு.

இரண்டு சொத்தையும், பேக்டரியையும் ஆள்கிற அந்தஸ்தை வழங்கி விட்டு, அதற்கு விலையாக நிழல்களைச் சிருஷ்டிக்கும் ஜீவ வெளிச்சத்தைப் பறிமுதல் செய்து விட்டுப்

போய்ச் சேர்ந்த மாமாவை... நினைத்துப் பார்த்தான்.

காறித் துப்ப வேண்டும் என்கிற உணர்ச்சி. காப்பியின் அடர்த்தி நாவில் படர்ந்ததாலா, மனசின் உள் வெறுப் புணர்ச்சியாலா?

செருமினான். காறித் துப்பினான்.

அகலிகைக் கல்லாய் உறைந்து போய் விட்ட - மலடாகிப் போன - தன் வாழ்க்கை மீளுமா? உயிர்ப்பிக்கிற ஆற்றல் பெறுமா? உயிர்களை உருவாக்குமா? எந்த ராமன் காலடிபட்டுச் சாப விமோசனம் பெறப் போகிறது? பெறாமலேயே போய் விடுமா?

ரத்னம் செத்துப் போனால்...

மனசுக்குள் குப்பென்று குளிர் காற் றாய்ப் பரவுகிற விடுதலை உணர்ச்சி. சாபத் திலிருந்து விடுதலை. சட்டபூர்வமான - சமுதாய ரீதியான - விடுதலை.

நினைவை உலுக்கிக் கொண்டான்.

ச்சே! இது என்ன மனுஷத்தன்மையில் லாத நினைப்பு? மிருகத்தனத்தை விட இழிவான நினைப்பு. அன்பையும், பாசத் தையும் அள்ளி வழங்கி விட்டு, பூனைக் குட்டியாய்ப் பொக பொகவெனக் காலைச் சுற்றும் ஒரு வெகுளியான பெண்ணைக் கொன்று, அதற்குப் பின்வருகிற உயிர்ப்பு, ஓர் உயிர்ப்பா?

மிருகத்தனத்திற்கு ஒரு மழலை வேண் டும்? வாரிசு வேண்டும்? மிருகத்தனத்தை விட கொடிய இழிவில் பிறக்கிற அந்தக் குட்டி மிருகம், ஒரு மழலைக்குரிய மகிழ்ச் சியைத் தருமா?

மனசு ஊனப்படுமே! ஒரு கொலை பாதகத்தின் ஞாபகச் சின்னமாய்க் கையில் கிடக்கும் அந்த மழலை மிருகம், மன அமைதியைக் கடித்துக் குதறுமே!

ச்சே! என்ன இது. பேய்த்தனமாய் மனசு அலையுது?

ரத்னம், நீ மலடுதான். அட்டுப் பிடித்த கறுப்புதான். உன் அப்பாவால் என் மீது சுமத்தப்பட்ட சாபம்தான். ஆயினும், நீ ஒரு மனுஷி. என் உயிரைப் பின்னிக் கிடக்கிற மனைவி. என் மீது பாசத்தையும் பக்தி யையும் பொழிவதில் நிறைவு காணுகிற பேதை. என் அன்பிலும் ஆதரவுக் கதகதப்பிலும் நம்பிக்கை உயிர் வளர்க்கிற பெண்.

உன்னிடம் கல்மிஷமில்லையே... நீ மலடாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருக்கவில்லையே...

நீ சாகக் கூடாது. உன் சாவின் மூலம் வருகிற விடுதலையும் ஒரு விடுதலையல்ல. அதுவும் ஒரு சாபம்தான். ஆயுள் பரியந்த மும் மன அமைதியைத் தின்று - ஆத்மா வைக் கடித்துக் குதறும் கொடிய சாபம்தான்.

அருங்கனை சாலையைப் பார்த்தான். ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டான். நினைவுகளின் நெரிசலில் மனம் மூச்சுத் திணறியது.

ஆழ்ந்த பெருமூச்சோடு நடந்தான். சுமையாக அழுத்தித் திணறடிக்கிற நினை வைக் கலைத்தால் நல்லது. நினைவைக் கலைக்கிற மாதிரி யாரிடமாவது பேச்சுக் கொடுத்தால் நல்லது. அது ஒரு வடிகாலாக அமையும்.

சாலையைக் கடந்தான். போகிற போக் கில் யாரோ அவனுக்கு 'விஷ்' பண்ணி யதைக் கவனித்தான். தலையை அசைத்து, மௌனமாகச் சிரித்தான்.

ஆபீஸுக்கு வந்தான்.

இவன் தலையைக் கண்டதும் லாரி டிரைவர் பிடித்துக் கொண்டிருந்த பீடிக் கங்கை மறைவாக நசுக்கினான். தலைப் பாகையை அவிழ்த்தான்.

''மோலாளி, வீட்லே கொஞ்சம் நேர மாயிருச்சு.''

''பரவாலே. வந்தாச்சல்லே? பொறப் படுங்க.''

''சரி மோலாளி.''

''கச்சாத்து எல்லாம் வாங்கியாச்சா?''

''கணக்குப் பிள்ளை குடுத்தாரு.''

''செலவுக்குப் பணம் வாங்கியாச்சா?''

''ம்...''

''போதுமா?''

''ம். போதும் மோலாளி.''

''சரி, பொறப்படுங்க. சரக்கு பத்திரம். ஜாக்கிரதையாப் போகணும். கரெக்டா டெலிவரி பண்ணணும்.''

''ஆட்டும் மோலாளி.''

(தொடரும்)


''காசில்லாம சாப்பிட்டுட்டு மாவாட்றானே, அந்நாளுக்கு ஏகப்பட்ட திமிர் முதலாளி...''

''அப்படி என்ன சொன்னான்?''

'' 'கொரிக்கக்கிட்டே மாவாட்டறேன், கொஞ்சம் காராசேவ் அள்ளிக்கிட்டு வா'ன்னு சொல்றான் முதலாளி!''

- சீர்காழி வி. ரேவதி





# தடங்கல்

அடுத்தாற்போல் அந்தக் கிழவர் உள்ளே வந்தார்.

'ஏமாளி....' என்று முதல் பார்வையிலேயே புரிந்து விட்டது. கொஞ்சம் பயம். கொஞ்சம் தயக்கம். சந்தேகத்துடன் நாற்காலியைப் பார்த்தார். 'நம்மைப் போல் உள்ள ஆள் இதிலெல்லாம் உட்காரலாமோ.... கூடாதோ....!'

''உட்காருங்க....'

''என் பொண்ணு வெளியிலே நிற்கிறா...! அவளையும் கூப்பிடறேன்.''

கதவைத் திறந்து போய் மறுபடி வந்தபோது, அந்தப் பெண்ணும் உள்ளே வந்து கிழவர் காதருகில் கிசுகிசுத்தாள்.

''ஹால் முழுக்க சாமானா அடுக்கி வைச்சிருக்கா! கிரைண்டர், மிக்ஸி, ப்ரிஜ், பீரோ, டீ.வி... எல்லாம் புத்தம் புதுசா!'' கண்கள் அகல விரிந்தன. ஆச்சரியத்தைக் கொட்டின.''

''அவசரப்படாதே! வாங்கலாம்.''

கிழவர் இவனிடம் திரும்பினார். ''உங்க கம்பெனியைப் பத்தி எல்லா விவரங்களையும் பக்கத்து வீட்டுப் பையன் சொல்லியிருக்கான். 'ஆயிரம் ரூபாய் பணம் கட்டினால், மூணு மாசத்தில் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான பொருள்கள் கிடைக்கும்'னு...'' நிறுத்தினார். 'உண்டா இல்லையா, சொல்லு' என்பது போல் இவனைப் பார்த்தார்.

இவன் பதில் எதுவும் சொல்லவில்லை. அந்தப் பெண்ணை ஒருதடவை பார்த்தான். இவனது கடைசித் தங்கையைப் போலவே பளிச் சென்று என்ன அழகு...!

''இவ கலியாணத்துக்குப் பார்த்துண்டு இருக்கோம். வர ஆவணியிலே அநேகமா முடிஞ்சுடும். பகவான் மனசு வைக்கணும்? குதிர்ந்தால் எல்லாச் சாமானும் உங்க கடையிலேதான் வாங்கப்போறேன்!''

இவனது தங்கை ரோகிணிக்கும் ஆவணியில்தான் கல்யாணம் நிச்சயித்திருக்கிறது. அவளைப் போலவே இந்தப் பெண்!

இண்டர்காம் ஒலித்தது. எடுத்தான். பெரியசாமியின் குரல்.

''எவ்வளவு வசூல் இன்னிக்கு...?''

''ஒரு லட்சம் இருக்கும் முதலாளி....!''

''அவ்வளவுதானா?'' குரலில் ஏமாற்றம் ஒலித்தது. இத பாரு. இன்னிக்குக் கடைசி நாள். வரவங்களை வளைச்சுப் போடு. விட்றாதே... ஒரு லட்சம் என்கிறது ரொம்பக் குறைச்சல். ஆச்சா... கோபால் லாரிக்கு ஏற்பாடு பண்ணிட்டான். ராத்திரி பத்து மணிக்கு வந்திரும். எல்லாத்தையும் சப்ஜாடா ஏத்திக் கொண்டு போயிடணும். திங்கட்கிழமை காலையிலே யாராவது கடைக்கு வந்தால்...?'' அவர் சிரிப்பது கேட்டது.

அவர் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இவனுக்குத் தெரிந்ததுதான். இவர்களுடன் இரண்டு மூன்று ஊர்களில் வேலை செய்ததில் புரிந்திருந்தது. பெரியதாக போஸ்டர் - நோட்டீஸ் அடிப்பார்கள். அரசியல்வாதியை அழைத்து வந்து அமர்க்களமாகத் திறப்பு விழா நடக்கும். பரிசுக் குலுக்கல் இருக்கும். குளிரக் குளிரப் பேசுவார்கள். நம்பிக்கையை வளர்ப்பார்கள். எல்லாம் மூன்று மாதம். எண்ணித் தொண்ணூறு நாள். இரவோடு இரவாகக் கடை காலியாகி விடும். பணம் கொடுத்தவர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ள.... திரும்பவும் வேறொரு ஊர்.... மனிதர்கள்...!

ஆயிரம் ரூபாய்ச் சம்பளம்! இதற்காகக் குறைந்தது ஆயிரம் குடும்பங்களையாவது மோசம் செய்ய வேண்டியிருக்கிறது....!

கிழவரைப் பார்த்தான். அப்பாவி...! பார்க்கப் பார்க்க வருத்தமாக இருந்தது. அந்தப் பெண்ணோ தங்கையையே நினைவூட்டிக் கொண்டிருந்தாள். இவர்களை ஏமாற்றத்தான் வேண்டுமா? ஏதாவது செய்து காப்பாற்றலாமா!

''போன மாசம்தான் டிரான்ஸ்போர்ட் கம்பெனியிலேர்ந்து நான் ரிடையர் ஆனேன். பிராவிடெண்ட் பண்டு - கிராஜுவிடின்னு ஒரு முப்பதாயிரம் போல வந்திருக்கு. உங்க கிட்டே கொடுத்தால், மூணு மாசத்திலே இரட்டிப்பா ஆகும்னு சொன்னா. கிடைச்சால், இவ கல்யாணத்துக்கு உதவும் இல்லியா....''

'அடப்பாவி...' என்றிருந்தது. இத்தனை வருஷம் இரவும் பகலும் ரத்தம் சிந்தி

ஜி. நாராயணன்

உழைத்துக் கிடைத்த காசை இங்கே வந்து கொட்டுகிறேன் என்கிறாயே. இது யானை வாய். கரும்பு கொடுத்தால் திரும்பாது. போனால் போனதுதான்... இவரை எச்சரிக்கலாமா? எடுபடுமா...?

''பாங்கிலே போட்டால் பணமும் சேஃபா இருக்கும். வட்டியும் கிடைக்கும்! இல்லியா?''

யாராவது இதைக் கேட்டிருப்பார்களோ? ஒரு பயத்துடன் சுற்று முற்றும் பார்த்தான்.

''பாங்கிலே எத்தனை கொடுக்கப் போறான்... கண்டைக்காய்! இங்கே நல்ல வட்டி கிடைக்கிறதே...!''

''இருந்தாலும் 'ரிஸ்க்' தானே....?''

''எதிலே ரிஸ்க் இல்லே?''

வெளிப்படையாகச் சொல்லி விடலாமா...? 'ஐயா... உமக்கு இது ஒத்து வராது. நடையைக் கட்டும்... என்று' நேரே முதலாளியிடம் போய்ச் சொல்லி விட்டால்...?

''என்ன மாதிரி 'ஸ்கீம்ஸ்' இருக்கு..?'' அந்தப் பெண் கேட்டாள்.

ஒவ்வொன்றாகச் சொன்னான். அப்ளிகேஷன்களைக் கொடுத்தான். 'பெண்ணே, நீயாவது கொஞ்சம் அறிவுடன் நடந்து கொள். பேராசைக்குப் பலியாகாதே அந்தப் பட்டியலில் சேராதே. வேண்டாம்! 'பளபளப்பை'ப் பார்த்து மயங்காதே. உன் கல்யாணம் நடக்க வேண்டுமா? எழுந்திரு! சொல்லாமல் கொள்ளாமல் வந்த வழியே போய்விடு.'

''பிக்சட் டிபாஸிட்லே பணத்தைப் போட்டால், அதையும் இரண்டு மடங்காத் தரா, அப்பா!''

இது எப்படி முடியும் என்று ஒரு விநாடி நேரம் யோசனை பண்ணிப் பார்த்தாயா? கேட்டாயா? நாங்கள் என்ன பிரிண்டிங் மெஷினா வைத்திருக்கிறோம்... அடித்து உங்களிடம் தர! பத்திரிகையெல்லாம் படித்திருப்பாயே... எத்தனை வருகிறது! குஷ்புவையும் பிரபுவையும் படிக்கிற நேரத்தில் இதையும் கொஞ்சம் படித்திருக்கக் கூடாதா? தெரிந்து வைத்திருக்கக் கூடாதா?

கிழவர் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு பார்த்தார். பேனாவை எடுத்தார்.

''நான் சொல்றது என்னன்னா...? எல்லாத்தையும் ஒண்ணுலியே போட வேண்டாம்... அது ரிஸ்க்! ரெண்டாப் பிரிச்சு... பணமும் கிடைக்கிற மாதிரி. பண்டமும் கிடைக்கிற மாதிரி! என்ன சொல்றே?''

'இதைத் தடு... எப்படியும் தடுத்து விடு... வாழ்க்கையில் ஒரே ஒரு நல்ல காரியம் செய்!' இவன் மனம் துடித்தது.

''இன்னிக்குச் சனிக்கிழமை. கரிநாள்



உங்களின் சேமிப்பு தொழில் வளத்தையும்
உங்கள் வீட்டின் வளத்தையும் பெருக்கும்!

# ''லில்லி'' உள்பாவாடைகள்

தயாரிக்கும்

## ''கரூர் P.R.C. கார்மெண்ட்ஸ்ஸாரின்''

தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குப் பயன்தரும்
''புதுமைத் திட்டம் எண். 2''ல் சேர்ந்து பயன்பெறுங்கள் :

நமது நாட்டின் பல மாநில மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்புதுமைத் திட்டம் 17.9.92 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் :

★ ரூ. 200/- ஐ D. D. அல்லது M.O. மூலம் '' P.R.C. கார்மெண்ட்ஸ்'' என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.

★ நீங்கள் செலுத்திய ரூ. 200/- ஐ $5\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு பிறகு திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் கரூர் கிளை ''கரூர் வைஸ்யா பாங்க்''-ன் ''காயத்ரி கேஷ் சர்டிபிகேட்'' (GCC) ஒன்றை உடனடியாக உங்கள் பெயருக்கு நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள். இதனால் நீங்கள் பெறுவது உங்கள் தொகைக்கு முழு பாதுகாப்பு.

★ நீங்கள் பணம் செலுத்திய முதலாண்டு முடிவிலிருந்து ஆண்டுக்கு ஒரு முறை வீதம் ரூ 84/- மதிப்புள்ள இரண்டு ''லில்லி'' உள்பாவாடைகள் (NORMAL SIZE) பதிவுத் தபாலில் எந்த செலவுமில்லாமல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மொத்தம் 10 'லில்லி' உள்பாவாடைகள் (மொத்த மதிப்பு ரூ. 420/-) பரிசாகப் பெற்றுக் கொள்கிறீர்கள்.

★ $5\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து நீங்கள் திரும்பப் பெறும் ரூ. 200/-ம் மேலும் ஒரு பரிசாக ரூ. 100ஐயும் பெற்றுக் கொள்கிறீர்கள்.

★ இப்பொழுது பாருங்கள்! நீங்கள் செலுத்திய ரூ. 200/- $5\frac{1}{2}$ ஆண்டுகளில் ரூ. 720/- மதிப்புடையனவாக உங்களுக்கு முற்றிலும் பயன்தரத்தக்கவையாக மாறுவதை!

பங்கு கொள்வீர்! பயன் பெறுவீர்!

*நினைவிருக்கட்டும், இத்திட்டத்தில் பங்கு பெறக் கடைசி தேதி : 17.09.1992*

------------ பணம் அனுப்ப வேண்டிய முகவரி : --------------

போன் : 21946

## P.R.C. கார்மெண்ட்ஸ்

26, பிரதட்சணம் ரோடு, A பிளாட், கரூர் – 639 002.

இது ஒரு ''பாரதப்பிரதமரின்'' படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1984 முதல் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாகும்.

குறிப்பு :- 1. நீங்கள் பணம் செலுத்தும் பொழுது உங்கள் பெயர், முகவரி மற்றும் போஸ்டல் பின்கோடு எண்ணையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

2. ஸ்பெஷல் சைஸ் (ஃப்ரீ சைஸ்) வேண்டுவோர் அதற்குண்டான விலை வித்தியாசத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வேற....! நல்ல காரியத்துக்குன்னு வர்ற போது... போயும் போயும்...ஒரு நாள் கழிச்சு வந்தால் நல்லது இல்லியா...?''

''வாஸ்தவம்...'' கிழவர் நெற்றியைச் சுருக்கி யோசனை செய்தார். பேனாவை மூடினார்.

'அப்பாடா!' இவன் நிம்மதியாக மூச்சு விட...! ஒரே ஒரு நிமிடம்தான் இந்த நிம்மதி!

''ஆனால்...! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. நாளை கழிச்சு திங்கட்கிழமை நான் ஊருக்குப் போறேன். திரும்பி வர ரெண்டு மூணு நாள் ஆகும். அநாவசியமா நாலைஞ்சு நாள் வட்டியை விடுவானேன்...?''

மூடியைத் திறந்தார். எழுத முயற்சி செய்தார். எழுதவில்லை. உதற... உதற....

''என்ன இழவு! எழுதமாட்டேங்கறது...!'' என்று இவன் சொன்னான்.

இது அகப வார்த்தை! கி ழ வ ர் வெகுண்டு எழுவார் என்று பார்த்தான். சராசரி மனிதன் அப்படித்தான் செய்திருப்பான். முகத்தில் பேப்பரை விசிறியிருப்பான்.

கிழவர் விடாமல் உதற, இவனுக்குத் தவிப்பு... சுக்கிராச்சாரியார் மாதிரி, பேனாவின் உள்ளே நுழைந்து, மை வராமல் அடைத்துக் கொள்ள முடிந்தால்... ப்ச... நாலாவது உதறலுக்குத் தரையில் நீலப் பொட்டு விழ.... ஒரு முறை இவன் இருமினான். அவர் கவனத்தை ஈர்த்தான்.

''இங்கே வரவங்க இதெற்கெல்லாம் ரொம்பக் கவலைப்படுவாங்க..! யோசனை பண்ணுவாங்க...! இந்த மாதிரி.. முதல் தடவையே பேனா எழுதல்லைன்னு வைக்கக் குங்க...! எழுந்து போயிடுவாங்க, போட்ட பணமும் முதல் தவணையில் கிடைக்காதுன்னு ஒரு செண்டிமெண்ட்..... அவ்வளவுதான். என்னைக் கேட்டீங்கன்னா.... நீங்க, ஒரு நாள் ரெண்டு நாள் பார்த்துண்டு....'' இந்த முயற்சி நிச்சயம் வெற்றி பெறும்...

''இதெல்லாம் யார் பார்க்கிறா, இந்தக் காலத்தில்....?'' கிழவர் நிதானமாகப் படித்தார். எழுதினார். நடுவில் பெண்ணிடம் ஏதோ சந்தேகம் கேட்டார். கையெழுத்துப் போட்டார்.

அவளையும் போடச் சொன்னார். இவனிடம் கொடுத்தார்.

அப்ளிகேஷனில் எதையாவது குறை கண்டுபிடித்து நிறுத்த முடிந்தால்...? இவன் ஆராய்ந்தான்.

''இங்கே எல்லாம் 'கேஷ்'தான். செக்-டிராப்ட் கிடையாது. தெரியுமா...?''

இது கடைசி அஸ்திரம். நான் ஜெயித்து விடுவேன். கிழவர், கையில் வெறும் துணிப்பைதான் வைத்திருக்கிறார். பெட்டியோ-லெதர் பாக்ஸோ இல்லை. கட்டாயம் பணமாகக் கொண்டு வந்திருக்க மாட்டார்.

''நானும் ஆரம்பத்திலேர்ந்து பார்க்கிறேன்...! தொட்டதுக்கெல்லாம் இந்த மனுஷன் 'ஆகாது'ன்னு அஸ்து கொட்டிண்டு இருக்கான்! சே..!'' கிழவர் பெண்ணிடம் கிசுகிசுப்பது கேட்டது. இவனை அலட்சியமாகப் பார்த்தார்.

''ஒண்ணு விடாமல் பக்கத்து வீட்டுப் பையன் சொல்லியிருக்கான். வரபோது பாங்குக்குப் போயிட்டுத்தான் வரோம்.....!''

துணிப்பையில் கை விட்டு நோட்டுக் கட்டுகளை எடுத்தார். மேஜை மேல் வைத்தார். அவற்றை இவன் உற்றுப் பார்த்தபடி இருந்தான்.

இனி மனித யத்தனத்தில் இல்லை...! 'கடவுளே....! நரியைப் பரியாக்கினவன் நீ! நல்ல நோட்டுகளைச் சற்று நேரம் செல்லாத நோட்டுகளாக மாற்று.... பார்ப்போம்... மாற்று!'

எண்ணினான்...! டிராயரில் பணத்தை வைத்துப் பூட்டினான். ரசீது எழுதினான்.

ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். ஒரு பெருமூச்சு விட்டான். இதுதான் விதி!

''அப்ப... நாங்க கிளம்பறோம்....'' அவர் எழுந்தார்.

''தாங்க்ஸ்...'' அந்தப் பெண்ணும் எழுந்தாள்.

''ஒரு நிமிஷம்...'' என்றான்.

கிழவர் முகத்தில் வெறுப்பு கொப்பளித்தது. 'கடைசி வரைக்கும் விடமாட்டான் போல இருக்கே....! இன்னும் என்ன என்ன தடங்கல் சொல்லிக் கழுத்தை அறுக்கப் போகிறானோ...?'

''எங்க கம்பெனி காம்ப்ளிமெண்ட்....!'' பர்ஸ் ஒன்றை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

முப்பதாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு, வெறும் கையோடு அனுப்புவதா...? ஒரு காலி பர்சாவது வேண்டாமா.....




''ஓய்வு பெற்ற நீதிபதியை பட்டிமன்ற நடுவராகப் போட்டது தப்பாப் போச்சு...''

''என்ன ஆச்சு?''

''விவாதம் முடிந்ததும் தீர்ப்பை ஒத்திப் போடுவதாகச் சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டார்....!''

- சி. நாச்சிமுத்து



# நாளைய செய்தி

**யதார்த்தமே உனக்கு மூன்று மணி நேர விடுமுறை**

ஒரு புலனாய்வுப் பத்திரிகையாளனுக்கு என்னென்னவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்? புரட்டுக டைரக்டர் வி. பி. விஜய்யின் டிக்ஷனரி: துப்பாக்கி கடுதல், கராத்தே ஜூடோவோடு பாக்ஸிங், தேசிய அளவு ஓட்டப்பந்தய வேகம், நானாவித நடனங்கள், மலை மற்றும் குதிரையேற்றம்... இருங்கள் மூச்சிரைக்கிறது.

ஒரு விமான நிலைய அதிகாரியின் மரணத்தைத் துப்பறியப் புகுந்து, கதை திசை மாறி, அரசியல் சதுப்பு நிலத்திற்கு வந்து சேர்கிறது - கதையில் சாமான்யர்களால் யூகிக்க முடியாத எதிரியை அமைத்தவருக்கு ஒரு கைகுலுக்கல்! ஸ்ரீகாந்தின் பெண்ணாக குஷ்பு. முதலில் விலகி, பின்பு நெருங்க, பிரபு, குஷ்பு போகப் போக 'பிகுரஷ்புபு' - அளவு அன்னியோன்யமாகி விடுகிறார்கள். வடக்கத்திய மற்றொரு இறக்குமதி அர்ச்சனா : அரே பேட்டி, இப்படியா குதிரைகளே மிரளும் நடனமாடுவது?

காமிரா ஷிவா, எடிட்டர் ஜோடி, டைரக்டர், வசனகர்த்தா, நடிகர்கள், லொகேஷன் என எல்லாமும், எல்லோரும் இந்த மசாலா மாளிகை கட்ட செங்கல் அளித்திருக்கிறார்கள். பாப், டமுக்கு டப்பா, அந்தப்புரலாங், மந்தஹாசப் பாடல் என ரகத்துக்கு ஒன்றென இசையில் ஆதித்யன் நூற்றுக்கு நாற்பத்தி மூணு பைசா தேறி விட்டிருக்கிறார்.

ஜெய்கணேஷ் இனி தொந்திகணேஷ். சில நிமிடங்கள்தான் என்றாலும் வித்தியாசம்.

மற்றும் குறிப்பிட செய்திகள் : கான்ஸ்டபிளை மாற்ற பிரபுவின் முயற்சி, உயிர் ஊசலாடும் பிரபுவைக் காப்பாற்றும் குஷ்புவின் பிரயத்தனம் - ஆங்கிலப் பட அபேஸ் என்றாலும் கூட - கேலிக்கு உள்ளாகாததாய் அமைந்திருப்பதைப் பாராட்டலாம்.

ஆனாக்கங்க, வில்லி, கதை முடியும் தறுவாயில் கதாநாயகனைக் காதலிப்பதாகச் சொல்வது, தங்கை என்றதும் வில்லனின் துப்பாக்கிக்குப் பலியாவது என இவை புராதனப் பழசில்லையா? தவிர்த்திருக்கலாமே!

– சுந்தர்ஜி

# சிவகாமியின்

## இருபத்தேழாம் அத்தியாயம்

## இதயக் கனல்

சொல்ல முடியாத வியப்புடனே தம்மைப் பார்த்த சிவகாமியை சர்ப்பத்தின் கண்களையொத்த தமது காந்த சக்தி வாய்ந்த கண்களினாலே நாகநந்தியடிகள் சற்று நேரம் உற்றுப் பார்த்தார்.

"சிவகாமி! நான் சொல்வதை நீ நம்பவில்லையா? என் நெஞ்சைத் திறந்து உனக்கு நான் காட்டக் கூடுமானால் - இந்தக் கடின இதயத்தைப் பிளந்து இதற்குள்ளே இரவும் பகலும், ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருக்கும் தீக் கனலை உனக்கு நான் காட்ட முடியுமானால்..." என்று சொல்லிக் கொண்டே பிக்ஷு தம் மார்பில் படீர் படீர் என்று இரண்டு தடவை குத்திக் கொண்டார். உடனே அவருடைய இடுப்பு வஸ்திரத்தில் செருகிக் கொண்டிருந்த சிறு கத்தியை எடுத்து, அதன் உறையைச் சடாரென்று கழற்றி எறிந்து விட்டுத் தம் மார்பிலே அக்கத்தியால் குத்திக் கொள்ளப் போனார்.

சிவகாமி சட்டென்று அவருடைய கையைப் பிடித்துக் கத்தியால் குத்திக் கொள்ளாமல் தடுத்தாள்.

சிவகாமி தன் கரத்தினால் நாகநந்தியின் கையைப் பிடித்திருந்த சொற்ப நேரத்தில், இரண்டு அதிசயமான அனுபவங்களை அடைந்தாள். நாகநந்தியின் கரமும் அவருடைய உடல் முழுவதும் அப்போது நடுங்குவதை உணர்ந்தாள். ஒன்பது வருஷத்துக்கு முன்னால் புத்த பிக்ஷுவைச் சிவகாமி தன்னுடைய தந்தையையொத்தவராய்க் கருதியிருந்த போது சில சமயம் அவருடைய கரங்களைத் தற்செயலாகத் தொட்டுப் பார்க்க நேர்ந்ததுண்டு. அப்போது அவளுடைய மனத்தில், 'இது என்ன வஜ்ர சரீரம்! இவருடைய தேகமானது கேவலம் சதை, இரத்தம், நரம்பு, தோல் இவற்றின் சேர்க்கையே பெறாமல் முழுதும் எலும்பினால் ஆனதாக அல்லவா தோன்றுகிறது? எப்பேர்ப்பட்ட கடின தவ விரதங்களை அநுஷ்டித்து இவர் தம் தேகத்தை இப்படிக் கெட்டிப்படுத்தியிருக்க வேண்டும்?' என்று எண்ணமிட்டதும் உண்டு. அதே புத்த பிக்ஷுவின் தேகம் இப்போது பழைய கெட்டித் தன்மையை இழந்து மிருதுத் தன்மையை அடைந்திருந்ததைச் சிவகாமி உணர்ந்து அதிசயித்தாள்.

நாகநந்தி சற்று நேரம் கையில் பிடித்த கத்தியுடன் சிவகாமியைத் திருதிருவென்று விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு சுய உணர்வு திடீரென்று வந்தவரைப் போல் கையிலிருந்த கத்தியைத் தூரத்தில் விட்டெறிந்தார். உடனே சிவகாமியும் அவருடைய கையை விட்டாள்.

"சிவகாமி! திடீரென்று அறிவு கலங்கி மெய்ம்மறந்து போனேன்! சற்று முன் உன்னிடம் என்ன சொன்னேன், எதற்காக இந்தக் கத்தியை எடுத்தேன் என்பதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்துவாயா?" என்று புத்த பிக்ஷு கேட்டதற்குச் சிவகாமி, "சுவாமி! சற்று முன்னால் தாங்கள் புத்த பிக்ஷு விரதத்தைக் கைவிடப் போவதாகவும், சிம்மாசனம் ஏறி இராஜ்யம் ஆளப் போவதாகவும் சொன்னீர்கள்" என்று கூறிவிட்டுத் தயங்கினாள்.

"ஆம், சிவகாமி! நான் கூறியது உண்மை. அதற்காகவே நான் அஜந்தாவுக்குப் போகிறேன். முப்பத்தைந்து வருஷத்துக்கு முன்னால் அஜந்தா நதிக்கரையில் பிக்ஷு விரதம் ஏற்றேன். அதே நதியில் அந்த விரதத்திற்கு ஸ்நானம் செய்து விட்டு வரப் போகிறேன். அஜந்தா சங்கிராமத்தின் தலைவராகிய எந்தப் பூஜ்ய புத்தகுருவினிடம் தீக்ஷை பெற்றேனோ, அவரிடமே இப்போது விடுதலை பெற்று வரப் போகிறேன். அது உனக்குச் சம்மதந்தானே?" என்றார் நாகநந்தியடிகள். சிவகாமி, இன்னதென்று விவரந் தெரியாத பயத்தினால் பீடிக்கப்பட்டவளாய், "சுவாமி! இது என்ன

# சபதம்



காரியம்? இத்தனை வருஷ காலமாக அனுச ரித்த புத்த தர்மத்தைத் தாங்கள் எதற்காகக் கைவிட வேண்டும்? அதனால் தங்களுக்கு உலக நிந்தனை ஏற்படாதோ? இத்தனை நாள் அனுஷ்டித்த விரதம், தவம் எல்லாம் நஷ்டமாகுமே? எந்த லாபத்தைக் கருதி இப்படிச் செய்யப் போகிறீர்கள்!'' என்றாள்.

இப்படிக் கேட்டபோதே, அவளு டைய உள்ளுணர்ச்சியானது இந்தக் கேள் விகளையெல்லாம் தான் கேட்பது மிகப் பெரிய தவறு என்றும், அந்தத் தவற்றினால் பிக்ஷு விரித்த வலையிலே தான் விழுந்து விட்டதாகவும் உணர்த்தியது.

''என்ன லாபத்துக்காக என்றா கேட்கி றாய்!'' என்று திரும்பிக் கேட்டு விட்டு, ''ஹா ஹா ஹா'' என்று உரத்துச் சிரித்தார்.

''உனக்குத் தெரியவில்லையா? அப்படி யானால், சொல்கிறேன் கேள்! முப்பத் தைந்து வருஷ காலமாக அநுஷ்டித்த புத்த பிக்ஷு விரதத்தை நான் கைவிடப் போவது உனக்காகத்தான், சிவகாமி! உனக்காகவே தான்! நான் அஜந்தாவில் சம்பிரதாயமாக, உலகம் அறிய, குருவினிடம் அனுமதி பெற்று விரதத்தை விடப் போகிறேன். ஆனால், விரத பங்கம் பல வருஷங்களுக்கு முன்னாலேயே நேர்ந்து விட்டது. என்றைய தினம் உன்னுடைய தகப்பனார் ஆயனரின் அரண்ய வீட்டில், அற்புதச் சிலைகளுக்கு மத்தியிலே உயிருள்ள சிலையாக நின்ற உன்னைப் பார்த்தேனோ, அன்றைக்கே என் விரதத்துக்குப் பங்கம் வந்து விட்டது. ஆனால், அதற்காக நான் வருத்தப்பட வில்லை. உன்னுடன் ஒருநாள் வாழ்வதற் காகப் பதினாயிரம் வருஷம் நரகத்திலே கிடக்க வேண்டுமென்றால், அதற்கும் நான் ஆயத்தமாயிருக்கிறேன். உன்னுடைய அன்பை ஒரு கண நேரம் பெறும் பாக்கி யத்துக்காக என்றென்றைக்கும் மோட்சத்தை இழந்து விட வேண்டும் என்றால் அதற்கும் சித்தமாயிருக்கிறேன்...''

சிவகாமி பயந்து நடுங்கினாள். இத்தனை நாளும் அவள் மனத்திற்குள் ளேயே புதைந்து கிடந்த சந்தேகம் இன்று உண்மையென்று தெரியலாயிற்று. ஆனால்... இந்தக் கள்ள பிக்ஷு இத்தனை நாளும் ஏன் இதையெல்லாம் தம் மனத்திற்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டிருந்தார்? இத்தனை காலமும் தன்னைத் தொந்தரவு செய்யாமல், எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் சுதந்திரமாக ஏன் விட்டு வைத்திருந்தார்? அவள் மனத் தில் எழுந்த மேற்படி கேள்விக்குத் தட்ச ணமே மறுமொழி கிடைத்தது.

''சிவகாமி! என்னுடைய ஆத்மாவை நான் காப்பாற்றிக் கொள்வதற்கும் உன்னு டைய வாழ்க்கைச் சுகத்தை நீ பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஒன்பது வருஷத்துக்கு முன்னால் ஏற்பட்டது. மாமல்லன் இங்கு வந்து உன்னை அழைத்த போது நீ அவனுடன் போயிருந்தாயானால், அல்லது உன்னை அவனிடம் சேர்ப்பிப்ப தற்கு எனக்காவது ஒரு சந்தர்ப்பம் கொடுத் திருந்தாயானால், நான் என் விரதத்தை ஒருவேளை காப்பாற்றிக் கொண்டிருப் பேன். நீயும் உன் வாழ்க்கை இன்பத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், நீ என் உண்மையான நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் அநாவசியமாகச் சந்தேகித்து விஷக் கத்தியை என் முதுகின் மேல் எறிந்து காயப்படுத்தினாய். அப்போது அந்த விஷக் கத்தி என்னைக் கொல்லவில்லை. ஆனால், அதே கத்தியானது இப்போது என்னைத் தாக்கினால் அரை நாழிகை நேரங் கூட என் உயிர் நிலைத்திராது! சிவகாமி, சற்று முன் னால் என் கரத்தை நீ பிடித்த போது உன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ஒன்பது வருஷத்துக்கு முன்னால் இரும்பையும் கல்லையும் ஒத்துக் கெட்டியாயிருந்த என் கை இப்போது இவ்வளவு மிருதுத்தன்மை அடைந்திருப்பதைக் குறித்து நீ ஆச்சரியப் பட்டாய். இந்த மாறுதலுக்குக் காரணம் நீதான், சிவகாமி! கடுமையான தவ விர தங்களை அனுசரித்து என் தேகத்தை நான் அவ்வாறு கெட்டிப்படுத்திக் கொண்டிருந் தேன். வெகுகாலம் விஷ மூலிகைகளை உட் கொண்டு என் தேகத்தில் ஓடிய இரத்தத்தை விஷமாகச் செய்து கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் என்னை எப்பேர்ப்பட்ட கொடிய விஷ நாகம் கடித்தாலும், கடித்த மறுகணம் அந்த நாகம் செத்துப் போகுமே

அமரர் கல்கி

தவிர எனக்கு ஒரு தீங்கும் நேராது. என்னுடைய உடம்பின் வியர்வை நாற்றம் காற்றிலே கலந்து விட்டால், அதன் கடுமையைத் தாங்க முடியாமல் சுற்று வட்டாரத்திலுள்ள விஷப் பாம்புகள் எல்லாம் பயந்து நாலு திசையிலும் சிதறி ஓடும். இதைப் பல சமயங்களில் நீயே நேரில் பார்த்திருக்கிறாய்....'' என்று நாகநந்தி கூறிய போது, இரண்டு பேருடைய மனத்திலும் பத்து வருஷங்களுக்கு முன்னால் மண்டபப்பட்டுக் கிராமத்தில் வெண்ணிலா விரித்த ஓர் இரவிலே நடந்த சம்பவங்கள் ஞாபகத்தில் வந்தன.

''அப்பேர்ப்பட்ட இரும்பையொத்திருந்த என் தேகத்தை மாற்று மூலிகைகளினாலும் மற்றும் பல வைத்திய முறைகளை அநுசரித்தும் இப்படி மிருதுவாகச் செய்து கொண்டேன். என் இரத்தத்தில் கலந்திருந்த விஷத்தை முறிவு செய்தேன். சென்ற ஒன்பது வருஷம் இந்த முயற்சியிலேதான் ஈடுபட்டிருந்தேன். இடையிடையே உன்னைப் பல நாள் பாராமலிருந்ததன் காரணமும் இதுதான். சிவகாமி! முப்பது பிராயத்து இளைஞனைப் போல் இன்று நான் இல்வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்தவனாயிருக்கிறேன். இத்தனைக்கும் பிறகு நீ என்னை நிராகரிக்க முடியாது. அப்படி நிராகரித்தாயானால் அதன் மூலம் எனக்கு நீ அளிக்கும் துன்பத்துக்குப் பரிகாரமாக நூறு நூறு ஜன்மங்களில் நீ பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படியிருக்கும்! அப்போதுங்கூட உன்னுடைய பாபம் தீர்ந்து விட்டதாகாது!''

சிவகாமியின் தலை வெடித்து விடும் போல் இருந்தது. தன் முன்னால் பிக்ஷு உட்கார்ந்து மேற்கண்டவாறு பேசியதெல்லாம் ஒருவேளை சொப்பனமாயிருக்கலாம் என்று ஒருகணம் எண்ணினாள். அந்த எண்ணத்தினால் ஏற்பட்ட ஆறுதலும் சந்தோஷமும் மறுகணமே மாயமாய் மறைந்தன. இல்லை, இதெல்லாம் சொப்பனமில்லை; உண்மையாகவே தன் கண்முன்னால் நடக்கும் பயங்கரமான நிகழ்ச்சிதான்.

இரத்தம் போல் சிவந்த கண்களைக் கொட்டாமல் புத்த பிக்ஷு தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது இதோ தன் எதிரில் உண்மையிலேயே நடக்கும் சம்பவந்தான்.

அபாயம் நெருங்கியிருப்பதை உணர்ந்ததும் சிவகாமியின் உள்ளம் சிறிது தெளிவடைந்தது. இந்தக் கொடிய பைத்தியக்காரனிடமிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லை. வணங்கி வேண்டிக் கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது கொஞ்சம் அவகாசம் பெற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் அருள் இருந்தால் இந்த வெறி கொண்ட பிக்ஷு அஜந்தாவிலிருந்து திரும்புவதற்குள் மாமல்லர் வந்து தன்னை விடுதலை செய்து கொண்டு போவார். இல்லாவிடில், வேறு ஏதேனும் யுக்தி செய்ய வேண்டும். முற்றத்துக் கிணறு இருக்கவே இருக்கிறது.

எனவே, பிக்ஷுவிடம் மன்றாடி வேண்டிக் கொள்வதற்காகச் சிவகாமி வாய் திறந்தாள்.

பிக்ஷு அதைத் தடுத்து, ''வேண்டாம், சிவகாமி! இன்றைக்கு நீ ஒன்றுமே சொல்ல வேண்டாம். அவசரப்பட்டு எனக்கு மறுமொழி சொல்ல வேண்டாம். அஜந்தா போய் வந்த பிறகே உன்னிடம் இதைப் பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். ஆனால், வாதாபிக்கு வெளியே இன்று இரவு நாங்கள் தங்குவதற்குரிய இராஜாங்க விடுதியை அடைந்ததும், உன்னிடம் என் மனத்தைத் திறந்து காட்டி விட்டுப் போவதுதான் உசிதம் என்றும், எல்லா விஷயங்களையும் நன்றாக யோசித்து முடிவு செய்ய உனக்குப் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டு திரும்பி வந்தேன். உன்னை நான் வற்புறுத்தப் போவதில்லை. பலவந்தப்படுத்தப் போவதில்லை. உனக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஒருநாளும் செய்யச் சொல்ல மாட்டேன். ஆனால், நான் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி விடுகிறேன்; ஒரே மூச்சில் இப்போதே சொல்லி விடுகிறேன்; சற்றுப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிரு. நான் அஜந்தாவிலிருந்து திரும்பி வந்த பிறகு நீ உன்னுடைய தீர்ப்பைச் சொல்லலாம்.''

பிக்ஷுவின் இந்த வார்த்தைகள் சிவகாமிக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தன. அவளுடைய பீதியும் படபடப்பும் ஓரளவு குறைந்தன.

நாகநந்தி ஆரம்பத்திலிருந்து மறுபடியும் கதையை ஆரம்பித்தார் : ''எந்த நேரத்தில் உன் தந்தையின் அரண்ய வீட்டில் உன்னை நான் பார்த்தேனோ, அதே நேரத்தில் என்னுடைய இதயத்திலிருந்து என் சகோதரனையும் சளுக்க சாம்ராஜ்யத்தையும் அப்புறப்படுத்திவிட்டு, அவர்கள் இருந்த இடத்தை நீ ஆக்கிரமித்துக் கொண்டாய். அது முதல் என்னுடைய யோசனைகள், ஏற்பாடுகள் எல்லாம் தவறாகவே போய்க் கொண்டிருந்தன. அந்தத் தவறுகள் காரணமாகவே வாதாபிச் சக்கரவர்த்தியின் தென்னாட்டுப் படையெடுப்பு வெற்றியடையாமல் போயிற்று.

''ஆகா! அந்தக் காலத்தில் நான் அநுபவித்த சொல்லொணாத மனவேதனையை

மட்டும் நீ அறிந்தாயானால், உன் இளகிய நெஞ்சம் கரைந்து உருகி விடும். ஒரு பக்கத்தில் உன் பேரில் எனக்கு ஏற்பட்டிருந்த காதலாகிய கனல் என் நெஞ்சைத் தகித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள் உன்னோடு பழகியவர்கள், உன்னுடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் மீது எனக்கேற்பட்ட அளவில்லாத அசூயை பெருநெருப்பாக என் உடலை எரித்தது. அப்போதெல்லாம் என் நெஞ்சில் நடந்து கொண்டிருந்த தேவாசுர யுத்தத்துக்குச் சமமான போராட்டத்தை நீ அறிந்தாயானால், பெரிதும் பயந்து போயிருப்பாய். ஒரு சமயம் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரையும் கொன்று விட வேண்டும் என்று எனக்குத் தடுக்க முடியாத ஆத்திரம் உண்டாகும். ஆயினும் பின்னால் உனக்கு அது தெரிந்து விட்டால் உன்னுடைய அன்பை என்றென்றைக்கும் இழந்து விட நேரிடுமே என்ற பயம் என்னைக் கோழையாக்கியது. மாமல்லனையும் மகேந்திர பல்லவனையும் கொல்லுவதற்கு எனக்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ஆனால், ஒவ்வொரு சமயமும் 'உனக்குத் தெரிந்து விட்டால்?....' என்ற நினைவு என்னைத் தடுத்தபடியால் அவர்கள் தப்பிப் பிழைத்தார்கள். பரஞ்சோதி காஞ்சியில் பிரவேசித்த அன்று உன்னை மதயானை தாக்காமல் காப்பாற்றினான் அல்லவா? அந்தக் காரணத்துக்காகவே அவனை அன்றிரவு நான் சிறையிலிருந்து தப்புவித்து உன் வீட்டுக்கு அழைத்து வந்தேன். ஆனால், அவனுக்கு நீ நன்றி செலுத்துவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. கலைவாணி! உன்



# அருள்வாக்கு

தற்காலத்தில் சிலர் நினைக்கிற மாதிரி சாணக்ய தந்திரம் முதலானவற்றில் ஜனங்களின் நன்மையையும், ஸத்யம் தர்மம் ஆகியவற்றையும் புறக்கணித்து ராஜாங்கத்துக்கு ஸ்வேச்சாதிகாரம் கொடுத்திருக்கிறது என்று தப்பாக நினைத்து விடக் கூடாது. தற்போது உலகத்தில் 'மானார்க்கி' (குடிஅரசு) உள்ள நாடுகள் உள்பட எல்லா தேசங்களிலும் ஸ்வேச்சாதிகாரம் இல்லாமல் ஸர்வ ஜன அபிப்பிராயப்படி, ஸர்வ ஜன க்ஷேமத்துக்காகத்தான் அரசாட்சி நடத்தப்படுவதாக, ஜனநாயக கொள்கை என்பதாக ஒன்று பேசப்படுகிறது. ஆனாலும் தினமும் ஒரு 'Coup' வருவதாகவும், கொஞ்ச காலத்திலேயே இந்த ராணுவ ஆட்சியும் போய் இன்னொரு மிலிடரி ஸர்க்கார் வருவதாகவும்தானிருக்கிறது. ஜனங்கள் நலனை முந்தி இருந்த ராஜாங்கம் கவனிக்கவேயில்லையென்றும், ஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்கள், ஸத்ய தர்மங்களை அடியோடு விட்டு விட்டு லஞ்சம், கையாலாகாத்தனம் இவற்றால் தேசவாழ்க்கையைக் கெடுத்து விட்டதாகவும் புது ஆட்சி ஏற்படுத்துபவர்கள் சொல்கிறார்கள். இப்போது நடக்கிற இத்தனை ஸ்வேச்சாதிகாரமோ, இப்போது பார்க்கிற இத்தனை Inefficiencyயோ, அர்த்த சாஸ்திரங்களில் அநுமதிக்கப்படவேயில்லை. இப்போது வாயினால் உசந்த ப்ரின்ஸிபிள்களைச் சொல்லிக் கொண்டே கார்யத்தில் ரொம்பவும் வேறு விதமாகச் செய்வதாக இருக்கிறது. அர்த்த சாஸ்திரங்களில், இப்படி வாயினால் ஒரே



தந்தை ஆயனருக்கு உன்னிடமுள்ள செல்வாக்கைப் பார்த்துக்கூட நான் அசூயை அடைந்தேன். ஆயினும் உன்னைப் பெற்ற புண்ணியவான் என்பதற்காக அவரை வாளால் வெட்டப் போன வீரனின் கையைப் பிடித்துத் தடுத்து உயிரைக் காப்பாற்றினேன். அதுமுதல் உன் தந்தையைக் காப்பாற்றிக் கொடுத்ததே என்ற காரணத்துக்காக இந்தக் கையை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.''

இதைக் கேட்ட சிவகாமியின் நெஞ்சம் உண்மையிலேயே இளகித்தான் விட்டது. 'இந்தப் புத்த பிக்ஷு இரக்கமற்ற ராட்சதனாயிருக்கலாம்; இவருடைய இருதயம் பைசாசத்தின் இருதயமாயிருக்கலாம்; இவருடைய தேகத்தில் ஓடும் இரத்தம் நாக சர்ப்பத்தின் விஷங் கலந்த இரத்தமாயிருக்கலாம்; ஆனாலும் இவர் என்பேரில் கொண்ட ஆசையினால் என் தந்தையின் உயிரைக் காப்பாற்றினார் அன்றோ?'

சிவகாமியின் மனோநிலையை ஒருவாறு அறிந்து கொண்ட புத்த பிக்ஷு ஆவேசங் கொண்டவராய் மேலும் கூறினார் :

''கேள், சிவகாமி! உன்னைப் பெற்றவர் என்பதற்காக ஆயனரைக் காப்பாற்றினேன். உன்னை விரோதிப்பவர்களை நான் எப்படிப் பழிவாங்குவேன் என்பதற்கும் ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இந்த வாதாபியில் நீ எவ்வித அபாயமும் இன்றி நிர்ப்பயமாக இத்தனை காலமும் வாழ்ந்து வருகிறாயல்லவா? இதற்குக் காரணம் என்னவென்று ஒருவேளை நீ ஊகித்திருப்பாய். நீ என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறாய் என்று எல்லோருக்கும் தெரியுமாதலால் தான், யாருமே உன் அருகில் நெருங்குவதில்லை. இதைக் குறித்து இந் நகரத்து அரண்மனையில் ஒரு பெண்ணுக்கு அசூயை உண்டாயிற்று. அவள் பட்டத்து ராணியின் சகோதரி. விஷம புத்தியுள்ள அந்தப் பெண் என்னைத் தன்னுடைய மோக வலையில் ஆழ்த்துவதற்கு மிக்க பிரயத்தனம் செய்தாள். அது பலிக்காமல் போகவே, ஒருநாள் அவள் உன்னைக் குறிப்பிட்டு நிந்தை மொழி கூறினாள். 'அந்தக் காஞ்சி நகர்க் கலைவாணியின் அழகு எனக்கு இல்லையோ?' என்று கேட்டாள். மறுநாள் அவள் என்னை நெருங்கிய போது, அவளுடைய கையை நான் பிடித்து, என் கை விரல் நகத்தினால் ஒரு கீறல் கீறினேன். அன்றிரவு அவள் தூங்கி, மறுநாள் காலையில் எழுந்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். அவ்வளவுதான்; அவளுடைய மூளை கலங்கிப்

யாடியாக தர்ம ஜோடனை பண்ணாமல், ஒரு ராஜாங்கம் நடத்துவதென்றால் அதில் ஒரு ராஜ்யத்தையே மேய்த்துக் கட்ட வேண்டியிருப்பதை முன்னிட்டும், மேலும் அந்நிய ராஜ்யங்களின் மோதல்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதை முன்னிட்டும், அநேக விஷயங்களை ரஹஸ்யமாகத்தான் வைத்திருக்க வேண்டும், சில விஷயங்களைக் கொஞ்சம் வேறே மாதிரித் தெரிகிற மாதிரிதான் காட்ட வேண்டும் என்ற practical necessityயால், ரொம்பவும் ஸத்ய-தர்மம் பார்த்து முடியாது என்றே சில அம்சங்களில் காம்ப்ரமைஸ் பண்ணிக் கொண்டு போகும்படியாகச் சொல்லியிருக்கும். வார்த்தையில் ரொம்பவும் தர்ம ஜோடனை பண்ணாவிட்டாலும், கார்யத்தில் அதில் சொல்லியிருக்கிற அளவுக்கே ராஜாக்கள் விட்டுக் கொடுத்து ராஜ்ய பாரம் பண்ணினதால், இக் காலத்தில் கார்யத்தில் நடக்கிற அதர்மமும் யதேச்சாதிகாரமும் அப்போதெல்லாம் நடந்ததேயில்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பைத்தியம் பிடித்து விட்டது! அவ்வளவு பயங்கரத் தோற்றத்தை அவள் அடைந்திருந்தாள். ஒருவருமறியாமல் அவள் இந் நகரை விட்டு வெளியேறிக் காட்டிலும், மலையிலும் வெகுகாலம் அலைந்து கொண்டிருந்தாள். இப்போது அவள் காபாலிக மதத்தினரின் பலிபீடத்தில் அமர்ந்து பலி வாங்கி உண்டு உயிர் வாழ்ந்து வருகிறாள்...''

சிவகாமி பழையபடி பீதி கொண்டாள். இந்த வெறி பிடித்த பிக்ஷு சீக்கிரம் போய்த் தொலைய மாட்டாரா என்று மனத்திற்குள் எண்ணமிட்டாள்.

''சிவகாமி! சில நாளைக்கு முன் அந்தக் காளி மாதாவைத் தற்செயலாக நான் சந்திக்க நேர்ந்தது. அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'சுவாமிகளே! ஒருநாள் இல்லா விட்டால் ஒருநாள் உம்முடைய காதலி சிவகாமியை நீங்கள் என்னிடம் ஒப்புவித்தேயாக வேண்டும். அவளுடைய உடலைப் புசித்தால்தான் என்னுடைய பசி தீரும்!' என்றாள் பைத்தியக்காரி. அப்படி உன் உடலைப் புசிப்பதாயிருந்தால் அவளிடம் நான் கொடுத்து விடுவேன் என்று எண்ணுகிறாள்! அவளை விட நூறு மடங்கு எனக்குத் தான் பசி என்பதை அவள் அறியவில்லை! உன்னைப் பார்க்கும் போதெல்லாம் உன்னை அப்படியே விழுங்கி விட வேண்டும் என்று எனக்குண்டாகும் பேராவலை அவள் என்ன கண்டாள்?''

திடீரென்று நாகநந்தி பிக்ஷு மலைப் பாம்பாக மாறினார். மலைப்பாம்பு வாயை அகலத் திறந்து கொண்டு, பிளந்த நாக்கை நீட்டிக் கொண்டு, தன்னை விழுங்குவதற்காக நெருங்கி வருவது போல் சிவகாமிக்குத் தோன்றியது. ''ஐயோ!'' என்று அலறிக் கொண்டு அவள் பின்னால் நகர்ந்தாள். கண்களையும் இறுக மூடிக் கொண்டாள்.

நாகநந்தி சிரித்தார். ''சிவகாமி! பயந்து விட்டாயா? கண்களைத் திறந்து பார்; புத்த பிக்ஷுதான் பேசுகிறேன்!'' என்றார்.

சிவகாமி கண்களைத் திறந்து பார்த்தாள். சற்று முன் தான் கண்ட காட்சி வெறும் பிரமை என்பதை உணர்ந்து கொண்டாள். ஆயினும் அவளுடைய கண்களில் பீதி நிறைந்திருந்தது.

நாகநந்தி எழுந்து நின்று சொன்னார் :-

''சிவகாமி! நான் சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்! ஒருவேளை எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நீ நினைக்கிறாய் போலும்! நல்லவேளையாக எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. என் அறிவு தெளிவாய்த்தானிருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்ச நாள் வரையில் உன்னிடம் நான் கொண்ட காதல் நிறைவேறாமற் போனால் எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடும். அப்புறம் நான் என்ன செய்வேனோ தெரியாது.

''சிவகாமி நான் போய் வருகிறேன். நான் திரும்பி வருவதற்குள் உன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு எனக்கு ஒரு முடிவு சொல்ல வேண்டும். உனக்காக நான் இது வரை செய்திருக்கும் தியாகங்களையெல்லாம் காட்டிலும் மகத்தான தியாகம் ஒன்றைச் செய்யப் போகிறேன். அதைப் பற்றி நான் திரும்பி வருவதற்குள் நீயே தெரிந்து கொள்வாய். அதைத் தெரிந்து கொண்ட பிறகு நீ என் பேரில் இரக்கங் கொள்ளாமலிருக்க முடியாது. என் கோரிக்கைக்கு இணங்காமலிருக்கவும் முடியாது.''

இவ்விதம் சொல்லி விட்டு நாகநந்தி சிவகாமியை அளவில்லாத ஆர்வம் ததும்பும் கண்களினால் சற்று நேரம் உற்றுப் பார்த்தார். சட்டென்று திரும்பி வாசற்பக்கம் சென்றார்.

பிக்ஷு சென்ற பிறகு சிவகாமியின் உடம்பு வெகுநேரம் வரையில் நடுங்கிக் கொண்டேயிருந்தது.

(தொடரும்)

# இன்று புதிதாய் மணந்தோம்

**பா**லச்சந்திரன் தன் கைப் பெட்டியுடன் அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

என்றும் இல்லாத அதிசயமாக அவர் அறை வாயிற்படியில் அவரை எதிர்பார்த்து அவர் மனைவி காத்திருந்தாள்.

இருபத்திரண்டு வருஷங்களாகத் தம்பதியாக அதே பங்களாவில் இருந்தாலும் இருவரும் மனத்தளவில் நெருங்காமல் விலகியே இருந்தார்கள். பாலச்சந்திரனின் தாயார், ''பேரன் எங்கே? பேத்தி எங்கே?'' எனத் தொணதொணப்புத் தாங்காமல் அவர் சிலமுறை பரிமளாவைத் தீண்டியிருக்கிறார். இல்லை.. அவள் தொட அனுமதித்திருந்தாள்.

கிழவியின் ஆசை பாதி நிறைவேறியது. பேரன் இல்லை. பேத்தி மட்டும். பெயர் லாவண்யா.

பரிமளா பாலச்சந்திரனின் மாமன் மகள் தான். ஆனால் பாலச்சந்திரன் நாடியது இன்னொரு பெண்ணை. ''சொந்தம் விட்டுப் போகக் கூடாது''. ''இரண்ட சொத்துக்கள் கை மாறிவிடக்கூடாது'' என்று பல காரணங்களைச் சொல்லி அவர்கள் இருவரையும் மணவாழ்க்கையில் பிணைத்து விட்டனர்.

பரிமளாவும் என்றும் பாலச்சந்திரனைத் தன் வாழ்க்கைத் துணையாக நினைத்துப் பார்த்ததில்லை. கல்லூரியில் சேர்ந்தவுடன் அங்கிருந்த ஓர் இளம் விரிவுரையாளர்பால் அவள் மனம் சென்றது. அரசல் புரசலாக இதைக் கேள்விப்பட்டுத்தான் அவள் வீட்டில் இந்தக் கல்யாணத்தை அவசர அவசரமாக முடித்து வைத்திருந்தார்கள்.

இந்த விரிசல் ஊருக்குத் தெரியாது. வீட்டு வேலைக்காரர்களுக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டார்கள்.

பிரபலமான பத்திரிகை இவர்களை லட்சிய தம்பதிகளாக அட்டைப் படத்தில் போட்டுக் காட்டியது. நடிப்பில் பெரிய நட்சத்திரங்களையே தோற்கடிக்கும் விதத்தில் போஸ் கொடுத்துத் தங்கள் அந்நியோன்யத்தை நடித்துக் காட்டினர்.

ஒரு வருஷம் ''மேட் ஃபார் ஈச் அதர்'' போட்டியிலும், லயனஸ் கிளப் இவர்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்தது.

லாவண்யா தன் வயிற்றில் உண்டானவுடன் தனிப் படுக்கை அறைக்கு மாறியவள் பரிமளா. இன்னும் அப்படியேதான்.

பரிமளா தன் கவனத்தைக் குழந்தையை வளர்ப்பதில் செலவிட்டாள். பாலச்சந்திரனுடன் கழித்த ஒரு சில நாட்களிலேயே அவளுக்கு வேறு ஆசைகள் எல்லாம் விட்டுப் போயிற்று. லாவண்யா அம்மாவுடன் ஒட்டிக் கொண்டாள். எப்போதாவது ''டாடி'' கூப்பிட்டுப் பரிசு கொடுக்கும் போது வாங்கிக் கொண்டு ''தாங்க் யூ'' சொல்வதுடன் சரி.

இப்போது, இத்தனை நாட்களுக்குப் பிறகு, தன் கணவனைப் பார்த்துப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது லாவண்யாவினால்.

லாவண்யா இப்போது மெடிகல் காலேஜில் படித்துக் கொண்டு இருந்தாள். புத்திசாலிப் பெண். தந்தைக்கும் தாயுக்கும் நடக்கும் பனிப்போர் அவளுக்குப் புரிய வந்தது. மெல்ல மெல்லத் தாயின் முந்தானையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். வெளியில் பல தோழிகள். தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் வந்தது.

கனில் சௌத்ரி. வங்காள வாலிபன். அவளுக்கு காலேஜில் இரண்டு வருஷம் சீனியர். நட்பு பிரேமையாக மாறியது.

ஒருநாள் பரிமளாவிற்கு அவனை அறிமுகப்படுத்தினாள். அவன் பார்வையிலிருந்தே பரிமளா புரிந்து கொண்டாள். லாவண்யாவிற்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லை. அவள் நல்ல சிவப்பு. இவன் அட்டக் கரி. அவள் வெடவெடவென்று மெலிந்த உடல்வாகு. இவன் குட்டையாக இல்லாவிட்டாலும் கட்டையாக இருந்தான்.

இத்தனை நாள் இலைமறைவு காய் மறைவாக இருந்த விஷயம், முதல் நாள் வெட்ட வெளிச்சமாகியிருந்தது. தன் தாயிடம் தான் கனிலை மணந்து கொள்ளப் போவதாகவும் ''டாடி''யிடம் சொல்லும்படி தன் தாயிடம் கெஞ்சவில்லை. உத்தரவு பிறப்பிப்பது போல் அறிவித்து விட்டுப் போனாள்.

பரிமளா அதிர்ந்து போனாள்! தனிப்பட்ட முறையில் அவளால் என்ன முடிவு எடுக்க முடியும்? லாவண்யாவிற்குத் தந்தை என்று ஒருவர் அந்த வீட்டில் இருக்கிறாரே!

''முக்கியமான விஷயம். கொஞ்சம் உட்காரலாமா?'' எனக் கேட்டாள் பரிமளா.

நிச்சயமாக அவர் வெடிக்கப் போகிறார் என எதிர்பார்த்த பரிமளா ஏமாந்தாள்.

''ஓ, ஷ்யூர்!'' என உட்கார்ந்தார் பாலச்சந்திரன்.

பரிமளா எல்லா விவரங்களையும் அவரிடம் சொன்னாள்.



"நீ என்ன நினைக்கிறாய், பரிமளா?" எனக் கேட்டார் பாலச்சந்திரன்.

பரிமளா சிலிர்த்தாள். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் அவள் பெயரைச் சொல்லி அழைக்கிறார். இத்தனை நாட்கள் ஒருவரையொருவர் தொண்டையைச் செருமித்தான் கவனத்தை ஈர்த்து வந்தனர்.

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு..." என்றாள் பரிமளா.

"நான் தெளிவாக இருக்கிறேன், பரிமளா. நமக்கு உருவப் பொருத்தம் இருந்தது. அந்தஸ்தில் சமம். படிப்பில் கூடப் பழுதில்லை. கல்யாணத்திற்கு இந்தப் பொருத்தங்கள் மட்டும் போதும் எனப் பார்த்துத்தான் நாம இணைந்தோம். எப்படி வாழ்கிறோம் என உனக்குத் தெரியும். இதே போல் - இந்தப் பொருத்தங்களை மட்டும் பார்த்தால் நாம் லாவண்யாவைக் கண்டிக்க வேண்டியதுதான். கனிலை மறக்கச் சொல்ல வேண்டியதுதான். உன் அண்ணன் மகனுக்கோ, என் தங்கை மகனுக்கோ அவளைக் கட்டிக் கொடுக்க வேண்டியதுதான். நம்மிடம் இல்லாத ஒரு பொருத்தம். ஒரே பொருத்தம் - மனப் பொருத்தம் அவர்கள் பக்கம் இருக்கு. இதைப் பற்றி நீ என்னிடம் ஒரு நாள் பேசுவாய் என்று எனக்குத் தெரியும். கனில், லாவண்யா விஷயம் என் காதுக்கு வந்தது. கனிலைப் பற்றி விசாரித்தேன். நல்ல குடும்பத்துப் பையன். அவன் அப்பா- அம்மா இரண்டு பேருமே உண்மையான மனமொத்த தம்பதிகள். நமக்குக் கிடைக்காத ஒரு இனிய இல்லறத்தை ஏன் நம் மகளுக்கு நாம் அமைத்துத் தரக் கூடாது?"

"இப்படி நீங்கள் நினைப்பீர்கள் என நான் எதிர்பார்க்கவில்லை!"

"பரிமளா... வயது நாற்பத்தைந்து தாண்டி விட்டது. மூப்பின் அடையாளங்கள் அங்கங்கே தோன்ற ஆரம்பித்து விட்டன. கிடைக்காததை நினைத்து விலகி இருப்பதை விட கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையாமல் போனோமே என்ற விவேகம் ரொம்பத் தாமதமாக எனக்கு வந்திருக்கிறது. இருந்தாலும் உன் மனநிலை தெரியாமல் நான் நெருங்க விரும்பவில்லை."

பரிமளா நெகிழ்ந்து போனாள். பாலச்சந்திரனிடம் என்ன குறை இருந்தது, பார்க்கப் போனால் அந்தக் கல்லூரி விரிவுரையாளரை விட எல்லாவிதத்திலும் உயர்ந்தவர்தான்.

எப்போதோ படித்தது ஞாபகம் வந்தது. இருவர் ஓரடி நெருங்கினால் இடைவெளி இரண்டடி குறைகிறது. ஓரடி நகர்ந்தால் இரண்டடி கூடுகிறது.

பரிமளாவின் கண்களில் நீர் துளித்தது.

"கவலைப்படாதே. நான் லாவண்யாவிடம் பேசுகிறேன்" எனப் புறப்பட்டுப் போனார் பாலச்சந்திரன்.

**ஊ**ரே வியக்கும்படி லாவண்யா - கனில் திருமணம் நடந்தது. பாலச்சந்திரனும் பரிமளாவும் ஓடியாடி உபசரித்தனர். ஒருவரையொருவர் பரிகசித்தார்கள். சீண்டினார்கள்.

பார்த்தவர்களில் ஒருவர் சொன்னார் : "பரிமளா - பாலச்சந்திரனைப் பாருங்கள். இன்றைக்குக் கல்யாணம் ஆனவர்கள் போல் எத்தனை உற்சாகம்?"

அவர்களுக்குத் தெரிய நியாயமில்லை, மனத்தளவில் அவர்களுக்கும் இன்றுதான் திருமணம் முடிந்திருந்தது என்று.

# பெரிய தம்பி

காட்சி - 12

(பண்ணை வீடு - கைலாந்தர் ஆடிக் கொண்டிருக்கிறது. கருப்பாயி ஒரு மூலையில் மூக்கைச் சிந்தியபடி அமர்ந் திருக்கிறாள். பெரிய பண்ணை சோக மாக நடந்து கொண்டிருக்க, தெருப்புழு தியின் சோகப் பாடல் காற்றில் மிதந்து வருகிறது : 'என்னப் பெத்த ஆத்தா கண் ணீரத்தான் பாத்தா....')

**கருப்பாயி :** பெரியதம்பி ஊரைவிட்டு ஓடி நாலு மாசமாச்சு.....

**பண்ணை :** அதை நினைச்சு தெருப் புழுதி இன்னும் சோகமாப் பாடிட்டு இருக் கான்..

**கருப்பாயி :** நானும் காலைல இருந்து தெருப்புழுதி பாடப்பாட.... பெரியதம்பி குளிச்ச குளம், கோலியாடின எடம், சடுகுடு விளையாண்ட எடம்.... பள்ளிக்கூடம்னு... எல்லா எடத்துலயும் ஒக்காந்து அழுதுட்டு வந்துப்புட்டேன்....

**பண்ணை :** எனக்கு மட்டும் சோகம் இல்லியா? பெரீதம்பி பாறை மேல ஒக் காந்து பல்லு விளக்குறான் - நான் ஸ்லோ மோசன்ல ஓடுதேன். கிட்டப்போனதும் மறஞ்சிடுறான். பா றை ல பல்லுபோன கிழவன் எவனோ ஒக்காந்துட்டுச் சிரிக் கான்!

**கருப்பாயி :** பெரீதம்பிக்குப் புடிச்ச புட்டு, இடியாப்பம், மீன்குளம்பு, பணி யாரம், ஆப்பம் எல்லாத்தையும் செஞ்சு வைச்சு, சாப்புடு ராசான்னேன். பெரிய தம்பியும் வக்கணையாச் சாப்ட்டான். கட சில அவன் உருவம் டக்னு மறைஞ்சு அங் கன உங்க உருவம் உக்காந்து தின்னுட்டு ஏப் பம் விட்டுட்டு இருந்தீச்சி!....

**பண்ணை :** அடிப்பாவி! நீ பெரிய தம்பிய நினைச்சுச் செஞ்சியா? சர்தான்.... சோகம் தாளாம உக்காந்திருக்கிற புருஷ னுக்குத்தான் அன்பா ஊட்டி, பசியாத்த றன்னு நினைச்சு இல்ல தின்னேன்!....

**கருப்பாயி :** பாக்குற எடம் எல்லாம் பெரியதம்பி தெரியறானே!.... காப்பி குடிக் கையில எடுத்து வளந்த கதை... விருந்து துன்னயில விளையாண்ட க தை... படம் பாக்கையில பந்து ஆடின கதைன்னு பெரீ தம்பி... எந்நேரமும் ஒன் ெந ன ப் பு த் தான்!....

**பண்ணை :** ஒன் ஆத்தாளும் அப்பனும் ஒன்ன நினைச்சி உருகறோமடா பெரீ தம்பி... எங்கனபோனே? என்ன செய்யற?

காட்சி - 13

(பட்டணத்தில் ஒரு வீட்டு ஹால். ஓர் இளம் பெண் காப்பி தம்ளருடன் வரு கிறாள்)

**வீணா :** Big brother - Coffee!

**பெரிய :** பெரியதம்பின்னு கூப்டு....

**வீணா :** இங்கிலீஷ்ல அதுக்கு Big brother தானே?

**பெரிய :** ஒன்பேரு கூட வீணா!... வேஸ்டுன்னு கூப்டா எப்டி இருக்கும்?...

**எஸ்.வி.சேகர்**

**வசனம்: வெங்கட்**



● "கல்யாணியைக் கூட உங்களுக்காக திருத்தி வைச்சுருக்காக...."

**வீணா :** எங்க அண்ணன் செல்லக் கண்ணு வரட்டும் சொல்லித்தரேன்.

**பெரிய :** யாரு மிஸ்டர் pet eye யா?...

**வீணா :** காப்பி எப்படி இருக்கு?

**பெரிய :** எதுக்கு வீணா காப்பி எல்லாம் போடற - மத்தூள் விக்கிற வெலையில?...

**வீணா :** நீ காலேஜ்ல படிச்சப்பவே எனக்கு ஒம்மேல ஒரு இது.... நீதான் ஏறெடுத்துப் பாக்க மாட்ட! ஆனா ஆண்டவனே இங்க கொண்டு வந்து சேர்த்தார் பாரு.

**பெரிய :** என்னது! கல்யாணம் ஆகாதவங்களுக்குத்தான் வீடுன்னு போர்டு போட்டப்பவே சந்தேகப்பட்டேன். இப்ப நாலு மாசமா உங்கிட்ட மாட்டிக்கிட்டுத் தவிக்கிறேன்.

**வீணா :** அப்ப என் காதல் ஒருதலைக் காதலா?

**பெரிய :** தறுதலைக்காதல்!.... ஒரு மரத்துக்கு வேட்டிகட்டினாக் கூட விடமாட்டீங்களே. ரொம்பத் தொந்தரவு பண்ணின...



● "பெரிய தம்பின்னு கூப்பிடு..."

நான் தற்கொலை பண்ணிக்குவேன்!

**வீணா :** தற்கொலையா? நோ. அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதீங்க ப்ளீஸ்.

**பெரிய :** ஏன் தற்கொலைன்னா அவ்ளோ பயமா?

**வீணா :** எங்கம்மா தற்கொல செஞ்சுக்கிட்டு செத்தாங்க! அதுல இருந்து பயம்...

**பெரிய :** எதுக்காகத் தற்கொலை செய்துக்கிட்டாங்க.

**வீணா :** நாங்க மொத்தம் எட்டு குழந்தைங்க!

**பெரிய :** எட்டு குழந்தைங்களா? குடும்பமா ரோட்ல போனா லைஸன்ஸ் இல்லாம ஊர்வலம் போகக்கூடாதுன்னு போலீஸ் பிடிச்சு உள்ள போட்டுடுவாங்களே!.....

**வீணா :** வறுமை...! ஒரு நாள் அம்மா அரளியை அரைச்சு எல்லாருக்கும் குடுத்துட்டு, தானும் தின்னுட்டாங்க... என்னையும் அண்ணனும் தவிர எல்லாரும் குளோஸ்!...

**பெரிய :** நீங்க ரெண்டு பேர் மட்டும் எப்படி பிழைச்சீங்க?

**வீணா :** வறுமைதான்!.... விஷம் ஆறு பேருக்குத்தான் கண்டுது!.... எங்களுக்கு இல்ல! பொழச்சிட்டோம்! அதுக்கப்புறம் எங்கண்ணன் என் மேல உயிரையே வச்சிருக்காரு!

**பெரிய :** ஆனா பெரிய ரௌடியா இல்ல இருக்கான்!....

**வீணா :** நீ என்னைக் கல்யாணம் பண்ணிட்டா என் அண்ணன் திருந்திடுவான்!...

**பெரிய :** ஒன் அண்ணன் திருந்தினா என்ன, திருந்தாட்டா எனக்கென்ன?....

**வீணா :** என் கல்யாணம் நடக்கற அன்னைல இருந்து குடிக்கற தில்லை, சீட்டாடறது இல்லை, கிட்னாப் பண்றது இல்லை, கள்ளக் கடத்தல் பண்றது இல்லை, கொலை செய்யறது இல்லைன்னு சத்யம் செஞ்சி குடுத்திருக்கான்!

**பெரிய :** இ.பி.கோல இருக்கற எல்லா செக்ஷன் லேயும் தப்புப் பண்றவனா?...

**வீணா :** அவனுக்கு ஒன்னை ரொம்பப் பிடிச்சுடிச்சு... அவனுக்காகவாவது என்னைக் கட்டிக்கயேன்.

**பெரிய :** அதெல்லாம் முடியாது! என் முறைப் பொண்ணையே வேண்டாம்னு சொல்லிட்டு வந்தவன் நான்....

**வீணா :** மொறப் பொண்ணா?

**பெரிய :** எஸ்... கப்பக்கிழங்கு, மூக்காத் துட்டு இதெல்லாம் அவ செல்லப் பேர்.

**வீணா :** ஒரிஜினல் பேரு?

**பெரிய :** திருகாணி.

**வீணா :** திருகாணியா?

*(மாடசாமி உள்ளே நுழைகிறான்)*



## மகிழ்ச்சிக்கு வழி!

கேட்பதையெல்லாம் நம்பி விடாதீர்கள். செய்ய வேண்டும் என்று நினைப்பதையெல்லாம் செய்து விடாதீர்கள். தெரிந்ததையெல்லாம் சொல்லிவிடாதீர்கள். இருப்பதையெல்லாம் உபயோகித்து விடாதீர்கள்.

இதையெல்லாம் நீங்கள் கடைப் பிடிப்பீர்களேயானால் உங்கள் வாழ்க் கையில் துளிக்கூட மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது.

கூறியவர் : மார்ட்டின் லூதர் கிங்

தொகுப்பு : கே.ஏ. காளிமுத்து




''எது எதுக்குத் தான் விழா எடுக் கணுங்கிற விவஸ் தையே இல்லாம போய்டுச்சி.''

''ஏன் என்னாச்சு சார்?''

''இதுவரைக்கும் அவருடைய ஐம் பது கதைகள் திரும்பி வந்திருக் காம். அதுக்குப் பொன் விழாவாம்!''

- ஆர். ஞானப் பிரகாசம்

மாடசாமி : ஏ..... செல்லக்கண்ணு! செல்லக்கண்ணு!....

பெரிய : ஐயையோ! (வீட்டினுள் ஓடு கிறான்)

வீணா : யாரு வேணும்?

மாடசாமி : செல்லக்கண்ணுங்கற ரௌடி வீடு....?

வீணா : இதான்... 'செல்லக்கண்ணு - பேட்டைபிஸ்தா'ன்னு போர்டு போட்டிருக் குமே பார்க்கலியா?

மாடசாமி : நானு கிராமம்மா. எழுத் தறிவு கிடையாது.....

வீணா : எதுக்கு அண்ணனைப் பாக்க வந்தீங்க? ஏதாவது அடிதடியா? அண்ணன் இல்லை... ரேட்டி முடிஞ்சு பாதி ராத்திரி தான் வரும்..

மாடசாமி : நாங்க பட்ணத்துல ஒரு ஆளைத் தேடறோம்... செல்லக்கண்ணு கைல துட்ட வெட்டினா அடுத்த நாளே ஆளைக் கொண்டாந்து சேத்துடுவாருன் னாங்க!.... ஆனா நான் தேடற ஆளைச் செல்லக்கண்ணு முன்கூட்டியே பிடிச்சு வைச்சிருக்கார் போல இருக்கு!

வீணா : நீங்க வர்றப்போ இருந்தாரே அவரா? அது பெரிய தம்பிங்க!

மாடசாமி : பெரியதம்பியைத் தேடித் தான் பெரியபட்டி கிராமத்துல இருந்து வந் திருக்கேன், கூப்பிடுங்க!

வீணா : நீங்க யாரு?

மாடசாமி : ம்.... அவரு அப்பன்!

வீணா : ஆ! என் வருங்கால மாம னார்!....

பெரிய (வருகிறான்) : சீசீ எழுந்திரு! கண்டவன் காலையும் பிடிச்சு மாமனார் மாமனார்னு பிராண்டறியே!

வீணா : பெரியபட்டில இருந்து வரதா....

பெரிய : பெரியபட்டில இருந்து வர்ற வன் எல்லாம் என் அப்பனா?... இது மாட சாமி! பண்ணைல ஜால்ரா! நீ போய் காப்பி கொண்டா.

(வீணா போகிறாள்)

பெரிய : எங்கயா வந்த?

மாடசாமி : ஒங்களைத் தேடித்தான்! செல்லக்கண்ணு மூலம் உங்களைத் தேடிக் கண்டுபிடிக்கலாம்னு நினைச்சா இங்கயே இருக்கீக....

பெரிய : இவ அண்ணன் பெரிய சிஐடி ஆபீசர்! ஊர்ல எல்லாரும் எப்படி இருக் காங்க.

மாடசாமி : நீங்க இல்லாம - எல் லாருமே சோகமா இருக்காங்க தம்பி! தன் டனை அனுபவிக்காம வந்தீகளா, கண்டு புடிச்சிக் கூட்டிட்டு வரச் சொல்லி அனுப் பிச்சாக.... கல்யாணியைக் கூட ஒங்களுக் காக நிறுத்தி வச்சிருக்காக!

*வீணா (காப்பியுடன் வருகிறாள்)* : யாரது கல்யாணி?

பெரிய : இவன் தங்கச்சி!...

*வீணா* : ஒரே தங்கச்சியா?

பெரிய : ஊருக்கே அது ஒரே தங்கச்சிதான்!.... நாலு கால்!

*மாடசாமி* : ஊருக்கு வந்துடுங்க! கரும்புள்ளி செம்புள்ளி மொட்டை....

பெரிய : என் உப்பைத் தின்னுட்டு அதை எம் மேல துப்புறியா? டாய்!...

*மாடசாமி* : ஐயையோ! பஞ்சாயத்துக்குக் கட்டுப்படுவேனா பெரியதம்பிக்குக் கட்டுப்படுவேனா?

பெரிய : ஊரல்லாம் சல்லடை போட்டுத் தேடினேன்... பெரியதம்பி கிடைக்கலைன்னு போய்ச் சொல்லு!

*மாடசாமி* : வீராப்பாக் கடிதாக எழுதினீங்களே, நிசமாலுமே ஊரைக் கண்டு பயந்துதானே ஓடிவந்தீங்க!

பெரிய : பைத்தியக்காரா! பயந்து போய் ஓடிவந்தேன்னு நினைக்கிறியா! நோ ஒரு fear ல ஓடிவந்தேன். Fool!

*மாடசாமி* : அதானே பார்த்தேன்!

பெரிய : நான் மறுபடியும் அதே கிராமத்துக்கு வரத்தான் போறேன்!

*மாடசாமி* : சும்மா விட்டுடுவாங்களா?

பெரிய : அதுக்கு ஒரு ஐடியா வைச்சிருக்கேன் காதைக்குடு....

*(மாடசாமி காதை நீட்ட கடுக்கனை வருடுகிறான்)*

*மாடசாமி* : ம்! ஐயா.... சொல்லுங்க.

பெரிய : போவ்! உனக்கு மட்டும்தான் சொல்லி இருக்கேன். வெளில சொன்னே....

*மாடசாமி* : நான் ஏன் சொல்லப் போறேன்! ராத்திரியே ரயிலைப் பிடிச்சுக் கிராமத்துக்குப் போறேன்... பெரியதம்பி சாயல்ல கூட ஒரு பயலைக் காணலைன்னு சொல்லிப்புடறேன்! அப்புறம் உங்கபாடு, ஊர்பாடு!.... வர்றேன்யா!... *(மறு காது கடுக்கனைக் கழற்றி....)* இதையும் வைச்சுக்குங்க. உங்கப்பாருகிட்ட ஒரு சமயம் நான் ரகசியம் சொன்னபோது எடுத்தது.

*(வெளியேறுகிறான்)*

*வீணா* : ஓஹோ! ஐயாவைக் கிராமத்துல தண்டிக்க இருந்தாங்களா? ஆமாம், என்ன தப்புப் பண்ணினீங்க?

*(பெரியதம்பி சைககளால் நடந்தவற்றை விளக்க பின்னணியில் இசை ஒலிக்கிறது)*

*வீணா* : ஒரு ஆள் அரைத்தூக்கத்துல இருக்கற சமயம் தாலியைக் குடுத்து ஒரு பொண்ணு கழுத்துல கட்டச் சொல்றது தப்பில்லையா?

பெரிய : கிட்டத்தட்ட எல்லாக் கல்யாணமும் இப்படித்தான் நடக்குது... சுய நினைவு ஒழுங்கா இருக்கறவன் எவனாவது கல்யாணம் பண்ணிட்டு அவஸ்தப்படுவானா?...

*வீணா* : நடந்ததை மறந்திட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்க! எங்கண்ணன் உன்னைக் காப்பாத்துவாரு.

பெரிய : போயும் போயும் ஒரு கேடியோட தங்கச்சி எனக்கு ஜோடியா? நான் இப்பவே இந்த வீட்டை விட்டுக் கிளம்பறேன்.

*வீணா* : அப்ப நம்ம காதல்....?

பெரிய : நம்ம காதலா? விளையாடறியா...! நீதான் என்னை லவ் பண்ற... நான் பண்ணலை!

*வீணா* : யாராவது ஒத்தர் பண்ணா போதும்யா!

பெரிய : எனக்கு ஒன்னைக் கண்டாப் பத்திட்டு வருது... எழுதி வச்சுக்க... சீக்கிரமே வேற ஒருத்தன் ஒனக்கு மூணு முடிச்சுப் போடுவான்... ஒன் கல்யாணத்துல ஒன் புருஷனுக்கு நான்தான்டி மாப்பிள்ளைத் தோழன்!....

*வீணா* : கல்யாண மண்டபத்துல மாப்பிள்ளைத் தோழனைக் கட்டிப் புடிச்சுகிட்டு, 'என்னைக் கைவிட்டுடாதிங்க'ன்னு கதறினா நீங்க சொல்ற அந்த மாப்பிள்ளை எனக்குத் தாலி கட்டுவான்கறீங்க?

பெரிய : It's a challenge..... மிஸ்ஸ் வீணா 'எக்ஸ்'!

*வீணா* : 'எக்ஸ்'ங்கற பேருகூட உங்களுக்கு நல்லாத்தான் இருக்கு!

(தொடரும்)

---

''பிக்பாக்கெட் பக்கிரி பெரிய ஆளாயிட்டான் சார்!''

''எப்படி சொல்றே?''

''மாமூல் கேட்டா விசிட்டிங் கார்டைக் கொடுத்திட்டு 'வீட்ல வந்து பாரு'ங்கிறான்!''

- பொடுசி



# ராசாத்திக்கு நன்றி

“என்னங்க, சிவராஜ் உங்களைத் தேடிக்கிட்டு வந்தாரு'' என்று வீட்டினுள் நுழையும் போதே சொன்னாள் உமா.

தலையை மட்டும் ஆட்டியபடி பாத்ரூமுக்குக் கை கால் கழுவச் சென்றேன்.

''நீங்க அவரிடம் கடன் ஏதேனும் வாங்கியிருக்கீங்களா?'' என்று கவலையுடன் கேட்டபடி பின் தொடர்ந்தவளை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு, முகத்தில் தண்ணீரை விட்டுக் கழுவினேன்.

பக்கத்து ஊர் வரை சென்று வந்த கசகசப்பு, முகத்தில் நீர்பட்டதும் மறைந்து, கொஞ்சம் மலர்ச்சி ஏற்பட்டது. இன்று கடைக்கு விடுமுறை. அதனால் கொஞ்சம் ஓய்வாய் இருக்கலாம்.

துண்டால் முகத்தையும், உடம்பையும் துடைத்தபடி ஹாலில் வந்து அமர்ந்தேன்.

''காப்பி கொண்டு வாயேன் உமா'' என்றேன் அயர்ச்சி முழுதும் விலகாத குரலில்.

ரெடியாய் வைத்திருந்திருப்பாள் போலும். உள்ளே போன நிமிடத்திலேயே காப்பியுடன் வந்தாள்.

சர்க்கரை லேசாகத் தூக்கலாய் இருந்தது. கசப்பும், இனிப்புமாய்க் கலந்த கலவை. சூடாய் உள்ளே போனதும் ஒரு கறுகறுப்பு.

அது வரை அருகில் நின்றவள்,

''சொல்லுங்க'' என்றபடி அமர்ந்தாள்.

காற்றில் படபடக்கும் காலண்டராய் என் மனது... எத்தனை நாள் மறைக்க முடியும்? இவளுக்கும் விஷயம் தெரிந்திருப்பது நல்லதுதான். இவள் மூலமாய் வந்த சீதனம்தானே இந்தக் கடை. உண்மையில் பார்த்தால் இவள்தான் முதலாளி.

பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலை கிடைக்காமல் நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் போது, சுமைதாங்கிக் கல்லாய் வந்தார் என் மாமா.

பெண்ணையும் கொடுத்து, மளிகைக் கடையையும் ஆரம்பித்து, வியாபாரம் செய்ய முதலையும் கொடுப்பதாக என் பெற்றோரிடம் ஆசை காட்டினார். அவரும் மளிகை வியாபாரிதான்.

மளிகைக் கடை வேலையா என்ற என் தயக்கத்தை உமாவின் அழகும், வாழ்க்கையின் புரிபடாத போக்கும், பெற்றோரின் வற்புறுத்தலும் கரைத்துவிட்டன.

இந்த ஊரில் மளிகைக் கடை வைத்துக் கொடுத்து தனிக்குடித்தனம் நடத்தச் சொல்லிவிட்டு நகர்ந்து விட்டனர் அனைவரும்.

ஆரம்பத்தில் ஜோராய்த்தான் இருந்தது. திடீர்ப் பணப்புழக்கம், முதலாளி அந்தஸ்து, அழகான இளம் மனைவியின் நாணம், தடைசொல்ல யாருமில்லாத தனிக்குடித்தனம்... தலை நிமிர்ந்து நடந்தேன், சிறிது நாள்.

கடந்த ஆறு மாதமாய் வியாபாரம் டல்லடித்தது. ரோஜாப்பூ பாதை மறைந்து, நெருஞ்சி முள் பாதத்தைக் குத்த ஆரம்பித்தது.

சிவராஜ் எனது தூரத்துச் சொந்தம். வட்டிக்குப் பணம் கொடுத்துக் கொழிப்பவர்.

கொஞ்சம் பணம் கடன் வாங்கிப் போட்டு மீண்டும் நிமிர முயற்சி செய்தேன். ஆனால் இறக்கம் தொடர்கிறது.

உமாவிடம் சொன்னேன் எல்லாவற்றையும்.

''எவ்வளவு கடன் வாங்கினீங்க?'' என்றாள் கண்களை விரித்துக் கவலையாய்.

''ஏழாயிரம் ரூபாய்'' என்ற என்னை மிரட்சியுடன் பார்த்தாள்.

''கவலைப்படாதே, சமாளிச்சுடலாம்'' என்று ஆறுதல் சொன்ன என் குரல் பிசிறடித்தது.

சிவராஜைப் பார்க்கக் கிளம்பினேன்.

சிவராஜ் கையில்லாத பனியனும், வேட்டியும் அணிந்திருந்தார். சாய்வாக ஈசிச்சேரில் சாய்ந்திருந்தார்.

அப்போதுதான் சாப்பிட்டிருப்பார் போலும். வாயில் வெற்றிலை.

நான் இன்னும் சாப்பிடாதது நினைவுக்கு வந்தது.

''வாப்பா'' என்றார் கொழு கொழுத்த குரலில்.

''நீங்க வீட்டுக்கு வந்ததா உமா சொன்னா....''

''ம், ம்! வியாபாரம் எப்படிப் போகுது?''

''பரவாயில்லை.''

''அரிசியில் கோபாலுக்கு இந்த மாசம் பணம் வரலியாமே'' என்றார் கேள்விக் குறி



ஷுடன்.

அவரிடம் நான் கடன் வைத்திருப்பதைக் கூட தெரிந்து வைத்திருக்கிறாரே!

''அ... அது... பணத்தை நாளைக்குக் கொடுத்துடுவேன். ஒரு செக் வரதுக்குத் தாமதம் ஆயிடுச்சு.''

''பொய் சொல்லாதேப்பா. இதோ பாரு, நானும், நீயும் சொந்தக்காரங்க. அந்த உரிமையிலே சொல்றேன். வியாபாரம் நல்லாப் போச்சுன்னா செய். இல்லை, ஏறக்கட்டிடு. இல்லேன்னா, கடன் ஏறி மென்னியை முறிக்கும். பிசினஸ்னா தனி சாமர்த்தியம் வேணும்,'' என்று என்னை உறுத்துப் பார்த்தார்.

மேலே எதுவும் பேசத் தோன்றாமல் கிளம்பினேன்.

சித்திரை வெயிலின் தகிப்பு மனத்தில் எரிக்க, வீட்டுக்குப் போக மனசில்லாமல் நடந்தேன்.

''ஐயா, கிளி ஜோசியம் பார்க்கறீங்களா?'' என்று குரல் தடுக்கவே பார்த்தேன்.

சற்றுத் தள்ளி ஓரமாய் மரநிழலில் ஓர் ஆள் அமர்ந்திருந்தான். கீழே சிறிய விரிப்பு. அருகில் கிளிக் கூண்டு.. சீட்டுக்கட்டாய் ஜோசியக் கட்டு.

இதுவரை கிளி ஜோசியம் பார்த்ததில்லை. பார்த்தால் என்ன....?

அருகில் போய் அமர்ந்தேன்.

''ராசாத்தி கண்ணு, ஐயா பாரு உன்னைத் தேடி வந்திருக்காரு. அவர் மனசு குளிரும்படி சீட்டு எடுத்துக் கொடு'' என்று சொல்லியபடி கூண்டைத் திறந்து விட்டான்.

''கீ, கீ' என்ற குரலுடன் கீழே சிதறிக் கிடந்த நெல்லைக் கொத்தியது கிளி. பிறகு என் முகத்தைப் பார்த்தது. மடமடவென, அடுக்கியிருந்த சீட்டுக்களை கலைத்து, ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தது.

''மவராசி, உள்ளே போம்மா ராசாத்தி'' என்று அவன் கொஞ்சியவுடன் கூண்டுக்குள் சென்றது.

சீட்டைப் பிரித்தான். நான் வேடிக்கை பார்க்கும் சுவாரஸ்யத்தை மட்டுமே காட்டினேன், அந்த ஜோசியத்தில் நம்பிக்கை

**என்.பாஸ்கர்**

யில்லாமல்.

''ஐயா, சிக்கல் சிங்காரவேலன் வந்திருக்காரு. யோகம்தான்.''

''ப்ச்'' என்றேன் அலுப்பாய்.

''ஐயா, இப்ப நான் சொல்றது முருகன் மேலே சத்தியம். கடந்த ஒரு வருஷமா உங்க வாழ்க்கையிலே இறங்கு முகம். அதனால ஒரு சலிப்பு. ஆனால் அதெல்லாம் இரண்டே மாசத்துல நீங்கப் போகுது. முருகன் அருள் கிடைக்கப் போகுது'' என்றவுடன் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

''நிஜமாவா சொல்ற?''

''என் தொழில் மேலே ஆணையாச் சொல்றேன்.''

''ஏம்பா, கிளி ஜோசியம் என்ன பெரிய தொழிலா? ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் கிடைக்குமா இதுல? இதுமேலே ஆணை இட்டு நம்பச் சொல்றியே?'' என்றேன் அவனை மடக்க நினைத்து.

''ஐயா, நீங்க என்னைத் திட்டுங்க, பரவாயில்லை. என் தொழிலை அவமதிக்காதீங்க. செய்யற தொழில்தான் தெய்வம். அதுல நாம காட்டும் அக்கறையும், துடிப்பும்தான் செல்வம்'' என்றான் பட்டென்று.

எனக்குள் ஊதுபத்தியால் சுட்டமாதிரி இருந்தது.

''மத்தவங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நான் இதை நம்பிக்கையோட செய்யறேன். என்னோட நம்பிக்கை என் வாக்கிலும் வருது. அதனால் ஜோசியம் கேட்கறவங்க நம்பறாங்க. நீங்க கூட முதலில் ஆர்வம் காட்டலே. நான் குறி சொன்னதும் அக்கறை வந்ததா இல்லையா?''

மடக்க நினைத்த நானே மடங்கி விட்டேன்.

''தினசரி எனக்கு முப்பது ரூபாய் கிடைக்குது.''

''அப்படியா?'' என்றேன் ஆச்சரியமாய்.

''எல்லாம் நம்ம கையிலேதான் இருக்குது'' என்றவனிடம், ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினேன்.

''ராசாத்தி ஐயாவுக்கு வணக்கம் சொல்லு'' என்றான் முகம் முழுக்கச் சிரிப்பாய். கிளி 'கீ, கீ' என்றது.

என்ன எளிமையாய் என் தோல்வியின் காரணத்தை விண்டு வைத்துவிட்டான் இவன்!

என்னை நானே ஆராய்ந்தேன்.

பட்டப்படிப்பு படித்துவிட்டு மளிகைக் கடை வேலையா என்ற தயக்கம், என் தொழிலில் என்னை முழுமையாய் ஈடுபாடு கொள்ள விடாமல் தடுப்பதை உணர்ந்தேன். அந்தத் தயக்கத்தின் சங்கிலியாய் அக்கறையின்மை, அதனால் நினைத்தால் கடைக்கு விடுமுறை விடுவது, அதன்மூலம் வாடிக்கையாளரை இழந்தது என்ற யதார்த்தங்கள் வலம்வர தலை சிலுப்பிக் கொண்டேன்.

இதுதான் என் வாழ்க்கை. எந்தத் தொழிலும் கேவலமில்லை.

ஞானமாய் மனதில் உண்மை உறைக்க இறுக்கம் தளர்ந்து மனம் லேசானது. புது நம்பிக்கை ஊற வீட்டை நோக்கி நடந்தேன்.

உமா வாசலிலேயே நின்றிருந்தாள் கவலையுடன்.

''ராசாத்தி, முகம் ஏன் வாடிப் போயிருக்கு?''

''ராசாத்தியா? என்ன இது புதுசா?'' என்றாள் வியப்புடன்.

என் குரலில் தெரிந்த உற்சாகம் கண்டு, அவள் வியப்பு புன்னகையாய் மாறுவதை ரசித்தபடி நின்றேன்.

---



''பாப்பா நீ இந்த வீடு தானே?''

''ஆமாம்!''

''உங்க வீட்ல பணம் நகையெல்லாம் எங்கே வச்சிருக்காங்க?''

''பணத்தை அப்பா சாராயக் கடையிலும், நகையை அம்மா அடகுக் கடையிலும் வச்சிருக்காங்க!''

- வெ. பத்மாவதி




''கல்யாணத்துக்கு வர முடியலைங்கற சாக்கில் யாரும் மொய்யெழுதாமல் இருக்க முடியாது!''

''எப்படிங்க?''

''கல்யாணப் பத்திரிகையோடவே மணியார்டர் ஃபாரமும் இணைச்சிருக்கேன்!''

- எஸ். ரமேஷ்




# டெப்பாசிட்டுகள் வரவேற்கப்படுகின்றன

| | |
|---|---|
| குறைந்தபட்ச டெப்பாசிட் | : ரூ. 3000/- |
| குறைந்தபட்ச கால அளவு | : 12 மாதங்கள் |
| வட்டி விகிதம் | : மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ரூ.2 வீதம் |
| வட்டி அனுப்புதல் | : ஒவ்வொரு மாதமும் |

COCK BRAND FILE

TRADE MARK

MUTHUVEL

*Your Partner in Progress Since 1947*

# MUTHUVEL INDUSTRIES

**MFRS. OF COCKBRAND OFFICE FILES**

20-A, ROUND ROAD, P.B. NO. 32, DINDIGUL - 624 001.

PHONE: (OFF) 5260 & 7637 (RES) 5643 & 3726

# சின்னப் பாப்பா பற்றிச் சின்னச் சின்ன சந்தேகங்கள்



குழந்தை தண்ணீரில் நனைவதாலோ, ஜில்லென்றிருக்கும் நேரத்தில் வெளியே எடுத்துக் கொண்டு போவதாலோ, அதற்கு ஜலதோஷம் பிடிக்குமா?


● பிடிக்காது. உடலில் எதிர்ப்புச் சக்தி குறைவாய் இருப்பதால்தான் ஒருவருக்கு - குழந்தையோ, பெரியவரோ ஜலதோஷம் பிடிக்கிறது. அதிலும் குழந்தைக்கு எதிர்ப்புச் சக்தி பொதுவாகவே கொஞ்சம் குறைச்சலாகத்தான் இருக்கும். ஜலதோஷம், இருமுகிற போதும், தும்முகிற போதும் வெளிப்படும் வைரஸ் கிருமிகளால்தான் பரவுகிறது. எனவே, ஜலதோஷம் பிடித்தவர் தூக்கிக் கொள்வது, கொஞ்சுவது போன்ற காரணங்களால்தான் குழந்தைகளுக்குப் பெரும்பாலும் ஜலதோஷம் பிடிக்கிறது.

ஜுரம் வந்த குழந்தையைப் படுக்கையிலேயேதான் வைத்திருக்க வேண்டுமா?

● அவசியமில்லை. குழந்தைக்கு அசதியாய் இல்லையெனில் படுக்கையிலேயோ அல்லது வீட்டுக்குள்ளேயோ கூட விளையாடச் செய்யலாம். நடக்கவோ, ஓடியாடவோ அனுமதிக்கலாம். அதன் போக்கில் விடுவது நல்லது. வானிலை மோசமாயில்லையென்றால், சுத்தமான காற்றிலும் குழந்தையை எடுத்துக் கொண்டு போகலாம்.

குழந்தைக்குப் பசும்பால் தரலாமா?

● குழந்தைக்குரிய இயற்கை உணவு என பசும்பால் கருதப்படுவதில்லை. தாய்ப்பாலே சிறந்தது. என்றாலும் தவிர்க்க முடியாத காரணத்தால் தாய்ப்பால் இல்லாதபோது குழந்தைக்குப் பசும்பால் தருவதில் தவறொன்றுமில்லை. பசும்பாலில் சிறிதளவு சர்க்கரை, இரும்புச்சத்து, புரொட்டின், சோடியம் போன்றவை இருப்பதால், சிறு குழந்தைக்கு ஜீரணிப்பது சிறிது கடினமாய் இருக்கும். எனவே குழந்தைக்குப் பசும்பால் கொடுக்கும் போது நிறையத் தண்ணீரும் தரவேண்டியது அவசியம். பாலை நன்கு காய்ச்சி ஆற வைத்துத் தர வேண்டும்.



திட உணவு கொடுப்பதன் மூலம் இரவு முழுக்கக் குழந்தையைத் தூங்க வைக்க முடியுமா?

● முடியாது. பிறந்த நான்கு அல்லது ஆறுமாதம் முதல் குழந்தைக்குத் திட உணவு தர ஆரம்பிக்கலாம். ஒவ்வொரு குழந்தைக்கும் எடை, பசி, உணவு முறை இவையெல்லாம் ஒவ்வொரு மாதிரி இருக்கும். எனவே, அதைக்கணித்துத்தான் குழந்தைக்கு உணவு தர வேண்டும். அதிக அளவில் தரப்படும் திட உணவு, குழந்தையின் எடையை அதிகரிக்கச் செய்யுமேயொழிய, குழந்தையை இரவு முழுக்கத் தூங்க வைக்கும் என்று கூற முடியாது.



சீக்கிரமே பேச ஆரம்பிக்கும் குழந்தை மற்றவர்களை விடப் புத்திசாலியாய் இருக்குமா?

● குழந்தைகள் பேச ஆரம்பிப்பது ஒரு குறிப்பிட்ட வயதில்தான் என்று கூற முடியாது. இரண்டு வயதில் பேசத் தொடங்கும் குழந்தைகளும் உண்டு. முதல் பிறந்த நாளின் போதே அமர்க்களமாய்ப் பேசி ஆச்சரியப் படுத்தும் குழந்தைகளுமுண்டு. தாமதமாய்ப் பேச ஆரம்பிக்கும் குழந்தைகள் புத்திசாலித்தனம் குறைந்து காணப்படும் என்று கூற முடியாது. முதல் வயது முடியும் போது, பொதுவாய்க் குழந்தைகள் இருபது வார்த்தைகள் வரை பேசும். இரண்டு வயதாகியும், பேச்சு வரவில்லையென்றால், உடனடியாய் டாக்டரிடம் குழந்தையைக் காட்டுங்கள்.

குழந்தைக்குப் பல் முளைப்பது எப்போது?

● குழந்தைக்கு எப்போது பல் முளைக்கும் என்பதை திட்டவட்டமாய்க் கூறுவதற்கில்லை. பொதுவாக, பிறந்த ஆறாவது மாதம் கீழ் வரிசையில் அடுத்தடுத்து இரண்டு பற்கள் தோன்றும். ஏழு மாதம் முதல் பன்னிரண்டு மாதம் ஆவதற்குள்ளாக மேல் வரிசையில் நான்கு முளைக்கும். மூன்றாவது பிறந்த நாளின் போது, இருபது பற்கள் முளைத்து விட்டிருக்கும். சீக்கிரம் பற்கள் முளைத்தால், புத்திசாலியாய் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், ஒன்று; சீக்கிரம் பல்முளைத்தால், குழந்தையின் பொக்கைவாய்ச் சிரிப்பைக் கண்டு மகிழும் வாய்ப்பும் சீக்கிரமே போய்விடும்.

விரல் சூப்பும் குழந்தையின் பற்கள் பாதிக்கப்படுமா?

● விரல் சூப்புவது என்பது குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான விஷயமே. நாலுவயது வரை இப்பழக்கம் குழந்தைகளிடம் காணப்படும். அதற்குப் பின்பும் விரல் சூப்புதல் தொடருமானால் பற்கள் லேசாக முன்புறம் துருத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு. இது நிரந்தரமான பாதிப்பு அல்ல. ஈறுகளை மென்மையாய் அழுத்தி விடுவதன் மூலம், இதைச் சரிப்படுத்திவிட முடியும். முடியாது போனால் பல் மருத்து வரை அணுகவும்.

குழந்தைக்கு 'ஷு' போட்டு விட்டால் நடப்பது சுலபமாய் இருக்குமா?

● வெறும் காலால் நடப்பது குழந்தைகளுக்குப் பாதுகாப்பு. கால், நேரடியாய்த் தரையில் படும்போது, குழந்தையும் அதை நேரடியாய் உணர்ந்து கொள்ளும். குழந்தை பாலன்ஸ் தவறாமல் நடக்க இது உதவும். ஷு இல்லாவிட்டால்தான் குழந்தைகளுக்கு அதிக சௌகரியமும் கூட. இதனால் கால், கணுக்கால் இவை பலப்படும். குழந்தை சுயமாய் யாரையும், எதையும் பிடித்துக் கொள்ளாமல் நடக்க ஆரம்பிக்கும் வரை, ஷு அணிவிக்காமல் இருப்பது உசிதமானது. ஷு சரியான அளவினதாய் இருக்க வேண்டியது மிக அவசியம். கேன்வாஸ் ஷுக்கள்தான் நல்லது.

– டி. டி. கே நிறுவன வெளியீடான Bringing up Baby – A Woodward's Child Care Book என்ற புத்தகத்திலிருந்து. இப்புத்தகம் தமிழிலும் வெளிவந்துள்ளது. ஆசிரியர் : டாக்டர் நந்தினி. கார்ட்டூன் : ம.செ.

விலை : ரூ. 30/-

தொகுப்பு : பாரதிமௌலி

## லாட்டரி மோகம்!



அல்லாமில் வேகமாகப் பரவி வரும் வியாதி, லாட்டரி சீட்டு மோகம். தொழிலாளர்கள் அன்றாடக் கூலியை லாட்டரி சீட்டுகள் வாங்கியே இழக்கிறார்கள். பள்ளி செல்லும் சிறுவர்கள், ஒன்று – வீட்டில் திருடுகிறார்கள் அல்லது பிச்சையெடுத்து, அதில் சீட்டு வாங்குகிறார்கள். ஜோர்ஹட் மாவட்டத்தில் மாத்திரம், இதுவரை மூன்று நபர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள் – பரிசு கிடைக்காததால். பலர் தங்கள் மனைவியரை அடித்து, நகைகளைப் பறித்து விற்று, லாட்டரி சீட்டுகளை வாங்கிக் கொண்டிருக்க, ஒருவர் தமது மனைவியை விபச்சாரத்தில் ஈடுபட வைத்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். லாட்டரி சீட்டைத் தடை செய்யக் கோரிப் பல மாதர் சங்கங்களிடமிருந்து மாவட்டக் காவல் அதிகாரிக்கு மனுக்கள் குவிந்தவண்ணம் உள்ளன.

ஆதாரம் ; டெக்கான் ஹெரால்ட்
தகவல் : பி. எஸ். ஜெயராமன்

வருமானவரி அதிகாரி : கணக்கை ரொம்ப அழகா வச்சிருக்கீங்களே, எப்படி முடிகிறது உங்களால்?

அவர் : சும்மாவா? 'ஜோடனை' செய்யப்பட்ட கணக்காயிற்றே, அழகாத்தான் இருக்கும்!

- பெ. கலாசாமி



பெங்களூர் ரிப்போர்ட் :

# புலிக்கு ஒரு பலி!



பெங்களூருக்குச் சற்று தொலைவிலிருக்கும் நேஷனல் பார்க்கில் 'ஸஃபாரி ரைடு' இருக்கிறது. இது திறந்த வெளியில் சுற்றித்திரியும் விலங்குகளைச் சுற்றிலும் கண்ணாடி பொருத்தப்பட்ட வேனுக்குள் இருந்து பார்த்துவருவது. விலங்கியல் பூங்காவிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த ஸஃபாரி ரைடு அமைந்திருக்கிறது.

மரியம் என்பவள் துறுதுறுப்பான அழகான குழந்தை. பெங்களூரின் ஆங்கிலப் பள்ளியொன்றில் முதல் வகுப்புப் படிக்கிறவள். மற்ற குழந்தைகளைப் போலவே விலங்கியல் பூங்கா பார்க்க ஆசைப்பட்டு, பெற்றோருடன் அந்த ஞாயிற்றுக்கிழமை வந்திருக்கிறாள். குழந்தைக்கு அப்பாவை விடவும் தாத்தாவின் மீது செல்லம் அதிகம். அதனால் ஸஃபாரி வேனில் கூட தாத்தாவின் மடியில் அமர்ந்துதான் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்திருக்கிறாள்.

இவர்கள் வந்த வேன், 'இங்கிலாண்ட் டைகர்ஸ் பார்க்' என்ற பகுதிக்கு வந்திருக்கிறது. ஏழு வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் நடைபெற்று வந்த பிரபல சர்க்கஸ் கம்பெனியொன்று மூடப்பட்டதால் அந்த சர்க்கஸிலிருந்த ஆறு புலிகளை வரவழைத்து இங்கே இவ்வளவு நாட்களும் வைத்திருந்தார்கள். ஆறு புலிகளில் இரண்டு புலிகள் ஏற்கெனவே இறந்து போய்விட, தற்சமயம் நான்கு புலிகள் இந்தப் பகுதியில் உலவுகின்றன. அவற்றில் பில் என்ற புலியும் ஒன்று.


எப்போதுமே இம்மாதிரி பயணிகள் வேன் வரும்போது அருகில் வந்து பார்ப்பதும் சாதுபோலப் போய்விடுவதும் புலிகளின் வழக்கம். ஆனால் அதற்கு மாறாகக் குழந்தை உட்கார்ந்திருந்த ஜன்னலோரத்துக் கண்ணாடியை இந்தப் புலி ஓங்கி அறைந்திருக்கிறது. அந்த ஜன்னல் கண்ணாடி ஏற்கெனவே கீறல் விழுந்திருந்த கண்ணாடியாம். ஒரே அடியில் மொத்தக் கண்ணாடியும் கீழே உடைந்து நொறுங்கிவிட அடுத்த கணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இந்தப் பச்சிளங்குழந்தையைக் கவ்விக் கொண்டு தன் பாட்டுக்குப் போயிருக்கிறது புலி.

அதன் பிறகுதான் உணர்வு வரப் பெற்றவர்களாக எல்லாரும் கிடந்து கூச்சலிட, மூர்த்தி என்ற வேன் டிரைவர் புலியைத் துரத்திக் கொண்டே ஓடியிருக்கிறார். ஒன்றும் பிரயோஜனமில்லை.

தகவல் தெரிந்து காட்டிலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் மற்றவர்களும் ஓடிவந்து டிராங்குலைசர் மூலமாக மயக்க ஊசி செலுத்தி, குழந்தையைப் புலியிடமிருந்து மீட்க முயன்றிருக்கிறார்கள். ஒன்றரைமணி நேரத்துக்குப் பிறகு கிடைத்தது, குழந்தையின் உருக்குலைந்து போன சடலம்தான்.

இப்படியொரு சம்பவம், கடந்த பதினைந்து வருடங்களில் நடைபெற்றதில்லையாம். இனிமேல் கண்ணாடி இருக்கும் பகுதிகளில் கூடுதலாய் வலைக்கம்பியும் அடித்து பத்திரப்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு நிர்வாகத்தினர் வந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த ஞானோதயத்துக்கு ஒரு அழகான புத்திசாலிக் குழந்தையை விலையாகக் கொடுக்க நேர்ந்திருப்பதுதான் கொடூரம்.

- பெர்ணாண்டஸ்.


21%
AVAIL 21% INTEREST FOR FIXED DEPOSITS
PERIOD OF DEPOSIT : ONE YEAR
AMOUNT OF DEPOSIT : Rs. 5000 AND ABOVE
INTEREST PAYABLE : MONTHLY
பாலு ஜுவல்லர்ஸ்
72 உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600017. போன்: 441812, 441741

# பாக்கெட் கம்ப்யூட்டர் முதல் பகட்டான ஆடை வரை!

மூலதனம் கோரி பங்கு மார்க்கெட்டுக்குச் சீக்கிரமே வரவிருக்கும் இன்னும் சில நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவை நல்ல எதிர் காலம் உள்ளவை. இவற்றின் பங்குகள் மதிப்பும் அதற்கேற்ப கணிசமாக உயரும் வாய்ப்புக்கள் உள்ளன.

## ZENITH COMPUTERS LTD

கம்ப்யூட்டர்களுக்கு இப்போது உள்ள மவுசு அனைவரும் அறிந்ததே. டெலிஃபோன் பூத்தில் தொடங்கி, பிரும்மாண்ட தொழிலகம் வரை கம்ப்யூட்டர்களின் இயக்கத்தைக் காண்கிறோம். ஸீனித் நிறுவனம் பலதரப்பட்ட கம்ப்யூட்டர்களைத் தயாரித்து வருகிறது. தற்போது கோவாவில் நூறு சதமும் ஏற்றுமதிக்கென்றே ஒரு கம்ப்யூட்டர் தொழிலகம் நிறுவத் திட்டமிட்டுள்ளது. புதிதாக ''நோட் புக்'' கம்ப்யூட்டர்கள் உருவாக்கவும் தீர்மானித்துள்ளது. ''நோட் புக்'' கம்ப்யூட்டர்கள் எனப்படுபவை சிறிய அளவில், இலேசாகவும், மெலிதாகவும் இருக்கும். இடம் விட்டு இடம் எடுத்துச் செல்ல எளிது. இந்தப் புதிய திட்டத்துக்கு மூலதனம் திரட்ட 45 லட்சம் பங்குகளை நிறுவனம் விநியோகிக்கிறது. ஒவ்வொரு பங்குக்கும் கூடுதல் தொகையாக ரூ 35 தரவேண்டும். அதாவது ஒரு பங்கின் விலை ரூ 45 ஆகிறது. என்றாலும் இந்த நிறுவனம் கடந்த காலத்தில் தொடர்ந்து லாபம் ஈட்டி வந்திருப்பதும் சிறப்பாக நடைபெற்று வருவதும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை வளர்ப்பதாக உள்ளது. அதனால் சிபாரிசு செய்யப்படுகிறது.

## SHIVAJI WORKS LTD.

மிகப் பிரபலமான கிர்லோஸ்கர் குரூப்பைச் சேர்ந்தது இந்த நிறுவனம். வார்ப்படத் தொழிலில் ஈடுபட்டுக் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து லாபத்தில் பங்குதாரர்களுக்கு டிவிடெண்ட் கொடுத்து வந்திருக்கிறது. கிர்லோஸ்கர் குரூப் என்பதே ஒரு பெரிய பலம். மூலதனத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் தற்போது பத்து ரூபாய் பங்குகளை ரூ 75 க்கு வழங்க முன்வந்துள்ளது. ரூ 65 கூடுதல் விலை கொடுத்து வாங்கினாலும் இவற்றின் மதிப்பு மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்களே மிகுதி. இப்போதே இந்த நிறுவனத்தின் பங்குகள் ரூ 120 வரை விலை போகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

## MIKADO TEXTILE INDUSTRIES LTD.

செயற்கை நூலிழை கொண்டு இந்த நிறுவனம் ஸூட்டிங், ஷர்ட்டிங், மற்றும் புடைவைகள் தயாரித்து வருகிறது. மகாராஷ்டிரத்தில் அமைந்துள்ள தொழிலகம், கடந்த காலத்தில் சிறப்பாக நடந்து வந்திருக்கிறது. 'மிகாடோ' என்ற வர்த்தகப் பெயரில் இதன் தயாரிப்புக்கள் விற்பனையாகின்றன. சமீபத்திய தொழில் நுட்பங்களைப் பெற்று உயர் ரக ஸூட்டிங்குகள் தயாரிக்கத் திட்டம் வகுத்துள்ளது இந்நிறுவனம். இந்த விரிவாக்கம் கருதி 29,60,000 பங்குகளை பொது மக்களுக்கு விநியோகிக்கிறது. ஒவ்வொரு பத்து ரூபாய்ப் பங்குக்கும் ரூ 15 கூடுதல் விலை தந்து ரூ 25 க்குப் பெற வேண்டும். ஆயினும் இதுவும் மிக நல்ல, லாபகரமான ஒரு முதலீடாகவே அமையும்.

சேமிப்பு உள்ளவர்கள் சென்ற இதழிலும் இந்த இதழிலும் விவரிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், பங்கு மார்க்கெட்டுக்கு வரும் நாளை கவனமுடன் எதிர் நோக்கி இருப்பது நலம். இந்த மாதமோ அல்லது அடுத்த மாதத் தொடக்கத்திலோ நாளிதழ்களில் அறிவிப்புக்களைக் காணலாம்.

- வி. கோபாலன்



# அஞ்சலி

வியாழக் கிழமை மதியம் மூன்று மணி. தாத்தா இறந்து விட்டார். மூன்று நாட்களாக ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி, சீரியஸாக இருந்ததால் ஓரளவு எதிர்பார்த்த செய்திதான் என்பதால் அதிர்ச்சி ஏற்படவில்லை. வயதும் எண்பதைத் தாண்டியவர்.

ஈமக்கிரியையைத் தொடர்ந்து, மற்ற கர்மாக்கள் தாத்தாவின் பெரிய பிள்ளை வீட்டில் நடக்க இருந்ததால் எல்லோரும் அங்கு கூடினர். தாத்தா பெரிய சம்சாரி. அவரின் இரண்டு பிள்ளைகள், மூன்று பெண்கள். இவர்களின் குடும்பம் மேலும் பெருகி மூன்று தலைமுறைகளாக, கொப்பும் கிளையுமாகப் பரவியிருந்தது.

ஆரம்ப துக்க அழுகைகள் மெதுவாக ஓயத் தொடங்கி, காப்பி, சாப்பாடு, சீட்டு, பேச்சு என்ற சகஜ நிலை மெதுவாக திரும்பத் தொடங்கியது.

தாத்தாவின் கடைசித் தம்பிதான் அவர் இறந்த போது கூட இருந்தார். இதுவரை அவர் தாத்தா எப்படி இறந்தார் என்பதைப் பதினெட்டுத் தடவையாவது விவரித்திருப்பார்.

''டாக்டர் ஒரு மாதிரி சொல்லிட்டார் இனிமேல் தாங்காதென்று. கடைசியில் சுவாசம் மெதுவாக இழுக்க ஆரம்பிச்சது. எனக்கு என்னமோ மனசுல பட்டது. உடனே கங்கை ஜலத்திலே ஒரு ஸ்பூன் வாயிலே விட்டுக் காதில கர்ண மந்திரம் சொன்னேன். சித்த நாழிக்கெல்லாம் அண்ணா ஒஞ்சுட்டார்.''

''நீ சொல்றச்சேயே எனக்குச் சிலிர்க்கிறது. எவ்வளவு பாக்கியம். அதுவும் உனக்குத் தோணியிருக்கே கர்ண மந்திரம் சொல்லணும்னு...'' அத்தை வெகுவாக சிலாகித்துக் கூற, இந்தப் பெருமையில் பங்கு கிடைக்காத தாத்தாவின் புத்திரர்கள் வெந்தனர்.

''கடைசி நேரத்தில் கிட்ட இருக்க முடியாமப் போச்சு. மூன்று நாளா ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் அலைஞ்ச அலைச்சல்லே அன்னிக்கி மத்யானம்தான் சித்த ரெஸ்ட் எடுக்க வீட்டுக்குப் போனேன்!''

என்று பெரிய பிள்ளை கூற, ''நான் கிட்ட இல்லாம இருந்தது நல்லதாச்சு. அப்பா கடைசி மூச்சு விடறதை நேரே பாத்து என்னால தாங்கிண்டு இருந்திருக்க முடியாது'' என்றார் சின்னவர்.

''எல்லாம் சரி. இவ்வளவு நாள் இருந்தார். தன் குட்டிக் கொள்ளுப் பேத்தியைப் பார்க்காம போயிட்டாரேன்னு எனக்கு நெஞ்சு கொள்ளாத வருத்தம். பேத்திகள்ளே நான்னா தாத்தாவுக்கு உசிரு. நான் ப்ரெக்னன்டா இருக்கேன்னு தெரிஞ்சதும் எனக்கு நல்லபடியா டெலிவரி ஆகி என்னை மாதிரியே அழகான பெண்தான் பிறக்கும்னு வாரா வாரம் லெட்டர் போடுவார். இப்ப என் குட்டிப் பெண்ணைப் பாக்காம கண்ணை மூடிட்டாரே...'' என்று முந்தானைக்குள் விசும்பினாள் பேத்தி. இரண்டு மாதக் குழந்தையுடன் தாத்தாவின் அந்திம காரியங்களில் பங்குபெற பம்பாயிலிருந்து விமானத்தில் வந்திருந்தாள்.

''போன வருஷம் நவராத்திரி போது மைசூர் வந்திருந்தார். கார் ஏற்பாடு பண்ணி

பானுகுமார்

எல்லா இடமும் சுத்திக் காண்பிச்சேன். கோலாகலத்தைப் பார்த்து பிரமிக்கப் போயிட்டார்'' - இது தாத்தாவின் நான்காவது பெண்.

''பம்பாய் வந்த போது எங்காத்துக்காரர் மஹாலக்ஷ்மி, சித்தி விநாயகர் என்று எல்லா கோயில்களுக்கும் மாருதில அழைச்சுட்டுப் போனார். உனக்கு அவ்வளவு புண்ணியம்மா என்று வாய்க்கு வாய் ரொம்பற வரைக்கும் சொன்னார்!'' இது மூன்றாமவள்.

''உங்காத்திலே நாலு நாள்தானே இருந்தார். எங்காத்திலே ஒரு மாசம் போல இருந்தார். சுத்திப் பார்க்க எங்க ஊர்ல ஒண்ணுமில்லே, வெறும் கிராமம். தினம் புதுசு புதுசா டிபன் பண்ணித் தந்தேன். ஒரு நா சேவை, ஒரு நா தயிர் வடை, பஜ்ஜி இப்படி. அடிக்கடி ஸ்வீட் பண்ணுவேன். கேசரி, குலாப்ஜாமூன், பாதாம் கீர்னு... அதுவும் நா பண்ற அப்பம்னா அப்பாக்கு உசிரு. இவ்வளவு ஸாப்டா எப்படி பண்றேன்னு ஆச்சரியப்பட்டுப் போனார்.'' - இது இரண்டாவது மகள்.

மாட்டுப் பெண்கள் இருவரும் முகத்தைக் கோணியது இவள் கண்களில் படவில்லை.

''எங்க போய் எதைச் சாப்பிட்டாலும் அவருக்கு ஒத்துக்காது. திரும்பி வந்து 'சுகர்' ஜாஸ்தியாகி படுத்து விடுவார். நியமமா ஆகாரம் கொடுத்து நாங்க பாத்துண்டு இருந்ததாலதான் இத்தனை வருஷம் தாக்குப் பிடிச்சது சரீரம். எங்களுக்குத் தெரியும் நாங்க பட்ட பாடு.''

''அந்தக் காலத்து உடம்பு... தாக்குப் பிடிச்சது... இதிலே மத்தவங்க பெருமைப் பட்டுக்க என்ன இருக்கு?''

ஒரு சண்டையின் ஆரம்பத்தை உணர்ந்த பேரன் மாலி பேச்சை மாற்ற முயன்றான்.

''தாத்தாவுக்கு இளநீர்னா ரொம்பப் பிடிக்கும். கடைசிலே அவருக்கு யூரின் சரியா பாஸ் ஆகாம கஷ்டப்பட்ட போது நான்தான் டெய்லி இரண்டு இளநீர் வாங்கிண்டு வருவேன். ஃப்ரிஜ்ல வெச்சு ஜில்லுன்னு குடுப்பேன். செத்துப் போன அன்னிக்குக் காலம்பற கூட என் கையால இளநீர் வாங்கிச் சாப்பிட்டார்.''

''தாத்தாவுக்கு எல்லாத்திலேயும் இன்ட்ரஸ்ட். போன வருஷம் தீபாவளி ஹாலிடேஸ் போது ஸ்லைட் ப்ரொஜெக்டர்ல நான் ஃபாரின் போன போது எடுத்த ஸ்லைடெல்லாம் போட்டுக் காண்பித்தேன். என்ன பிரமாத போட்டோகிராபின்னு புகழ்ந்து தள்ளிட்டார். என்ன இருந்தாலும் ஃபாரின் போனா அந்த ஸிஸ்டத்தையும் நீட்நெஸ்ஸையும் பார்த்தா போட்டோ எடுத்துத் தள்ளணும்னு தோணறது'' - இது இன்னொரு பேரனின் பீத்தல்.

இது காதில் விழாதவாறு அவன் மனைவி தன் பங்குக்கு ஆரம்பித்தாள்.

''இந்த சின்ன வயசிலே எவ்வளவு பக்தியோட இருக்கேம்மா. நீ பாடற பஜன்ஸ் கேட்டா ஆனந்தமா இருக்கு. நா ஊருக்குப் போறதுக்குள்ளே எல்லாவத்தையும் டேப் பண்ணிக் கொடுன்னு கேட்டு வாங்கிப் போனார்.''

இதற்குள் சாயந்திர டீவியில் சினிமா நேரம் நெருங்குவதை உணர்ந்த பெரிய மருமகள், ''சரி. சரி. எழுந்து காரியத்தைப் பார்க்கலாம்,'' என்றாள்.

''ஆமாமாம். போனவரைப் பத்தி மணிக்கணக்காப் பேசிண்டு இருந்தா இருக்கறவா வயிறு எப்படி நெறையறது...'' என்று சின்னவள் எழுந்தாள்.

துக்க சபை கலைய, குட்டிப் பேத்திக்கு முன் பிறந்த குட்டி கொள்ளுப் பேரனான மூன்று வயது அருண் மட்டும், உக்கார்ந்து, மூக்கைப் பிடித்தவாறு ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தான்.

''என்னடா பண்றே?''

''கொள்ளுத் தாத்தா தினம் உம்மாச்சி பூஜை பண்ணுவா, அது மாதிரி நானும் ஓம் ஓம் பண்றேன்.''

அந்த தற்பெருமைக் கூட்டத்தில் அந்தப் பிஞ்சின் செய்கை மட்டுமே இறந்தவருக்கு அஞ்சலியாக அமைந்தது.

## என்று விடியும்?

பாமரன் வயிற்றைச் சுரண்டிச் சேர்த்த
பணத்தால் வளர்ந்த இமயங்கள்!
பங்குச் சந்தைக் கொள்ளை களுக்குப்
பதவிகளே துணை மையங்கள்!
நிலைகளுக்கோ எல்லைகள் இல்லை
திருடர்க ளுக்குப் பயம் இல்லை!
சிந்தும் சொற்களில் கூடும் வீரம்
செய்யும் செயலின் வசம் இல்லை!
எண்ணிப் பார்த்தால் வேர்க்கிறது!
எப்போ இவற்றைத் தீர்க்கிறது?



உண்மை, நேர்மை, வாழும் இடங்கள்
உன்னத கதையில் பாடலிலே!
உள்ளக் கனிவதை புகுத்தால் தானே
உயரும் வாழ்க்கை நாடிதிலே!
கண்முன் நடக்கும் கோரங்க ளுக்காய்க்
கண்ணீர் வடித்தல் அறியாமை!
கைகள் உயர்த்திக் கலியை அழிக்கும்
காலம் படைக்கும் அறிவாண்மை!
என்று விடியும் என்றிருக்காமல்
இருளைக் கிழிக்கச் சேருங்கள்!

- நா. சீ. வரதராஜன்

# வேலை காரணமாக வெளியூர் போன இடத்தில் திடீரென்று அந்தக் கவலை பிடித்துக் கொண்டது. மகளுக்கு எம்பிஏ அட்மிஷன் கிடைத்து விட்டால் பணத்துக்கு என்ன செய்வார்கள்?



அப்போது எனக்கு வட நாட்டில் வேலை. மகன்கள், மகள் அனைவருமே படிப்பில் கெட்டி. பொதுவாக, எங்கள் வீட்டில் படிப்புக்குத்தான் முதலிடம். பெரிய பெண் என்ஜினியரிங்கில் சேர்ந்திருந்தாள். மகன் பிளஸ் டூ. இரண்டாவது மகள் எம்பிஏ நுழைவுத் தேர்வு எழுதிவிட்டு முடிவு தெரிவதற்காகக் காத்திருந்தாள்.

அவளுக்கு நிச்சயம் இடம் கிடைத்து விடும் என்று நாங்கள் எல்லாருமே நம்பிக்கையோடிருந்தோம்.

என் மனைவி யாரிடமும் அதிகம் பேச மாட்டாள். எதற்கும் அலட்டிக் கொள்ளாத குணம். நான் அதற்கு நேர்மாறானவன். எப்போதும், எதிலும் ஒரே பரபரப்பு. எனவே, என்னதான் நம்பிக்கை இருந்தாலும், மகளுடைய எம்பிஏ அட்மிஷன் விஷயத்தில் சற்றுப் பதட்டமாகவே இருந்தது.

அந்தச் சமயம் பார்த்துத் தெற்கே தமிழ் நாட்டுக்கு வர வேண்டியதாகி விட்டது. அலுவலக வேலை. 'பாஸ்' சொல்லி விட்டால் மறுப்பதற்கில்லை. இதில் இன்னுமொரு தர்ம சங்கடம். குறித்த நாளில் திரும்ப முடியாது. பத்து நாட்கள் எனத் திட்டமிட்டுப் போனால், சமயங்களில் அதற்கும் மேல் அதிகமாகத் தங்கிவிட நேர்ந்து விடும். என் வேலை அப்படி.

இம்முறை, தமிழ்நாட்டுப் பயணத்திலும் அப்படித்தான் ஆகி விட்டது. அந்தச் சமயம் பார்த்து, வேலை காரணமாக வெளியூர் போன இடத்தில் திடீரென்று அந்தக் கவலை பிடித்துக் கொண்டது. மகளுக்கு எம்பிஏ அட்மிஷன் கிடைத்து விட்டால் பணத்துக்கு என்ன செய்வார்கள்? நான் வேறு இல்லையே! பணம் புரட்டத் திண்டாடிப் போய் விட மாட்டார்களா?

என் இயற்கைக் குணமான பதட்டம் என்னைத் தொற்றிக் கொண்டது. அதன் தொடர்ச்சியாக ஒரே குழப்பம். எப்போது ஊர் திரும்பப் போகிறோம் என்றாகி விட்டது.

வேலை முடிந்து, அதே கவலையுடன் ஊர் திரும்பினேன்.

மலர்ந்த முகத்துடன் மனைவி வரவேற்றாள்.

''என்ன ஆச்சு?'' என்று கேட்டேன் அவசரத்துடன்.

''எது என்ன ஆச்சு?''

''எம்பிஏ அட்மிஷன் தான்.''

''ஓ அதுவா! ரிசல்ட் வந்து அவள் சேர்ந்தாச்சே!''

எனக்கு ஒரே திகைப்பு.

''பணத்துக்கு என்ன செய்தாய்?''

''நீங்கள் இல்லையென்றால் எல்லாமே அப்படியே நின்று விடுமாக்கும்!''

''சரி, நிற்காது. எப்படிச் சமாளித்தாய்? அதைச் சொல்லு.''

''ரொம்ப நாளுக்கு முன்னால் ஸ்ரீராமில் சீட்டு சேர்ந்து, அது முடிஞ்சதும் அந்தத் தொகையை அங்கேயே டெபாசிட் போட்டிருந்தது மறந்துடுச்சா?''


உண்மையில் அது எனக்கு மறந்துதான் போயிருந்தது. இப்போது மனைவி சொன்னதும் சட்டென்று நினைவுக்கு வந்தது. அவள் தொடர்ந்தாள்.

''அந்தத் தொகை இப்போ பயன்பட்டுது.''

மனைவியின் மீது நன்றி பெருக்கெடுத்தது.

-கே.பி.சதீஷ்குமார், சென்னை -53.

# காலத்தின் சுழற்சியில் ஹீரோ-72


● ஜிதேந்திரா

ஒரு மனிதன் தோல்வியைச் சந்திக்க நேர்ந்து விட்டால் அதிலிருந்து அவன் மீண்டு வருவதற்குள் படாத பாடு பட வேண்டியிருக்கும் என்பதை அனுபவபூர்வமாக நான் உணர்ந்து வந்த தருணம் அது. இதிலே புறக் காரணங்கள் ஒரு புறம் என்றால், அகக் காரணங்களும் உண்டு. எந்த ஒரு விஷயத்தையும் தீர ஆலோசித்து முடிவு எடுக்கும் மனநிலை அப்போது இராது. ஒன்று, எதைச் செய்தாலும், 'பிரமாத வெற்றி பெற்று நம் கஷ்டமெல்லாம் விடிந்து விடப்போகிறது' என்ற குருட்டு நம்பிக்கை இருக்கும்; அல்லது, நிச்சயம் வெற்றி பெறக்கூடிய விஷயத்தில் கூட, 'ஒரு வேளை தோல்வி அடைந்து விட்டால் நம் கதி என்ன?' என்ற அவநம்பிக்கை இருக்கும்! 'அவளுக்கென்று ஓர் மனம்' எடுத்த போது, என் உள்ளம் முதல் நிலையில் இருந்தது. இப்போது 'துளசி' எடுக்கத் தொடங்கும்போது இரண்டாவது நிலையில் சிக்கித் தவித்தது!

விளைவு? 'துளசி' கதையில் ஆன்டி சென்டிமென்ட் விஷயங்கள் இடம் பெற்றிருந்ததால், 'மக்களின் ரசனைக்கு ஒத்துப் போகாதோ?' என்று சந்தேகம் ஏற்பட்டது. படம் நாலாயிரம் அடி வரை வளர்ந்த பிறகு கதையை மாற்றினேன்! மாற்றி அமைக்கப்பட்ட கதைக்குத் 'தெலுங்கில் சோபன் பாபுவும் வேண்டாம்; தமிழில் ஏ.வி.எம் ராஜனும் வேண்டாம்; வேறு யாரையாவது போடலாம்' என்று தோன்றியது! அப்போது கன்னடத்தில் சூப்பர் ஹிட் ஹீரோவாக விளங்கிய விஷ்ணுவர்த்தனைத் 'தெலுங்குப் படத்தில் ஹீரோவாகப் போட்டால் என்ன?' என்று யோசித்து, பிறகு தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டுக்குமே அவரை ஹீரோவாக்கினேன்! மறுபடி ஆரம்பத்திலிருந்து ஷூட்டிங்! இப்படி பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு 'துளசி' ரிலீஸ் ஆகியது. 'துளசி' என்ற பெயரில் அல்ல! அதிலும் ஒரு மாற்றம். ''அலைகள்'' என்ற தலைப்பில் வெளிவந்தது! இப்படி பல குழப்பங்களுக்குப் பிறகு வெளியான அந்தப்படம்....

அடி வாங்கியது! சித்ராலயாவுக்குப் பட்ட காலிலேயே படும் என்பதுபோல் அடுத்தடுத்து தோல்விகள்! என் தன்னம்பிக்கையையே சிதற அடித்த தோல்விகள்!

● பத்மப்ரியா


''என்ன காரணம்?'' - நான் அமைதியாக யோசித்தேன். என் படங்களில் மாபெரும் தவறுகள் ஏதும் நான் செய்து விடவில்லை. பிறகு ஏன் தோல்வி அடைந்தன? அந்தக் காலகட்டத்தில் வெளி வந்து, வெற்றி பெற்ற இதர படங்களைப் பார்த்தேன். என் படங்களுடன் ஒப்பிட்டேன். புரிந்தது; மக்களின் ரசனையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கிளாஸிக் படங்களை விட ஆக்ஷன் படங்களையே அதிகம் இன்று விரும்புகிறார்கள்.

இப்போது என்ன செய்வது? எப்படியும் சித்ராலயாவை இக்கட்டிலிருந்து மீட்டாக வேண்டுமே! நண்பர்கள், ''நாமும் சிவாஜியை வைத்து ஒரு ஆக்ஷன் படம் எடுத்தால் என்ன?'' என்று கேட்டார்கள். ''சரி'' என்று சம்மதித்தேன். சிவாஜியை அணுகினேன்.

சிவாஜி உடனடியாக ஒப்புக் கொண்டார். அன்றைய தினமே சிவாஜியின் சில குளோஸ்-அப் ஸ்டில்கள் எடுத்து, பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரம் தந்தேன். படத்தின் பெயர்: ''ஹீரோ - 72!'' அது 1972 - ம் ஆண்டு. படத்தின் டைட்டிலே அது ஒரு ஆக்ஷன் படம் என்பதை உணர்த்தியது.

மறுபடி பழைய பல்லவி. இப்போதுள்ள நெருக்கடியில் ஒரு படம் எடுத்தால் போதாது. தமிழிலும் ஹிந்தியிலும் ஒரே சமயத்தில் ஹீரோ - 72 படத்தை உருவாக்கத் தீர்மானித்தேன்.

பம்பாய் சென்று சில விநியோகஸ்தர்களைச் சந்தித்தேன். ''யார் யார் நடிக்கிறார்

டைரக்டர் ஸ்ரீதர்

கள்?'' என்பதே அவர்கள் கேட்ட முதல் கேள்வி. அமிதாப்பச்சன், ஜிதேந்திரா, ஹேமமாலினி ஆகிய மூவரையும் புக் பண்ணுவதாகக் கூறினேன். உற்சாக வரவேற்பு இருந்தது. அதன்படியே ஹீரோவாக ஜிதேந்திராவையும் ஹீரோயினாக ஹேமமாலினியையும் ஒரு குண சித்திர பாத்திரத்தில் அமிதாப்பையும் ஒப்பந்தம் செய்தேன்.

இந்த இடத்தில் ஒரு ஃப்ளாஷ் பேக்!

ஹேமமாலினியை ஆரம்பத்தில் நான் வசன உச்சரிப்பு, உடலமைப்பு சரியாக இல்லை என்று ஒதுக்கியிருந்தாலும் கூட, 'சிவந்த மண்' படத்தில் அவரை நடிக்க ஒப்பந்தம் செய்ய விரும்பியது உங்களுக்கு நினைவிருக்கும்.

ஆனால் அவர் அப்போது அனந்தசாமி என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் ஹேமா சம்மதித்த போதிலும் அவரின் தாயார் ''வேண்டாம்'' என்று கூறி விட்டார்.

நான் சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தும் ஜெயாசக்கரவர்த்தி பில் வேறு காரணங்களுக்காகத் தடுத்து விட்டார். இந்த விவரங்களையெல்லாம் விரிவாக முன்னமேயே கூறியிருக்கிறேன். ''அனந்தசாமியுடன் ஒப்பந்தம் காலாவதியானதும் ஹேமா உங்கள் படத்தில் நடிப்பாள்'' என்று ஜெயா அன்று கூறியிருந்தார். இப்போது அது நிறைவேறியது.

''காதலிக்க நேரமில்லை'' படத்தை நான் ''பியார் கியே ஜா'' என்று ஹிந்தியில் எடுத்த போது, ஹிந்திக்கு ஒரு புதுமுகம் தேடிக் கொண்டிருந்தேன். அப்போது ஓர் இளைஞர் அடிக்கடி என்னை வந்து சந்தித்து வாய்ப்புக் கேட்டார். சாந்தாராமின் ஒரே ஒரு படத்தில் நடித்திருந்த அவர் - வேறு யாருமில்லை, ஜிதேந்திராதான்! ஏனோ அப்போது அவர் என்னை இம்ப்ரஸ் செய்யவில்லை. ஆனால் இப்போது அதே ஜிதேந்திராவைத்தான் நான் கதாநாயகனாகப் போட விரும்பினேன்!

''சிவந்த மண்'' படத்துக்கும் முன்னதாக ஒரு ஹிந்தி படம் எடுக்கும் எண்ணத்துடன் நான் பம்பாயில் தங்கியிருந்த ஒரு தருணத்தில் என்னுடைய பம்பாய் புரொடக்ஷன் மானேஜர் எனக்கு ஓர் இளைஞரை அறிமுகப்படுத்தி வைத்தார். ''உங்கள் படத்தில் நடிக்க ஆசைப்படுகிறார்'' என்றார். அவர்தான் அமிதாப்! அவருடைய பர்சனாலிடி எனக்குப் பிடித்திருந்தது. கோபு எழுதிய ''வீட்டுக்கு வீடு'' கதையைத்தான் அப்போது ஹிந்தியில் எடுக்கத் திட்டமிட்டிருந்தோம். அதிலே அமிதாபுக்குப் பொருத்தமாக ஒரு கேரக்டரும் இருந்தது. உடனே முப்பதாயிரம் ரூபாய் பேசி, ஆயிரம் ரூபாய் அட்வான்ஸும் தந்து விட்டேன். ஆனால் ஏதேதோ காரணங்களால் ''வீட்டுக்கு வீடு'' படம் ஹிந்தியில் எடுக்கப் படாமலே போய்விட்டது!

ஆக மொத்தம் இன்று ''ஹீரோ - 72'' ஹிந்தி படத்துக்கு நான் நடிக்க ஒப்பந்தம் செய்த மூவருமே முன்னொரு கட்டத்தில் என்னால் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்டவர்கள்; அல்லது, 'புக்' ஆகியும் ஏதோ சந்தர்ப்பவசத்தால் என் படத்தில் நடிக்க முடியாமல் போனவர்கள்! காலத்தின் சுழற்சியில் ஏற்படும் மாறுதல்களைப் பாருங்கள்!

தமிழில் ஹீரோ சிவாஜிதான் என்றாலும் ஹீரோயின் தேட வேண்டியதாகி விட்டது. ஹேமமாலினி இந்தியில் மட்டும் தாம் நடிப்பதாகவும் தமிழுக்கு வேறு யாரை யாவது போட்டுக் கொள்ளுமாறும் கூறி விட்டார். அப்போது பல புகைப்படங்களைப் பார்த்து நான் தேர்ந்தெடுத்த பெண் பத்மலோசனி. அவருக்குப் ''பத்மப்ரியா'' என்று புதுப் பெயர் சூட்டினேன்.

''ஹீரோ - 72'' ஹிந்தியில் மளமள வென்று வேலை நடந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த அளவுக்குத் தமிழில் வேகமாக வளரவில்லை. காரணம், எங்கள் தேவைக்கேற்ப சிவாஜியால் கால்ஷீட் தர முடியவில்லை. அவர் ஏராளப் படங்களில் நடித்துக் கொண்டிருந்த காலகட்டம் அது.. அவரிடமும், அவர் கால்ஷீட்களைக் கவனித்துக் கொண்டிருந்த தம்பி ஷண்முகத்திடமும் என் பிரச்னைகளைக் கூறி விட்டுத்தான் படப்பிடிப்பை ஆரம்பித்திருந்தேன். ஆனாலும் ஹிந்திப் படம் ஏறத்தாழ முடிவுறும் நிலையில், தமிழ்ப்படம் பாதி அளவுதான் வளர்ந்திருந்தது! தமிழ்ப் படம் முடியக் காத்திராமல் ஹிந்தி படத்தை உடனே ரிலீஸ் பண்ணுமாறு விநியோகஸ்தர்கள் வேறு என்னை வற்புறுத்தினர். இப்போது என்ன செய்வது?

படங்கள் : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

(சென்ற இதழில் ''மேரா நாம் ஜோக்கர்'' படத்தை ராஜ்கபூர் எடிட் செய்து 22,000 அடியாகக் குறைத்தார் என்று திருத்தி வாசிக்கவும். 27,000 அடி அல்ல.)



* ''அலைகள்'' படத்தில் ஒரு காட்சி



# போலீஸார் செய்த திருட்டு!

'ஒற்றுமையால் உண்டு பலன்' என்று நிரூபித்தனர், பம்பாயிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் பயணிகள். சுதந்திர தினத்தன்று, எல்லாச் சோதனைகளுக்குப் பிறகு விமானத்தில் ஏறிய மூன்று பயணிகள், தங்கள் உடைமைகளிலிருந்து மூன்று தங்கக் காசுகள், 250 சவுதி ரியால் மற்றும் 400 ரூபாய் மாயமாய் மறைந்திருப்பதைக் கண்டனர். இதன் தொடர்பாக நிறையப் பயணிகள் விமானத்தில் ஏற மறுத்தனர். உடனே உயர்மட்ட போலீஸ் அதிகாரிகள் விரைந்து வந்து விசாரணை செய்தபின், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், மூன்று கான்ஸ்டபிள்கள் ஆகியோரிடமிருந்து அப் பொருட்களை மீட்டனர். குற்றம் செய்த நால்வரையும் தாற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளனர். மூன்று மணி நேர தாமதத்திற்குப் பிறகு விமானம் கிளம்பியது. இதன் காரணமாக ஒரு விசேஷ காவல் படை சாண்டாக்ரூஸ், சஹார் விமான நிலையங்களில் இனி செயல்படும்.

## பரபரப்பூட்டும் குடிநீர்!

ஓடும் ரயில்களில் இங்கு சர்வ சாதாரணமாகப் பேசப்படும் விஷயங்கள் ஸ்டாக் மார்க்கெட் பற்றியோ, சினிமா நட்சத்திரங்களைப் பற்றியோ அல்லது கிரிக்கெட் பற்றியோதான். ஆனால் இவ் வருடம் ஒரு மாறுதல். பேசப்படும் விஷயம் தண்ணீர். எந்த வருடமும் இல்லாத வழக்கமாகச் செய்தித்தாள்களும் தினசரி ஏரிகளின் தண்ணீர் அளவுகளைப் பட்டியலிடுகின்றன. ஜூன் 11 ஆரம்பித்திருக்க வேண்டிய பருவ மழை, இரண்டு மாத காலம் தாமதமாக ஆரம்பித்தாலும் நன்றாகப் பெய்ததால் நகருக்குக் குடிநீர் வழங்கும் வைத்தாரணா, துள்சி ஆகிய இரு ஏரிகளும் நிரம்பி விட்டன. சீக்கிரமே மீதமுள்ள மற்ற இரு ஏரிகளும் நிரம்பி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## இடம் மாறும் அஸார்!

இந்திய கிரிக்கெட் காப்டன் அஸாருத்தீன் பம்பாய்வாசியாகிறார். இவர் ஏர் இந்தியாவின் பொதுத் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு நடைபெறும் 'காங்கா லீக்' மேட்சுகளில் இனி ஏர் இந்தியாவின் வெற்றி உறுதி. ஏனெனில் இதில் ஏற்கெனவே சஞ்சய் மஞ்ரேக்கரும், ப்ரவீன் ஆம்ரேயும் உள்ளனர். சுழல் பந்து வீரர் வெங்கடபதி ராஜுவும், வேகப் பந்து வீச்சாளர் அதுல் வாசனும் கூடிய சீக்கிரம் இதில் சேர இருக்கின்றனர். பம்பாயில் இருந்தாலும், ரஞ்சிக் கோப்பைக்காக அஸார் ஹைதராபாத்துக்காகத்தான் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய 'மறதி'த் துறை!

ஒரு காலத்தில் நன்கு மதிக்கப்பட்டு வந்த மத்திய புலனாய்வுத் துறை (C.B.I.) இப்போது மறதித் துறையாக மாறி வருகிறது. கடந்த மாதம் விசாரணைக்காக ஹர்ஷத் மேத்தாவை பம்பாயிலிருந்து டெல்

* அஸார் : பம்பாய்வாசியாகிறார்



லிக்கு அழைத்துச் சென்ற போது, கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டிய எப். ஐ. ஆர். பம்பாயிலேயே மறதியாக நின்று போனது. ஹர்ஷத் மேத்தாவின் விமான ரிடர்ன் டிக்கெட்டும் மறதி காரணமாக இந்தியன் ஏர்லைன்ஸ் கவுண்டரிலேயே இருந்து விட்டது. இந்த சூப்பர் போலீஸின் மறதியால் இரண்டும் அடுத்த விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டன!

## குறுக்கெழுத்து மோகம்

தினப் பத்திரிகைகள், முக்கியமாக செய்திகள் அறிய வாங்கப்படுகின்றன. இது உண்மையா? 'இல்லை' என்கின்றனர் பம்பாய் லோக்கல்களில் பயணம் செய்வோர். பெரும்பான்மையோர் செய்தித்தாள்கள் வாங்குவதின் நோக்கம் அதிலுள்ள குறுக்கெழுத்து (ஆங்கிலமோ, ஹிந்தியோ) மற்றும் காமிக்ஸ் பகுதிகளைப் படிப்பதே. நின்று கொண்டே கூட குறுக்கெழுத்துப் போடுவது என்பது இவர்களின் இயல்பாகவே ஆகி விட்டது. இப்போது மராத்தியிலும் குறுக்கெழுத்து வர ஆரம்பித்து விட்டது. செய்திக்காகப் பத்திரிகை என்பது போய், குறுக்கெழுத்துக்காகப் பத்திரிகை என்னும் ரீதியில் பத்திரிகைகளின் விற்பனை நடக்கின்றன. உதாரணமாக ஷப்த கோத், டைம்பாஸ், அர்தாத் [Shabd kod, Time-pass, Arthat) என்னும் ஒவ்வொரு நாளேட்டிலும் ஐந்து குறுக்கெழுத்துப் போட்டிகள் வெளியாகின்றன. முதல் பரிசு 500 ரூபாய். இப்போது இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியிலும் குறுக்கெழுத்துப் போட்டி வெளியாக ஆரம்பித்து விட்டது!

## பாழ்படும் நினைவாலயங்கள்

'தியாகிகளுக்காக நினைவாலயங்கள் கட்டுகிறோம்' என்று அரசியல்வாதிகள் பல லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்துக் கட்டுகின்றனர். ஆனால் அவை சரியான முறையில் பராமரிக்கப்படாததால் நாளடைவில் சிதைந்து விடுகின்றன. 1982-ல் அந்துலே முதலமைச்சராக இருந்த போது 204 நினைவாலயங்கள் கட்டப்பட்டன! இன்று இவற்றில் பாதி கூடக் கண்கொண்டு பார்க்கும் நிலையில் இல்லை. மக்களிடம் விழிப்புணர்ச்சியைத் தூண்டுவதற்குப் பதில் இவை வெறுப்புணர்ச்சியையே தூண்டுகின்றன.

## தாடி மர்மம்!

பிரபலங்கள் என்ன செய்தாலும், செய்யாவிட்டாலும் அது செய்தியாகி விடுகிறது! சமீபத்தில் அமிதாப்பச்சன் ஷேவ் செய்யாமல் தாடியுடன் காட்சி தருவது ஒரு செய்தி. இதைப் பற்றிப் பலவாறாகப் பேசப்படுகிறது. ஹீரோ வேடத்தை விட்டு விட்டு அப்பா வேடத்தில் நடிக்கப் போவதன் ஆரம்பம் என்றும் அவர் வேதாந்தியாகப் போகிறார் என்றும் பேசப்படுகிறது. ஆனால் எல்லோருக்கும் இதுவரை புரிபடாத மர்மம், அவர் தாடி வெள்ளையாக இருப்பது ஏன்?

– அம்ருதா பார்த்தசாரதி

## அடுத்த இதழில்...

●● கண் கவர் பிளாஸ்டிக்கால் மண்ணுக்கு அபாயமா?
– கவர் ஸ்டோரி

●● பயங்கரவாதிகளின் மத்தியிலும் பாதுகாப்பாகவே உணர்ந்தேன்!
– டெல்லி பத்திரிகையாளர் பேட்டி




இனி ஒரு சதி
7
கதை: பத்மா ரவிசங்கர்
படம்:
கடைக்காரர் தொடர்ந்து...
யாருக்கும் அந்தக் கெமிக்கல் ஷாப்ல விற்கக் கூடாதுன்னு அரசு உத்தரவு...
ஐ-ஸீ...
அதே சமயம் லேப் ரிப்போர்ட்டை ஆராய்ந்த கார்த்திகேயன் — ஆராவமுதன்...
ஸோ! சூப்புல தான் விஷம்!
பட்லர் விசுவாசமானவன்னு வெச்சுக்கிட்டா கேஸ் மேலும் குழப்பம்.
அப்போ டைனிங் டேபிள்ள தான் யாரோ ரகசியமா சூப்புல பாய்ஸன் சேர்த்திருக்காங்க!
எல்லார் முன்னாலேயும் எப்படிங்க விஷத்தைச் சேர்க்க முடியும்?
அதைத்தான் யோசிக்கணும்...
...கிரைம் ப்ராஞ்ச் ஸி.ஐ.டி. மூலமா அவங்க ஒவ்வொருத்தரோட கடந்த கால ஜாதகத்தையும் அலசிடுங்க. அர்ச்சனாவைக் கூட விடாதிங்க...


ஃபோன் ஒலிக்க...
வக்கீல் விக்ரம் தானே? டெல்லிலேர்ந்து வந்துட்டீங்களா? குட். இதோ புறப்பட்டு வரோம்.
வாடி மெலிந்து வந்த சந்திர சேகர்முன் யுவராஜ்...
இன்னிக்கு நம்ம கம்பெனி ஆடிட் முடிஞ்சது பாஸ். வழக்கம் போலவே நல்ல லாபம்...
விஸ்வமும் பட்லரும் மறைந்திருந்து கவனிக்க...
...அப்புறம் அந்த ஏற்காடு எஸ்டேட் வாங்கியாச்சு...
பாஸோட மூளையை மழுங்க அடிச்சுட்டுக் கணக்கா ஒப்பிக்கிறே ராஸ்கல்!
யுவராஜ் நிலைகுலைந்து...
எவ்வளவு கம்பீரமா உலவினீங்க; உங்களுக்கா இந்தக் கதி?
திருட்டுப்பய, என்னமா நடிக்கிறான்!
அன்றிரவு பாலாஜி...
இன்ஸ்பெக்டர் ஐயாவா... நீங்க சொன்னபடியே எல்லாரையும் கவனிச்சுக்கிட்டு வரேன். யுவராஜ் தான் வித்தியாசமா நடந்துக்கறாரு. எனக்குப் பயமா இருக்கு...
தொடரும்

●● பாரதி பற்றிய பின் வரும் நூல்களைப் படிக்க ஆசை. 1) வி.ஓ.சி. கண்ட பாரதி - வ.உ. சிதம்பரம் பிள்ளை; 2) என் குருநாதர் பாரதியார் - ரா. கனகலிங்கம்; 3) பாரதி பிறந்தார் - அமரர் கல்கி. விலைக்கோ அல்லது படித்து விட்டுத் திருப்பித்தரவோ கொடுத்து உதவ விரும்புவோருக்கு விலாசம் :

**கோ. தேவராஜன்,**
**189/3 C.D.J. இல்லம்,**
**மதராஸ் ரோடு, பண்ருட்டி - 607 106.**

●● முந்திரி தொழிலுக்கு, தொழிற்சாலைக்கு இடம் தேர்வு செய்யவதிலிருந்து, இயந்திரங்கள் நிறுவுதல், கொள்முதல் செய்தல், பதப்படுத்தி விற்பனை செய்தல் என்று அனுபவத் தொழில் நுட்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**என். சோமசுந்தரம்,**
**30, 7வது கிராஸ், 7வது மெயின்,**
**ஸ்ரீநிவாசநகர், புதூர், திருச்சி - 17.**



# பாலம்

●● ஆனந்தவிகடனில் வெளி வந்த படக்கதை, "துப்பறியும் சாம்பு" சேர்த்து பைண்டு செய்து வைத்திருப்பவர்கள் எழுதவும். படித்துத் திருப்பித் தரக் கட்டணம் செலுத்தத் தயார். அல்லது விலைக்கும் வாங்கிக் கொள்கிறேன்.

**டி.எஸ்.எஸ். மணி,**
**பிளாட் 53, 3 ம் தெரு,**
**ராம்நகர், தஞ்சை - 7.**

●● 1959 - ம் ஆண்டு முதல் என் சிறுகதைகள் கிட்டத்தட்ட ஆயிரத்துக்கு மேல் பல்வேறு பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இதுவரை ஒரு தொகுதி கூட புத்தகமாக வெளி வரவில்லை. விருப்பம் உள்ளோர் அணுகவும்.

**"அன்னம்", கே. விசுவநாதன்,**
**25, சித்திரகலா காலனி,**
**திருநகர், மதுரை - 6.**

●● ஸ்பின்னிங் மில்லுக்குத் தேவையான உபபொருட்களில் ஒன்று ரோலர்கள். Buffing and remounting செய்யும் இயந்திரம் இயக்குபவனாகப் பணிபுரிந்து வருகிறேன். இத்தொழிலை இப்போது சுயமாக நடத்த விரும்புகிறேன். இதற்கு யாரேனும் ரூ 25,000 முதலீடு செய்தால் மாதம் ரூ 6000 சம்பாதிக்க வழியுள்ளது. என்னைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர் அணுக முகவரி.

**எம். கனகராஜ்,**
**C/o. ஆறுமுக நாடார்,**
**திருச்சி டைபாஸ்,**
**ஜாரி கொண்டலாம்பட்டி அஞ்சல்,**
**சேலம் - 10.**

●● கனடா நாட்டின் தற்போதைய ஆட்சிமுறை, அரசியல் அமைப்பு, பண்பாடு, கலாசாரம், கற்றுலா இடங்கள் போன்றவை பற்றி அறிந்து கொள்ள விருப்பம். தொடர்பு கொண்டு உதவ விலாசம்.

**எஸ். செந்தில் குமார்,**
**12-A, செட்டி தெரு,**
**கரம்பக்குடி அஞ்சல்,**
**புதுக்கோட்டை (மாவ) 622 302.**

●● யோகா மூலம் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த இலவசப் பயிற்சியும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**கே.எஸ். லட்சுமி நாராயணன்,**
**4/229, காந்தி வீதி,**
**காந்திநகர் கிழக்கு, வேலூர் - 632 006.**

●● 1975 - ல் நான் எழுதிய "பதிவிரதை", "என் சிந்தனைகள்" ஆகிய இரு நூல்களும் என்னிடம் இல்லை. மறுபதிப்புக்குத் தேவை. வைத்திருக்கும் அன்பர்கள் உதவினால் மறு அச்சு ஆனதும் புதுப்பிரதிகள் அனுப்புவேன்.

**ராவன்னா,**
**கண்மணி பதிப்பகம்,**
**A-3, ஆனந்தம்மாள் தெரு,**
**சந்திரசேகர் அவென்யு, சென்னை - 96.**

●● ஆயிரக்கணக்கில் எல்லா நாட்டுத் தபால் தலைகளும் முதலுறைகளும் உள்ளன. பல, நூறு வருடங்களுக்கு முற்பட்டவை. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்க.

**கே. பலராம்,**
**24, வசந்தா அவென்யு,**
**எம்.ஆர்.சி. நகர், சென்னை - 600 028.**

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பேற்க இயலாது.)

# பழைய நினைவுகளை அசைபோட வைத்தது!

◆ ‘கட்சித் தாவலும் கோஷ்டிப் பூசலும்’ - கருத்தாழம் மிக்க தலையங்கம். வோட்டு வாங்கும் போது ஒரு கட்சி, ஆதாயம் கருதி அடுத்த கட்சி என்று நிறம் மாறும் ‘வித்தகர்களை’ அடையாளம் கண்டு கொள்ளச் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டியது அவசியம்.
நாமக்கல், சி.சா. விஜயன்.

◆ ஸ்பிக் நிறுவனத்தின் இருபதாண்டு வளர்ச்சியையும், உற்பத்திகளையும் இரண்டு பக்கங்களில் இரத்தினச் சுருக்கமாக விளக்கிய அழகே அழகு!
சென்னை - 17,
ஜெயந்திகனேஷ்.

◆ ‘டொனேஷன் வாங்காத கல்லூரி’ கட்டுரையைப் படித்ததும் இரண்டு மூன்று முறை என்னையே நான் கிள்ளிக் கொண்டேன். கட்டுரை உண்மையே என்று உணர்ந்தேன். ‘கல்லூரியிலுள்ள அத்தனை வகுப்புக்களையும் ஏர்கண்டிஷன் செய்வதாக இருந்தால் கூட ஆண்டு தோறும் டொனேஷன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை’ என்கிறாரே சொக்கலிங்கம், அவர் உண்மையிலேயே சொக்கத் தங்கம்.
ஈரோடு, டி. சௌந்தரராஜன்.

◆ எனது சொந்த ஊரான தூத்துக்குடி நகரச் சிறப்பிதழ் அருமையாக இருந்தது. பழைய நினைவுகளை அசைபோட வைத்தது.
பெங்களூர் - 8,
ப.அ. வைத்தியநாதன்.

◆ ‘வாசியாருக்கு வாசிக’ என்ற தலைப்பில் பார்வதி கணேசன் பற்றியும், அருணாசலம் பற்றியும் படித்துவிட்டு அசந்து போய்விட்டேன்.
கொளப்பாடு,
எஸ். சரவணன்.

◆ தூத்துக்குடியின் தொழிற் செல்வங்களுள் இறால் மீன் வளர்ப்பு பற்றியும் அதன் உலக மதிப்பு பற்றியும் மிக அழகான கட்டுரையாகக் கொடுத்த உங்களுக்கு என் பாராட்டுக்கள்.
ஈரோடு,
என். ரஜினிதேவராஜ்.

◆ ‘சின்னம்மா வீடு’ சிறுகதையில் வரிக்குவரி இயற்கையை அழகாக வர்ணனை செய்திருக்கிறார் ஆசிரியர்.
போடிநாயக்கனூர்,
ரா. நாச்சிமுத்து.

◆ தங்கம் பெறாமல் போனதற்கான அடிப்படைக் காரணங்களைத் "தங்கப் பதக்கத்துக்குத் தயார் படுத்துங்கள்" கட்டுரை மூலம் அழகாக, சம்பந்தப்பட்டவர்களுக்குப் புரியும் வண்ணம் கூறி விட்டீர்கள்!
குடந்தை, மு. அய்யூப்கான்.

◆ தியேட்டரில் நடக்கும் முறைகேடுகளைக் களையச் சொன்னால், மக்களைப் படம் பார்க்காமல் இருக்கச் சொல்லும் கலெக்டர், ரேஷன் கடையில் எடை குறைவாகப் போடுவதாகச் சொன்னால் யாரும் ரேஷன் வாங்க வேண்டாம் என்பாரா?
தஞ்சாவூர் - 7,
வளர்மதி ஆசைத்தம்பி.

◆ உப்புப் பெறாத விஷயம் என்று எழுத்தாளர்கள் எழுதி விடுகிறார்கள், எளிதாக. ஆனால் உப்பில் இத்தனை விஷயங்கள் இருக்கின்றன என்ற போது உண்மையில் வியந்து போனேன்.
புத்தாம்பூர்,
இரா. செல்வபாண்டியன்.

◆ ஒரு கலைஞனின் எண்ண வெளிப்பாடுகளை அழகாகவும், அற்புதமாகவும் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ‘மனப்பாலம்’ சிறுகதை ஆசிரியர்.
வயலோகம், எஸ். குருசேகர்.

◆ "போஸ்னியா" செய்திக் கட்டுரை நடுங்க வைத்தது. மனித நேயம் என்ன விலை என்று கேட்கும் நிலை உள்ள வரை, இம்மாதிரி கொடூரத் தன்மை உலகை உலுக்கிக் கொண்டேதான் வரும்.
ஈரோடு, டி. சந்திரன்.

◆ பொறுப்பற்ற அரசு அதிகாரிகளின் செயல்கள் தவிர, கட்சிக்காரர்களே தமக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்று மனம் திறந்து பேசியுள்ள எம்.எல்.ஏவின் பேட்டியைப் படித்த பிறகு அவர் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தானா என்று சந்தேகம் ஏற்பட்டது.
கோவை, சீ. சுந்தரேசன்.

◆ தூத்துக்குடி எம்.எல்.ஏ தமது பேட்டியில் "என் கட்சிக்காரர்களே எனக்கு எதிராக இருக்கிற போது" என்று வார்த்தைக்கு வார்த்தை கூறியுள்ளார். இந்த நிலைமை இவருக்கு மட்டும் இல்லை; இன்றைக்குப் பெரும்பான்மை அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களுக்கும் இக்கதிதான் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், 1) எம்.எல்.ஏ வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கட்சிக்கும், தொகுதிக்கும் சம்பந்தமில்லாதவர் (வேறு பகுதி, குறிப்பாக சென்னையில் செட்டில் ஆனவர்கள்). 2) பெரும்பாலும் குறுக்கு வழியில் சீட்டு வாங்கியது. இனிமேலாவது இதுபோன்ற பிரச்னைகள் உருவாகாமல் இருக்க, அடுத்த தேர்தலிலாவது முறையாக வேட்பாளர்களைத் தேர்வு செய்து, மக்களுக்குப் பயன் தரத் தக்க வகையில் பணிகள் மேற்கொள்ள அ.தி.மு.கவினர் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம்.
உசிலை, பொன். காசி.

◆ பத்துப் பைசா செலவு இல்லாமல் தூத்துக்குடியில் முத்துக் குளித்தோம்! ‘மாதம் ஒரு நகரம்’ - பகுதி எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பது நன்றாகப் புரிகிறது!
சிதம்பரம், ரா. கருணாகரன்.

# கருணாநிதியின் எதிர்காலம் யார் கையில்?



✱ எதிர்காலம் யாரிடம்?

● முக. தி. க. பாலசுப்பிரமணியன், லால்குடி.

? ''நீங்கள் வரும் வழியில் நாங்கள் விரித்திருப்பது செப்புக் கம்பளங்கள் அல்ல; எங்கள் ஈரம் காயாத இதயங்கள்'' என்று அரங்கநாயகம் விளம்பரப்படுத்தியிருக்கிறாரே?

! இவர்களின் இதயங்களை ஜெ காலடியில் போட்டு மிதிப்பதாக சூசகமாகச் சொல்கிறாரோ! இந்த அளவுக்குத் தைரியமா! அதிசயம்தான்!

● ஏ. ஜஹ்பர் காதர், அரியநாயகிபுரம்.

? ரஜினி, கமல், ஸ்ரீதேவி போன்ற பிரபல நட்சத்திரங்கள் வருமான வரி பாக்கி வைத்துள்ளனரே?

! பின்னே, அன்றாடங் காய்ச்சிகளா வருமான வரி பாக்கி வைக்க முடியும்? நிறைய சம்பாதிப்பவர்களுக்குத்தான் அது சாத்தியம்!

● தா. செல்வராசன், பாண்டிச்சேரி.

? ஜால்ரா போடுவது நல்லதற்கா?

! மார்கழி மாதம் என்றால் நல்லதற்கும் இருக்கலாம். பன்னிரண்டு மாதமும், 365 நாட்களும் என்றால் கேலிக்கூத்து!

● பாக்கியமுத்து, திருச்சி.

? யாரை நினைத்தால் உமக்குக் கவலையாயிருக்கிறது?

! வேறு யாரை? அரசியல்வாதிகள் யாருமே கவலைப்படாத ஸ்ரீமான் பொது ஜனத்தை எண்ணித்தான்!

● த. குணசேகரன், ஈரோடு.

? ''காங்கிரஸ் கட்சியை யாருமே அடக்கி ஆள முடியாது'' என்று திண்டிவனம் ராமமூர்த்தி கூறியிருக்கிறாரே?

! 'காங்கிரஸ் தலைவர்களாலேயே' என்றும் அவர் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

● எஸ். நாரம்புநாதன், அரக்கோணம்.

? கருணாநிதியின் எதிர்காலம் யார் கையில் இருக்கிறது?

! அவர் தாம் யாருக்காக உயிரை விடத் தயாராக இருப்பதாகக் கூறுகிறாரோ, அந்த உடன்பிறப்புக்கள் கையில்தான்.

● கா. பா. கணேஷ்பாபு, பெங்களூர்.

? ஜோசியம் என்பதன் அடிப்படை கடவுள் நம்பிக்கைதானே! பின் ஏன் கல்கி ஜோசியத்தை மறுக்கிறது?

! கடவுள் நம்பிக்கை என்று கூறிக் கொண்டு நடக்கும் எல்லாக் காரியங்களையும் எல்லோரும் ஏற்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆண்டவன் பெயரைச் சொல்லி பலிகொடுக்கிறார்கள்; தங்களைத் தாங்களே சித்திரவதை செய்து கொள்ளுகிறார்கள். இவையெல்லாம் பகுத்தறிவுக்குப் பொருந்தாதவை. ஜோசியத்தைப் பொருத்தமட்டில் ''கல்கி'' அதை வெறுக்கவும் இல்லை மறுக்கவும் இல்லை. 'நமக்கு வேண்டாம்' என்று ஒதுக்கினார். அதைத்தான் கல்கி இன்றும் பின்பற்றுகிறது. ''என் எதிர்காலம் மோசமானதாய் இருந்தால் அது குறித்து இப்போதே நான் கவலைப்படத் தயாராயில்லை; நல்லதாய் இருந்தால் அதை இப்போதே அறிந்து கொண்டு விட அவசியம் இல்லை. நல்லது நடக்கும் போது அது எதிர்பாராத மகிழ்ச்சியாகவே இருந்து விட்டுப் போகட்டும்'' என்று கருத்துப்பட எழுதினார் ''கல்கி''. கடமை வீரர்களாக இருக்கவே கற்றுக் கொடுத்தார்.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? கருணாநிதி பிழை செய்தது நிரூபிக்கப்பட்டு விட்டது மாதிரி தராசு பதிலளித்திருப்பது வியப்பளிக்கிறது?

! அப்படி நீர் அர்த்தம் செய்து கொண்டதுதான் எனக்கு வியப்பு. கருணாநிதி 'ஜெ' மீது ஏராள குற்றச்சாட்டுக்களை ஒன்றன் பின் ஒன்றாகச் சுமத்தப் போக, அதன் எதிர்விளைவுதான் விசாரணைக் கமிஷனும் குற்றப்பட்டியலும் என்பதே நான் கூறியிருப்பது.

✱ வருமான...



✱ வரி...



✱ ...பாக்கி!






* பூனையும் கருவாடும்



* அடக்கி ஆள முடியாது!



* மதம் சாயாத இதயம்!

● ஆர். விஜி, சென்னை.

? தியாகிகள் ஜெயலலிதாவிடம் பண முடிப்பும் பெட்டிகளும் பெற்றுக் கொண்டது பற்றி?

! தியாகத்துக்குக் கூலி பெற்று விட்டால் அதன் பெயர் தியாகம் அல்ல. ஒரு வேளை இவர்கள் தங்கள் தன்மானத்தையும் சேர்த்துத் தியாகம் பண்ணத் துணிந்து விட்டார்களோ என்னவோ!

● ஆர். பிரகாசம், நல்லாலம்.

? இரண்டு காகங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் அதிர்ஷ்டம் என்பது உண்மையா?

! ஊஹூம், இரண்டு கரங்கள் இருப்பதை உணர்ந்தால் அதிர்ஷ்டம்.

● லல்லி பாலகிருஷ்ணன், மதுரை.

? "பூனை கருவாடை வெறுத்தது போன்று தி.மு.க.வினர் விடுதலைப் புலிகளை வெறுத்ததாகக் கூறுகின்றனர்" என வாழப்பாடியார் கூறியுள்ளாரே?

! இவரும் இவரது காங்கிரஸ் தலைவர்களும் பூனைகளாக இருந்து, அதே கருவாட்டைச் சுவைத்தவர்கள்தாம். ராஜீவ் கொலைக்குப் பிறகுதான் நாற்றமாய் உணர்கிறார்கள்.

● இந்திரா கோபாலன், திருச்சி.

? ஸ்ரீரங்கம் முனீசுவரன் கோவிலுக்கு ஆடி மாதம் ஆடுகள் பலியாகும் கோர சம்பவம் பற்றி...?

! அதைவிடக் கோரம் நடவடிக்கை எடுத்து, அரசு இதையெல்லாம் தடைசெய்யாததுதான்.

● இரா. சம்பத்குமார், இராசிபுரம். ❑

? எல்லா அரசியல் தலைவர்களும் "சமூக நீதி" என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

! அது ஒரு பச்சோந்தி. ஒவ்வொரு தலைவரும் தத்தமது கொள்கைக்கு ஏற்ப, "அதுதான் சமூக நீதி" என்பார். மெய்யான சமூக நீதி என்பது அனைவருக்கும் சிறந்த பாடத்திட்டத்துடன் கூடிய, வாழ்க்கைக்குப் பயன்படுகிற, பண்பாட்டை வளர்க்கிற நல்ல கல்வி வழங்குவதுதான். இந்த அடிப்படை சமூக நீதி ஏற்பட்டு விட்டால் மற்ற எல்லா அம்சங்களிலும் சமூக நீதி கிடைத்து விடும்.

● வி. ஆர். கே., சிதம்பரம்.

? அர்ஷத் மேத்தா சலுகை கிடைக்கலாம் என்று எண்ணி அறக்கட்டளைக்குக் கொடுத்த பணத்தை திருப்பதி உண்டியலில் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பணத்துடன் தராசு ஒப்பிடல் எப்படி சரியாகும்?

! அநியாய முறையில் பணம் ஈட்டியவன் அதில் ஒரு பகுதியைத் திருப்பதி உண்டியலில் போடும் போது சலுகை எதிர்பாராமலா செய்கிறான்? 'செய்த பாவத்துக்குப் பரிகாரம் பண்ணிட்டேன்' என்று ஆண்டவனிடமே சலுகையைத்தான் கோருகிறான். கறை படிந்த பணம் என்றாலும் தேவஸ்தானத்தின் நற்பணிகளுக்குப் பயனாவதுதான் திருப்தி அளிக்கும் விஷயம்.

* நல்லிதயம் பி. என். வி.



● ஆர். கே. லிங்கேசன், பள்ளம்.


? "சால்ஜாப்பு" என்கிறாங்களே அப்படின்னா என்னங்க?

! ஓர் உதாரணம் சொல்கிறேன். இந்தக் கல்கி நிறுவனத்தின் பாலன்ஸ் ஷீட் (வருடாந்திரக் கணக்கு அறிக்கை) இடையில் சில காலம் மிக மோசமாக இருந்தது. அதை மேம்படுத்த உதவ வேண்டும் என்று கோரிப் பல வங்கிகளை அணுகினோம். நவீன அச்சு இயந்திரம் வாங்கக் கடன் தந்தால் நிறுவனத்தின் வருவாய் அதிகரிக்கவும் நிதிநிலைமை அபிவிருத்தி அடையவும் வழியுண்டு என்று எடுத்துக்காட்டினோம். ஆனால் எல்லா வங்கிகளும் "பாலன்ஸ் ஷீட் திருப்திகரமாக இல்லை" என்று (சால்ஜாப்பு) கூறியே கைவிரித்தன. அதை மேம்படுத்தத்தான் கடன் கேட்கிறோம் என்றதை அவை ஏற்கவில்லை. புரிந்து கொண்ட ஒரே மனிதர் பி. என். வேங்கடராமன். அவர் பணியாற்றி வந்த பாங்க் ஆஃப் தமிழ்நாடு சேர்மனிடம் அவர் நிலைமையை விளக்க, கடன் கிடைத்தது. அதுவே இந்த நிறுவனத்துக்கு ஒரு திருப்பு முனையாகவும் அமைந்தது. விசனம் என்னவென்றால், சால்ஜாப்பு கூறாமல் எங்களுக்கு மட்டுமின்றி இன்னும் எத்தனையோ பேருக்குத் தமது நீண்ட கால வங்கிப் பணியில் உதவிய பி. என். வி. என்ற நல்லிதயம் அண்மையில் இறைவனடி சேர்ந்து விட்டதுதான்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
இரா. சம்பத்குமார்,
கணக்கு ஆய்வாளர், வருவாய் பிரிவு,
தமிழ்நாடு மின்வாரியம்,
இராசிபுரம் – 637 408.

அட, அப்படியா!


# நாய்களின் அபார நினைவாற்றல்!



!! ஈக்கள் ஒரு பின்னோக்கிய பாய்ச்சலுடன்தான் பறக்கத் தொடங்குகின்றன.

!! பூரானின் நீண்ட உடல் பல சிறு பகுதிகளாலானது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஜதைக் கால்கள்.

!! கொசுவின் முன் தலையிலுள்ள உணர் கொம்புகள் (antenna), ஒரு டிகிரி ஃபாரன்ஹைட் வெப்பத்தின் நாலாயிரத்தில் ஒரு பங்கு அளவினைக் கூட துல்லியமாக உணரக் கூடியவை.



!! எறால்களின் ரத்தம் நீல நிறமாய் இருக்கும்.

!! நத்தைகள் மூன்று - நான்கு வருடங்கள் வரையில் சேர்ந்தாற்போல் உறங்கவல்லவை. அவை பிளேடின் முனையில் ஊர்ந்து சென்றாலும் அவற்றின் உடலுக்குச் சேதம் ஏற்படாது. குண்டூசித் தலை அளவில் முப்பது முட்டைகளை ஒரு நத்தை ஓர் ஆண்டில் இடும்.

!! பட்டுப் பூச்சிக்குப் பன்னிரண்டாயிரம் கண்கள்.

!! தும்பிப்பூச்சி ஒரு பொருளின் 25,000 பிம்பங்களை ஒரே சமயத்தில் காண்கிறது.

!! ஐந்து மாடிக் கட்டடத்திலிருந்து கீழே விழும் பெருச்சாளி காயமின்றித் தப்பவல்லது. ஒரு ஜதை பெருச்சாளிகள் ஒரே ஆண்டில் 15,000 சந்ததிகளை உருவாக்கும்.

!! 'கோகோ' என்ற பெயருடைய பெண் கொரில்லாவுக்குப் 'பேச'க் கற்றுக் கொடுத்தார் அமெரிக்கப் பெண்மணி ஒருவர். சைகை மொழியால் மூன்று வயது கோகோ 184 வார்த்தைகள் பேசியது. ஆறரை வயதில் 645 வார்த்தைகள் பேசியது.

!! வாசனை உணரும் திறன், மனிதர்களை விட நாய்களுக்கே அதிகம். காலடித் தடங்களையும் கை ரேகைகளையும் முகரும் நாய் அந்த வாசனைகளை ஆறு வாரங்கள் வரை மறக்காது.

!! 'பீவர்' (beaver) என்ற விலங்கு தன் வாலைச் சேமிப்புக் கிடங்காகப் பயன்படுத்துகிறது. உணவு கிடைக்கும் கோடைக் காலத்தில் உபரியாக உண்டு, கொழுப்புச் சத்தை வாலில் சேமிக்கிறது. குளிர் காலத்தில் உணவு கிடைக்காத போது, அதன் உடல், வாலிலிருந்து சத்தைக் கிரஹித்துக் கொள்கிறது. வாலும் மெலிதாகிறது!

தொகுப்பு : உதய்லால்


பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

# வீட்டின் அழகு கதவில் தெரியும்!

## விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட

# மாயூரம் டிம்பர்

## கதவுகள்



அழகானவை,
உறுதியானவை,
நீடித்து உழைப்பவை!
காரணம்?

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
நவீன ஆலைகளில் ஈரப்பதம் 80% லிருந்து
14% ஆக குறைக்கப்படுகிறது.
இது மரம் வளைந்து முறுக்காமல் தடுக்கிறது.
மரத்திற்கு இரசாயன கலவை பாதுகாப்பு
அளிப்பதால் கரையான் அரிப்பதை தடுக்கிறது.
தச்சு வேலை இயந்திரத்தில் செய்யப்படுவதால்
கதவுகள் நேர்த்தியாக அமைகின்றன.

Avoid spending Time & Money to achieve a substitute Come, Select & Place your order at:

# MAYURAM TIMBER

## & GENERAL TRADING CORPN.

**SHOW ROOM: 13, Rameswaram Road, T. Nagar, Madras-600 017, Telephone: 445207.**

**H.O. 83, G.S.T Road, Tambaram-600 045. Telephone: 465297**

# MAYAVARAM TIMBER DEPOT

**No. 4, Post Office Road, Mayiladuthurai, Qaide Milleth District. Telephone : 3216 •**

Future Ads

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka


திடீரென்று உங்களை உடம்புவலி தாக்கினால்... குடும்பப் பொறுப்பு,
சிரித்துப் பேசி மகிழ்வது, வேலை, எதுவுமே பாரமாகத் தோன்றும்.

# உடம்பு வலியைப் போக்குங்கள் ஜண்டு பாம் தடவுங்கள்.

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.




உடம்புவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் — நடையிலே தளர்ச்சி, நிற்பதிலும் உட்காருவதிலும் சிரமம், போன்றவை. இதில் கவலைப்பட ஏதுமில்லை.

வலியை நீக்கும் ஜண்டு பாமிலே ஆழமாக ஊடுருவி செயல்புரியும் விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன. இவை உடம்புவலி மற்றும் இதர உபாதைகளையும் இழுத்து வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.
இது ஜலதோஷம் மற்றும் தலைவலி போன்ற
உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.

ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

30, 10 மற்றும் 5 கிராம் பேக்கிலே




பாம் ஒன்று
செயல் மூன்று

1. ஜலதோஷம்
2. தலைவலி
3. உடம்பு வலி

AD PALACE/ZPW/144-92/TAM